REGD. NO. M 4392



கல்கி



KALKI ஜூலை 2, 1950 4 அணா

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


Angier's relieves Coughs and Eases Throat and Chest

ஏஞ்ஜியர்ஸ் Angier's நெஞ்சுக் கோளாறுகளை நீக்கி தேகாரோக்கியத்தையும் வலுவையும் அளிக்கிறது

நெஞ்சுக் கோளாறுகளைச் சௌகர்யப்படுத்துவதிலும், உடல் நிறையைக் குறைக்கும் எல்லாவித நோய்களைக் குணப்படுத்துவதிலும் ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsiou) சிறந்தமான வெற்றியடைகிறது. அதிலுள்ள பல விருத்திச் சக்தியோடு மட்டுமல்லாது, வலுவையும், நிறையையும், ஜீரண சக்தியையும் அதிகரிக்கச் செய்ய உதவுகிறது. மேலும் அது ருசிகரமானது.

ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) மிருக எண்ணெய் சேர்க்கப்படாமலும் கைபடாமலும் தயாரிக்கப்பட்டது. ஆகவே எந்த ஜாதியினரும் மதத்தினரும் உபயோகிக்கலாம்.


எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்



ANGIER'S EMULSION

ப்ரூக் லாக்ஸ்

சாக்லெட் மலமிளக்கி



உங்கள் ஆரோக்கியத்திற்கு வேண்டிய முதல் தரமான பேதி மருந்து மாத்திரைகள். செப்பு டப்பியில் கிடைக்கும் ப்ரூக்லாக்ஸையே வாங்கவும்.

2, 8, 24, அடங்கிய வட்டமான சைஸ்களில் கிடைக்கும். பெரிய சைஸ் வாங்குவது மிகவும் சிக்கனமானது.

ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.

WL-3-A

ஏஜண்டுகள்: தி ஓரியண்டல் மெர்க்கண்டைல் ஏஜன்ஸி
99-ஏ. அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்—1

உங்கள்
நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்டகாலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகியிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாய் வைத்திருங்கள்



சிறியோர்
•
முதியோர்
•
நோயாளிகள்

யாவருக்கும்
உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்


ஏஜண்டுகள் :

என். தேசாய் ஒகௌண்டர் & கோ.
41, பந்தர் தெரு — சென்னை

ஜுவல் பதித்த கைக் கடிகாரங்கள்



605 ப்ரைன் ~~25/-~~ 12/-
605 சுபீரியர் ~~36/-~~ 16/8



606 15 ஜுவல் க்ரோம் ~~76/-~~ 38/-
608 15 ,, ரோல்டுகோல்டு ~~86/-~~ 43/-



607 5 ஜுவல் க்ரோம் ~~60/-~~ 29/8
607 5 ,, ரோல்டு கோல்டு ~~70/-~~ 34/8



608 க்ரோம் கேஸ் ~~26/-~~ 13/-
608 உயர் ரகம் ~~30/-~~ 15/-

o•o

தபால் செலவு தனி. இரண்டாக ஆர்டர் செய்வோருக்கு இலவசம்

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA

ரையும் இலங்கையர்களாகப் பதிவு செய்வது மலை போன்ற காரியம். ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தது ஒரு மணி நேரமாவது செலவிட்டு பூர்வோத்திரங்களையெல்லாம் விசாரித்து மனுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்தாக வேண்டும். மனுவுடன் அனுப்பவேண்டிய ஜனன சர்டிபிகேட், கல்யாண சர்டிபிகேட், மைனர் குழந்தை ஒவ்வொன்றுக்கும் ஜனன சர்டிபிகேட், வாச காலத்தை ருசுப்படுத்தும் தஸ்தாவேஜுகள் இவ்வளவையும் அனுப்பியாக வேண்டும். அவ்விஷயத்தில் தொழிலாளருக்கு உதவி அவசியமாயிருக்கும். இந்தச் சமயத்தில் தொண்டர் படையை நிறுவத் தலைவர் ஸ்ரீ ராஜலிங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது.

ஏழைகளுக்கு ரேடியோ

அதிகப் பணம் செலவு செய்து ரேடியோ வாங்கி வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமையில் இல்லாதவர்களை உத்தேசித்துச் சொற்பச் செலவில் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கும் “ரிடிப்யூஷன்” என்ற ஒரு புதிய சாதனம் வெகு விரைவில் இங்கு ஏற்படவிருக்கிறது. இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு பிரிட்டிஷ் கம்பெனிக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ரிடிப்யூஷன் சாதனம் கம்பி மூலம் நிகழ்ச்சிகளைக் கேட்கச் செய்வதாகும். இந்தச் சாதனம் இடி மின்னல்களினால் பாதிக்கப்பட மாட்டாது. இதற்கு ஏரியலும் தேவையில்லை. இதற்கும் ரேடியோப் பெட்டிகளுக்கு முள்ள வேற்றுமை என்னவெனில், ரேடியோப் பெட்டிகளில் இஷ்டமான ஸ்டேஷன்களைத் திருப்பிக் கேட்கலாம். ரிடிப்யூஷன் சாதனத்திலோ பிரிட்டிஷ் கம்பெனிக்காரர்கள் கம்பி மூலம் அனுப்பும் நிகழ்ச்சிகளை மட்டுமே கேட்க முடியும். முக்கியமான நிகழ்ச்சிகளைக் கம்பெனி அசட்டை செய்யாதாகையினால் ஏழை ஜனங்களுக்குப் புதிய சாதனம் அதிக உபயோகமாயிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மலாயாவில் இதுமாதிரி சாதனங்கள் இருக்கின்றன. பிரிட்டனில் லட்சக் கணக்கானவர்கள் இதை உபயோகித்து வருகிறார்கள்.

முதலாவது காங்கிரஸ் தலைவர்

இவ்வாரம் இலங்கை இந்திய காங்கிரசுக்கு ஒரு பெரிய நஷ்டமேற்பட்டுள்ளதைக் குறிப்பிட வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் முதலாவது தலைவராயிருந்து இந்தியருக்கு நல்வழி காட்டிய ஸ்ரீ லட்சமணன் செட்டியார் அகால மரணமடைந்தது துக்ககரமான சம்பவம் ஆகும். நாடெங்கிலுமுள்ள பல தோட்டங்களில் தொழிலாளர்கள் பொதுக் கூட்டங்கள் நடத்தி காலஞ்சென்ற தலைவருக்குத் தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.


மனுக்கள் குவியவில்லை

பகிஷ்காரத் தீர்மானத்தை காங்கிரஸ் வாபஸ் பெற்றவுடன் இந்தியர்கள் பல்லாயிரக் கணக்கிலே போட்டி போட்டுக் கொண்டு பிரஜா உரிமைக்கு மனுக் கொடுப்பார்கள் என்று சிங்களவர்களால் நடத்தப்படும் ஒரு பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. உண்மையில் காங்கிரஸின் பகிஷ்காரத் தீர்மானம் வாபஸானவுடன் மனுக்கள் திடீரென்று அதிகரித்து விடவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுதுதான் தொழிலாளரின் மனுக்களைப் பூர்த்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வாரம் மொத்தம் எண்பது பேர்கள் இலங்கையர்களாகி யிருப்பதைச் சேர்த்து எட்டரை லட்சம் இந்தியர்களில் 1901 பேர்தான் இன்று வரை இலங்கையர்களாகப் பதிவு செய்யப் பட்டிருக்கிறார்கள். பிரஜா உரிமைக்குப் பூர்வாங்க யோக்கியதாம்சங்களை ருசுப்படுத்தியதாக கமிஷனர் கருதும் முப்பத்தேழு குடும்பங்களின் பெயர்கள் இவ்வார கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.

பெரிய நஷ்டம்

இலங்கை பத்திரிகையுலகின் ‘மன்னர்’ என்று அழைக்கப்பட்டுவந்த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஸ்தாபனத்தின் தலைவர் ஸ்ரீ விஜயவர்த்தனா தமது 64-வது வயதில் காலமானார். அவருடைய மறைவினால் பத்திரிகைத் தொழிலுக்கு முக்கியஸ்தரா யிருந்த ஒரு பெரியாரைச் சிங்களத்தீவு இழந்து விட்டது. பிரபல தினசரியான “டெயிலி நியூஸ்” உள்பட ஐந்து பெரிய பத்திரிகைகளை ஸ்ரீ விஜயவர்த்தனா நிர்வகித்து வந்தார். பிரதம மந்திரி கூறியதைப் போல இலங்கை சுதந்திரத்தின் சிற்பிகளில் முக்கிய ஸ்தானம் வகித்தவர் ஸ்ரீ விஜயவர்த்தனா. அவருடைய தகனக் கிரியைக்குப் பிரதம மந்திரி உள்படப் பல தலைவர்கள் வந்திருந்து தங்களுடைய கடைசி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

வரும் வாத்துப் படைகளைப் பின் தொடரும் வல்லூறுகளில் சில இங்கு வரும். எல்லா வித வாத்துக்களுமே (வீடுகளில் வளரும் இறக்கை கவனமற்ற வாத்துக்களைத் தவிர) வெகு வேகமாக நெடுந் தூரம் பறப்பன. அதிலும் 'மல்' என்றுள்ள வாத்து மணிக்கு சுமார் 65 மைல்' வேகத்தில் பறப்பதுடன் பறக்கும்பொழுது வேகம் குன்றாது காற்றில் புரண்டு திரும்பித் திசை மாறும் சாமர்த்திய முள்ளது. இந்த வாத்தை வல்லூறு வேட்டையாடும் அப்படி வேட்டையாட ஆரம்பித்து விட்டால் 'மல்' வாத்துக்கள் என்னதான் சிறகடித்து வேகமாகப் பறந்தாலும் வல்லூறுவிடமிருந்து அந்த வாத்துக்களால் தப்பமுடியாது. ஆகையால் வாத்துக்கள் தண்ணீரின் பாதுகாப்பை நாடும்.



"இரை வேளைகளில் இரையைப் பின்பற்றித் தொடர்ந்து"

ஒரு நாள். ஓர் ஏரிக்கரையில் நின்று கொண்டிருந்தேன். பத்துப் பன்னிரண்டு 'மல்' வாத்துக்கள் அடித்துப் புரண்டு வந்து விட்டெறிந்த கற்களைப் போல் ஏரிக்குள் பாய்ந்து தண்ணீரில் மூழ்கின. அவைகளைப் பின் தொடர்ந்து துரத்தி வந்த வல்லூறு நீரினுள் தானும் விழாது, இறக்கையைப் பரப்பி, வாலை விரித்து, தன் வேகத்தை யடக்கி, நீர் மட்டத்துக்கு ஒரு சாண் உயரத்தில் ஒரு கணம் காற்றில் தங்கி, பின் ஏரியை ஒருதரம் வட்ட மிட்டுச் சிகரங்கட்டி விண்ணில் பறந்து மறைந்து விட்டது.

வல்லூறு, ராசாளி வகைகளுள் பேடையே வலுவிலும் அளவிலும் சிறந்தது. ஆண் பறவை சற்றுச் சிறியதாக இருப்பதுடன், பேடைக்குள்ள பராக்கிரமம் அதற்குக் கிடையாது. இது, சில பறவை, ஊர்வன வகுப்புகளில் இயற்கையில் அபூர்வமாகவுள்ள அமைப்பு. சிருஷ்டியின் மேல்படிகளில்தான் ஆண்பால் வலுவில் சிறந்து விளங்கி வருகிறது.

நமது இலங்கைக் கடிதம் :

கனவு நனவாயிற்று!

கொழும்பு, ஜூன்–20

இலங்கை இந்திய காங்கிரஸின் நீண்ட காலத்திய கனவு இவ்வாரம் நனவாயிற்று! சென்ற ஞாயிற்றுக்கிழமை பதுளை நேதாஜி நகரில் தோட்டத் தொழிலாளருக்குச் சேவை புரிவதற்காக இலங்கை இந்திய காங்கிரஸ் தொண்டர் படை யொன்றை ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அந்தப் படை பல ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், யுத்த காலத்தில் தொண்டர் படை கூடாதென்று அரசாங்கம் தடை செய்திருந்ததோடு, சில தோட்ட முதலாளிகளும் தவ்விஷயமாகச் சந்தேகம் கொண்டிருந்தார்களென்றும் வரவேற்புக் கமிட்டித் தலைவரும் பார்லிமெண்டு அங்கத்தினருமான ஸ்ரீ எஸ். எம். சுப்பையா சொன்னார். ஸ்ரீ கிரி தொண்டர் அணி வகுப்பைப் பார்வையிட்டுப் பேசுகையில், இலங்கை இந்தியர் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறதென்றும், காங்கிரஸின் யோசனையைக் கேட்டுப் பெரும்பாலான இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்.


உண்மையில் தொண்டர் படையின் தேவை தொழிலாளருக்கு முன்னைவிட இப்பொழுதுதான் மிகவும் அவசியம். காங்கிரஸின் வருடாந்தர மகாநாட்டின் பொழுது ஜனாப் அஸீஸ் சொல்லியதைப்போல, பல்லாயிரக் கணக்கான இந்தியத் தொழிலாளரை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்வதற்குத் தொண்டர்கள் வெகுதூரம் உதவி புரியலாம். பிரஜா உரிமைச் சட்ட பகிஷ்காரத்தை காங்கிரஸ் வாபஸ் பெற்றுவிட்டதென்றாலும், ஆறரை லட்சம் தொழிலாள

வல்லூறு

மா. கிருஷ்ணன்

எல்லா வகைகளிலும் செழித்து விளங்கும் நம் தமிழ் மொழியில் பல பறவைகளுக்குப் பெயர் கிடையாது. சில பறவைகளுக்கு மட்டும் குறிப்பாகத் தனிப் பெயருண்டு. இன்னும் சில பறவைகளுக்கு வேறு பட்சிகளுடன் கூடிய இனப் பெயர்கள் வழங்குகின்றன. இம்மாதிரியான இனப் பெயர்களும் ஒரே வகைப் பட்சிகளைக் குறிக்காது பல வகைகளைத் தழுவுவதும் அடிக்கடி நம் கண்களில் தென்படும் பறவைகளுக்குக் கூடப் பெயரில்லாமலிருப்பதும், நமது மொழிக்கு ஒரு பெரிய குறைதான். ஆனால், இது தமிழுக்கு மட்டும் ஏற்பட்ட குறையில்லை. நமது தேசத்தில் வழங்கும் இதர பாஷைகளான தெலுங்கு, கன்னடம், மராத்தி, ஹிந்தி முதலிய மொழிகளிலும் இந்த குறையைக் காணலாம். இதனால் இந்தப் பறவைகளைப் பற்றித் தெளிவாகச் சொல்ல ஆங்கிலத்தின் உதவியைத் தேட வேண்டியிருக்கிறது.

வல்லூறு என்ற பறவை இனம் ஆங்கிலத்தில் 'பெரிக்ரின்', 'ஷாஹின்', எனப்படும் ஒரே குலத்தைச் சேர்ந்த பறவைகளைக் குறிக்கும். சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இந்தப் பறவைக்கு ராசாளி என்று பெயரிடப் பட்டிருக்கிறது. ஆனால் ராசாளி என்பது வேறு இனங்களைச் சார்ந்த புட்கொல்லும் பறவைகளுக்கும் வழங்கும். பெயர் எப்படி இருந்தால் என்ன? பந்தயப் புறாக்களை வளர்த்தவர்களுக்கு இந்தப் பட்சியைப் பற்றித் தெரியாமலிருக்க முடியாது. அவர்கள் வல்லூறை 'பைரி' என்ற வட இந்தியச் சொல்லாலேயே அழைத்து வருகின்றனர்!



வல்லூறுவின் மேல்பாகம் சலவைக்கல் நிறமாகவும், அடிப் பக்கம் கரும்புள்ளி தெளித்த வெள்ளையாகவும் இருக்கும்; இருண்ட கண்களின் கீழ் கன்னம் கருத்திருக்கும். அளவில் பெரிதான பட்சியில்லை; ஏறக்குறைய ஒரு காகத்தின் அளவுதான் இருக்கும். ஆயினும் பராக்கிரமத்திலும், பறக்கும் வேகத்திலும், கொல்லுந் திறனிலும் இந்தப் பறவைக்கு ஈடோ எதிரோ கிடையாது. வானத்தின் உச்சியிலே, நம் கண்ணுக்கு ஒரு சாம்பல் நிறப் பொட்டு போல் தென்படும் அவ்வளவு உயரத்திலே வல்லூறு மிதந்து வட்டமிடும். ஏதாவது ஒரு பட்சி கீழே பறந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டால் உடனே தன் இறக்கையை மடித்துக் கொண்டு அந்தப் பட்சியின் மீது இடிபோல் வந்து விழும். காற்றைக் கிழித்துக் கொண்டு தலை கீழாய்த் தன் இரையாகிய பட்சிமீது பாய்ந்து, தன் பொல்லாத தசையறுக்கும் பின்னங்கால் நகத்தினால் அந்தப் பட்சியைக் கீறிக் கொன்றுவிடும். சில சமயம் அடிபட்ட வேகத்தில் இரையின் தலை வேறு உடல் வேறாக இரு துண்டு படும். அப்படி, இரண்டு பட்டு செத்த புள் பூமியில் விழுவதற்குள் வல்லூறு மீண்டும் வேகமாகக் கீழ் நோக்கிப் பாய்ந்து அதைக் கவர்ந்து செல்லும். இதர வேளைகளில் மேலிருந்து பாய்ந்து விழாமல், தன் இரையைப் பின் பற்றி வெகு தூரம் போய்க் கூடப் பிடித்துவிடும். தன்னிலும் பெரிய பட்சிகளை அடித்துக் கொல்லுவதற்கு வல்லூறு கொஞ்சமும் அஞ்சாது. புறாக்களையும், கிளிகளையும், நீர்ப்பக்கம் வாழும் கொக்கு, வாத்து முதலிய பறவைகளையும் குறைபாடிப் பிழைக்கும் "விண் பட்ட கொக்கு வல்லூறு கண்டன்ன விலவிலத்து" என்ற தனிப்பாடல் அடியும், "வல்லூறடித்த மடவான் விழுவது போல் நீ விழுவாய்" என்ற முது மொழி வாழ்த்தும் வல்லூறுவின் இனத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கார்த்திகை மாதம் பிறந்ததும் அனுபவமுள்ளவர்கள் சாதாரணமாகப் புறா ஓட்ட மாட்டார்கள். அந்தக் காலங்களில் வட தேசங்களிலிருந்து தெற்கு நோக்கி

மாகத் தம் படுக்கைக்குச் சென்று இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தார்.

இதைப் பார்த்த மாதவி தன் படுக்கையில் எழுந்திருந்து உட்கார்ந்து விட்டாள். "எனக்கு இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. விளக்கமாகச் சொல்லத்தான் வேண்டும். இல்லையேல் என்னால் இனியும் பொறுக்க முடியாது. சொல்லி விடுங்கள்!" என்று இரைந்தாள்.


மாதவன் மௌனமாக இருக்குமாறு அவளுக்குச் சைகை செய்தார்.


"என்னை அசடாக்கப் பார்க்காதீர்கள்! நான் சொல்லி விட்டேன், என்னால் இனிமேல் இந்தக் காரியங்கள் எல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லி விடுங்கள். என்னைப் பார்த்துக் கொள்ள எனக்கு வேண்டிய பேர் இருக்கிறார்கள். நான் இப்பொழுதே, இந்த க்ஷணமே வேண்டுமானாலும் போய் விடுகிறேன்" என்று இரைந்து விட்டு மாதவி புறப்பட்டாள்.


மாதவன் எழுந்து சென்று அவளைப் 'போக வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டார். "தயவு செய்து பொழுது விடியும் வரை சற்றுப் பொறு. பொழுது விடிந்ததும் எல்லா விவரங்களும் உனக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது நான் மிகவும் களைத்திருக்கிறேன்" என்றார்.

அவர் வார்த்தைகளில் உண்மை தொனித்தது. அவளிடத்தில் இன்னும் அன்பு கொண்டிருக்கிறார் என்பதும் அவளுக்கு அம்மொழிகளில் தெரியலாயிற்று. ஆகவே அவரைத் தூங்க விட்டாள். காலையில் எழுந்ததும் எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

மாதவன் நரியுலகில் தாம் பெற்ற அனுபவங்களையெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தபோது அவளுடைய அவநம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. அவள் பொறாமைப் பட்டதற்குக் காரணமே கிடையாது என்பதையும் கண்டாள். இந்த அனுபவங்கள் யாவும் அவளுக்கு விசித்திரமாகப்பட்டது. இவ் வியப்பு அதிகரித்து. அவருக்கும் தனக்குமிடையில் ஒரு பெரிய அகழி இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இவ்விசித்திர நரி உலகில் தனக்கு இடமே கிடையாது என்று அவளுக்குப் பட்டது. வெகு சீக்கிரம் அவளுக்கு வாழ்க்கை சகிக்க முடியாதபடி யாகிவிடும் என்று உணர்ந்தாள். ஆகவே, அவள் அவரை விட்டு விட்டு ஓடிவிடத் தீர்மானித்தாள். அருமைக் கிட்டுவையும் அவரிடம் விட்டு விட்டு ஓடத் தீர்மானித்தாள்! (தொடரும்)







படுக்கையில் படுத்தவாறே யோசித்தான் அப்படியே தூங்கியும் விட்டான்.

இலங்கைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் நன்றாகத் தூங்கிய பிறகும் அவன் உள்ளத்தில் நின்று கொண்டிருந்தது. அதன் விளைவாக அவர்கள் இலங்கைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகக் கனவு கண்டான். அவர்கள் ஏறியிருந்த கப்பல் கரையைத் தொடப் போகும் சமயத்தில், ஏதோ வெடிச் சத்தம் கேட்டது. கப்பல், கப்பலிலிருந்த மக்கள், அவர்கள் எல்லோருமே மூழ்கிக் கொண்டிருந்தார்கள்.

மூழ்கும் மக்களின் பரிதாப ஓலமும், அழுகையும் அவன் தூக்கத்தை நன்றாகக் கலைத்து விட்டன. படுக்கையை விட்டு எழுந்தான். நின்றுகொண்டே கண்களைக் கசக்கினான். 'எல்லாம் கனவுதானே?' என்று சுற்று முற்றும் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்டான். கனவு என்று தெரிந்ததில் மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது. 'சட்' என்று திரும்பிப் பார்த்தான். மாதவன் படுக்கையில் இல்லை என்பதைக் கண்டான்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடியாரத்தைப் பார்த்தான். அது மணி இரண்டு என்று காட்டியது. இந்த அவேளையில் வெளியே போவது என்பது என்றுமில்லாத வழக்கமாகத் தோன்றியது. ஜன்னல் அருகில் சென்று வெளியே பார்த்தான். நிலவொளி வீசும் பரந்த மைதானத்தைப் பார்த்தான், பார்த்தான் அப்படிப் பார்த்தான். சுமார் ஒரு மணி நேரம் வரை பார்த்துக் கொண்டே யிருந்தான். கண்கள் பூத்து விடும்போலாகிவிட்டது. அப்போது இருந்தாற்போலிருந்து இன்னொரு எண்ணம் உதித்தது. கீழ இறங்கி, அங்கே எங்கேயாகிலும் இருக்கிறாரோ என்று பார்க்க விரும்பினான். அங்கேயும் அவர் காணவில்லை. அவன் கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது. 'இனியும் அவருடன் இருக்கக்கூடாது. எவ்வளவு சீக்கிரம் அவரை விட்டுப் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் போய்விட வேண்டியதுதான்' என்று தீர்மானித்துக் கொண்டு மாடிப்படிகள் ஏறித் தன் படுக்கையில் ஓடிப்போய் விழுந்தான். படுக்கையில் படுத்தவன் தூங்கவில்லை. அவர் எப்பொழுது திரும்புகிறார் என்பதைப் பார்க்கவேண்டும் என்ற தீர்மானத்துடன் விழித்துக் கொண்டே படுத்திருந்தான்.

மாதவன் பொழுது விடிவதற்கு இன்னும் நாலு நாழிகை இருக்கும் எனும் போதே திரும்பி விட்டார். அவர் வேக

நரிகளைப் பற்றிக் கூறிய போதெல்லாம் அவர் குரலில், அவர் வார்த்தைகளில், அவர் விழிகளில் அன்பு பெருக்கெடுத்தது! இதைக் கண்டு அங்கே கூடியிருந்த விருந்தாளிகள் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். அவர்களைவிட அதிகமாகத் திகைத்தது மாதவனின் மனைவிதான்!

விருந்தெல்லாம் முடிந்து, பேச்செல்லாம் முடிந்து யாவரும் கலைந்த பிறகு மாதவி தன் கணவனிடம் "அந்த மனிதர் என்னதான் வேண்டுமென்றார்? ஒருவேளை அவர் பைத்தியமோ?" என்று கேட்டாள்.

மாதவன் பேசவில்லை. சிலை போல் நின்று ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்?" என்று அவரைக் குலுக்கிக் கேட்டாள். இதற்கும் அவர் பதில் சொல்லவில்லை. அவளுக்கு ஆத்திரம் உண்டாகி விட்டது. அந்த ஆத்திரத்தில் மறுபடியும் அவரைப் பிடித்துக் குலுக்கப் போனாள். அப்போது அவர் மூர்ச்சை யடைந்தவர் போல், அவள் கைகளில் சாய்ந்து விட்டார்.

18. பால்ய நண்பர்கள்

விருந்துக்குப் பிறகு மாதவன் சோகமே உருவாய் இருந்தார். உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அவருக்கு வந்து கொண்டிருந்த பாராட்டுக் கடிதங்களும் அவரை உற்சாகப் படுத்தவில்லை. அவர் மனைவி மாதவிக்கு மாதவனின் உடல் நலத்தைப் பற்றி மிகவும் கவலையுண்டாகி விட்டது. அவருக்கு உற்சாக மூட்டத் தன்னாலியன்ற சிசுருஷை யெல்லாம் செய்தாள். கடைசியில், ஐந்து ஆறு நாட்களுக்குப் பிறகு மாதவன் குணமடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. மாதவி மகிழ்ச்சி யடைந்தாள். தன் கஷ்டங்கள் தீர்ந்தன என்று எண்ணினாள்.

அன்று பௌர்ணமி. ஒரு வாரம் இடைவிடாது சிசுருஷை செய்ததில் களைத்துப் போய் அன்று நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள் மாதவி. அவர்களுடைய அருமைக் குழந்தை கிட்டு தன் சிறு படுக்கையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். ஆனால் மாதவன் தூங்கவில்லை. விழித்துப் படுத்திருந்தார். படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். உரக்கக் கொட்டாவி விட்டார். ஏதோ முணுமுணுத்தார். மொத்தத்தில் தூக்கம் வராமல் தவித்துக்கொண்டிருந்தார். கடைசியில் படுக்கையை விட்டு எழுந்திருந்து 'பால்கனி'க்குச் சென்றார்.

மாதவனே பக்கத்திலிருந்து கட்டிய கட்டிடம் அது. மாடி பால்கனியிலிருந்து வெளியே நிலவொளியில் பார்த்தார். காட்டுப்புறக் காட்சிகள் அந்நிலவொளியில் கம்பீரமாகப் பொலிவுற்று விளங்கின.

மொத்தத்தில் அன்றையக் காட்சிகள் யாவும் அவருக்கு மகிழ்ச்சி யூட்டுவனவாகவே இருந்தன. ஆயினும் அங்கே நின்று பார்த்துக் கொண்டிருந்த போது பால்ய நினைவுகளும் அவர் மனதில் தோன்றலாயின. ரொம்பவும் சிறு வயதில் ஏற்பட்ட அனுபவங்களின் நினைவுகள் மயிர் கூச்செடச் செய்தன. இந்தகைய பகற்கனவில் மூழ்கியிருந்த போது தமக்கு மிகவும் பரிச்சயமான ஊளையிடும் சத்தம் அவரைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

ஊ! ஊ! ஊ! ஊ!

இந்த ஊளையிடும் சத்தம் அவரை ஒருவித மயக்கமுறச் செய்தது. ஆனால் வெகு சீக்கிரத்திலேயே மாதவன் தம் வீட்டு முன் வாசலில் நூற்றுக்கணக்கான நரிகள் கூடுவதைப் பார்த்தார்.

கிராமத்துச் சிறுவர்கள் அவர் தோட்டத்தில் புகுந்து, புஷ்பங்களையும் பழங்களையும் திருட முயல்வார்கள். அவர்களுடன் தினப்படி சண்டையிட்டு விரட்டுவதே தோட்டக்காரர்களின் வேலை. ஆம். புஷ்பங்களையும் செடிகளையும் அவ்வளவு ஜாக்கிரதையாக மாதவன் பாதுகாத்து வந்தார். இன்று அவர் எதிரில் கூடிய நரிகள், மிகவும் அழகான பூந்தொட்டிகளை, உடைத்து எறிந்து கொண்டு வந்தன. இதைக் கண்டு இன்று ஏனோ அவர் இதயம் சற்றும் புண்படவில்லை. நரிக்கூட்டத்தைக் கூர்ந்து பார்த்தார். 'அவைகளின் கண்களில் புத்தொளி வீசுவதாகத் தோன்றுகிறதே! அது என்ன பிரமையா? நிஜமா?' என்ற சந்தேகம் தோன்றியது. அவைகளுக்கு மாதவன் அங்கே யிருப்பது எப்படித் தெரிந்தது? அவைகளுக்கு மாதவன் இன்னும் அவற்றினிடம் அன்பு கொண்டிருப்பது எப்படித் தெரிந்தது?

ஒருபுறம் அவற்றினிடம் போகவேண்டும் என்ற எண்ணமிருந்தது; மற்றொருபுறம் வேண்டாம் என்று மிருந்தது. இப்படி எண்ணப் போராட்டத்துடனே, கனவில் நடப்பதுபோல் மெள்ள, அடிமேல் அடிவைத்து மாடிப் படிகளில் இறங்கிச் சென்றார். ஏதோ ஒரு சொல்லத் தெரியாத சக்தி அவரை நரிகளினிடையே இழுத்துச் சென்றது. பல ஆண்டுகள் நரிகளை விட்டுப் பிரிந்திருந்ததனால் ஏற்பட்ட வேற்றுமை பாவம், ஒரு விநாடியில் மறைந்து விட்டது!



அவரை அறியாமலே, மறுபடியும் அவருக்கு நரிகளிடை ஊழி ஊழி காலம் பழகினாற் போல் சகஜபாவம் ஏற்பட்டு விட்டது. மறுபடியும், அவை எவ்வளவோ, நன்றியுடன் அவரை வரவேற்றன. நரிகள் எல்லாம் தத்தம் வால்களை ஆட்டி அவருக்கு வரவேற்புக் கூறின. நரிகள் தங்கள் நன்றி யுணர்ச்சியைத்தெரிவிக்கும் முறையும் அதுதானே? வெகு நாட்களுக்குப் பிறகு மற்றும் ஒரு முறை நரிகளின் முதுகின் மீது ஏறி அமர்ந்து அந்த மனமோகன நிலவொளியில் சவாரி செய்தார்.

இதற்கிடையில், மாதவி ஒரு முறை விழித்துக் கொண்டாள் சூரியோதயம் ஆகவில்லை என்பதைக் கண்டாள். கூடவே தன் கணவன் படுக்கையில் இல்லை என்பதையும் யுணர்ந்தாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மாதவன் எடபொழுதுமே நாழி கழித்துத்தான் எழுந்திருப்பது வழக்கம். இன்று இவ்வளவு சீக்கிரம் எழுந்தது அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவள் எழுந்திருந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள் அங்கே, தூரத்தில் மாதவன் வீட்டை நோக்கித் துரிதமாக நடந்து வருவதைப் பார்த்தாள். அவர் வேகமாக மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிவந்து மாடிப்படிகள் ஏறிவந்து, ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் படுக்கையில் போய் 'தொப்' என்று விழுந்தார்.

மாதவி "நீங்கள் இப்படியெல்லாம் வெளியே போகக்கூடாது. எதற்காகப் போனீர்கள்? உங்களுக்கு ஏதாகிலும் வேண்டியிருந்தால் என்னை எழுப்பியிருக்கலாமே!' என்றாள்.

மாதவன் பதிலே சொல்லவில்லை. அவள் அவர் அருகில் சென்று பார்த்தாள்—நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்! கொஞ்ச நாட்களாகவே அவருடைய நடத்தை அவளுக்குப் புரியவில்லை; பொறுக்கவும் முடியவில்லை. ஆயிரம் எண்ணங்கள் அவள் உள்ளத்தில் எழுந்தன. 'ஒருவேளை, அவர் என்னை விரும்பவில்லையோ' என்று எண்ணினாள். மாதவி பிடிவாத குணமும், முன்கோபமும் உள்ளவளாதலால், 'இனியும் சகிக்க முடியாது' என்று தீர்மானித்தாள். அடுத்த கணம் 'வாஸ்தவத்திலே அவருக்கு வேண்டியதெல்லாம் நல்ல ஓய்வுதான். ஒருவேளை இலங்கையின் சீதோஷ்ண ஸ்திதிதான் அவர் உடம்புக்கு ஒத்துக் கொள்கிறது போலும்' என்று எண்ணினாள். பொழுது விடிந்ததும், 'வேண்டுமானால் இலங்கைக்குப் போய் ஒருமாதம் இருந்துவிட்டு வரலாமே' என்று கேட்க வேண்டும் எனக் கருதினாள். இவ்வளவும்

நரிக்காட்டு ராஜா

ஆசிரியர்: எஸ். கோபாலன் மொழிபெயர்ப்பு: எஸ். வி. எஸ்.

மாதவன் அழைத்திருந்த விருந்துக்கு வந்துகொண்டிருந்த திருவாளர் தாமோதரன் - இப்பொழுது கௌரவ மாஜிஸ்டிரேட்டாக இருந்தார். விவசாயத்தில் அவர் பழைய முறைகளை மாற்றிப் புரட்சிகரமான சீர்திருத்தங்களைச் செய்ததை முன்னிட்டு சர்க்கார் இப்பதவியை அவருக்கு அளித்திருந்தார்கள்.

அவர் தமக்கு வந்த அழைப்பில் 'நல்ல நரிக்காடு' என்ற பெயரைப் பார்த்தவுடன் துள்ளி எழுந்தார். அவருக்குப் பழைய உற்சாகம் வந்துவிட்டது; நன்றி உணர்ச்சி மேலிட்டுக் கண்களில் கண்ணீர் மல்கித் திரையிட்டது. நன்றாகப் பழக்கப்பட்ட நரிகள் வயல்களில் உழைப்பது போலவும், அதன் பலனாக வயல்களில் ஒட்டிக்கு இரட்டையாக விளைவது போலவும் அவர் மனக்கண்முன் காட்சிகள் தோன்றலாயின. இப்படிப்பட்ட ஆசாமி, மாதவன் அழைத்ததும் போகாமல் இருக்க முடியுமா? ஆகவே, தம் தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் விருந்துக்குச் சென்றார்.

விருந்து சாப்பாடு முடிந்தபிறகு பலாப் பழச் சுளைகளும், பன நுங்கும் வழங்குவது அந்தப் பக்கங்களில் வழக்கம். அந்த வழக்கப்படி பலாப்பழம் கொடுத்தான பிறகு, திருவாளர் தாமோதரன் தள்ளாடித் தள்ளாடி மாதவன் கங்காணியின் அருகில் வந்து நின்றார். தமது தலையிலிருந்த தலைப்பாகையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு விருந்துபசாரம் செய்த கர்த்தாவுக்கு சில ஆசிமொழிகள் பகர்ந்தார். இவ்வளவு நல்ல எண்ணங்கொண்ட இந்த உத்தமர் யார் என்று தெரியாமல் மாதவன் விழித்தார். ஆம், மாதவன், தாமோதரனாரை முன்பின் பார்த்ததே கிடையாது. ஆகவே, 'இவர் யார்?' என்று தமது காரியஸ்தர்களைக் கேட்டார். அவர்களும், மாதவனைப்போலவே அவர் யார் என்று தெரியாமல் திகைத்தனர். இருந்தாலும், தாங்கள் அழைப்பு அனுப்பிய பெரிய மனிதர்களின் ஜாபிதாவைக் கையில்வைத்துக்கொண்டு புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இதற்குள், திருவாளர் தாமோதரன் பேச ஆரம்பித்து விட்டார்:—

"அன்பார்ந்த ஐயா! நான் தங்களைப் பற்றி வெளியில் விசாரித்ததில் தாங்கள்தான் முன்பு சிறு வயதில் 'மாது, மாது' என்று அழைக்கப்பட்டவர் என்பதைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் மகனைவிட எனக்கு அன்பார்ந்தவர்" என்று ஆரம்பித்தார்.

இதைக் கேட்டவுடன் மாதவன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நரிகளைப் புதுமுறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கண்டுபிடித்த தங்களை, உண்மையில் இவ்வூர் வாசிகள் சிரமேற்கொண்டு கொண்டாட வேண்டும்" என்று மேலும் கூறினார் திருவாளர் தாமோதரன்.

"தாங்கள் யார் என்று தெரியவில்லையே?" என்றார் மாதவன்.

"என் பெயர் தாமோதரன். விவசாயத்தில் தங்கள் முறையைத் தீவிரமாகப் பின்பற்றுபவன் நான். நரிகளைப் பழக்கப்படுத்தி நம் வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று பெருமுயற்சி செய்தேன். தாங்கள் இந்த நல்ல முறையைச் செய்து காட்டிய நாட்டாண்மைக்காரனின் பண்ணையையே நானும் விலைக்கு வாங்கி இம்முறையைச் 'சோதனை' செய்து பார்த்தேன்; கையாண்டு பார்த்தேன். இப்பொழுது தாங்களே நேரில் வந்து விட்டீர்கள். இம்முறை வெற்றியடைவதை என் வாழ்நாளிலேயே காணப் போகிறேன். விவசாயத்தில் எருது யுகம் முடிந்துவிட்டது. நரியுகம் ஆரம்பமாகி விட்டது. வாழ்க நரியுகம்!" என்றார் தாமோதரன்.

திரு தாமோதரன், தம் பெயரைச் சொன்னாரோ இல்லையோ மாதவனின் சுறுசுறுப்பான காரியஸ்தர்கள் தங்கள் கைவசமிருந்த ஜாபிதாவில் அப்பெயரைத் தேட ஆரம்பித்தார்கள். கடைசியில் கண்டு பிடித்தார்கள். ஜாபிதாவில் பெயரைப் பார்த்தவுடன் அவர்களுடைய திகைப்பு அதிகரித்து விட்டது. காரணம் அவர்கள் ஜாபிதாவில் "திரு தாமோதரன், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், எட்டுக்கோட்டை" என்றிருந்தது!

திரு தாமோதரன் தமது பிரசங்கத்தை முடிக்கும் தறுவாயில்தான், அங்கே கூடியிருந்த விருந்தினர் அவர் பேச்சில் சிரத்தை காட்டத் தொடங்கினர். அதன் பலனாக, ஊசி போட்டால் அவ்வூசி விழும் சத்தம் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது. இதில் உற்சாகமடைந்த கிழவர் நரிகளின் குணாதிசயங்களைப் பற்றியும், விவசாய முன்னேற்றத்தைப் பற்றியும் விரிவாகப் பேசத் தொடங்கினார்.

செலவு செய்து வருகிறோம். இரண்டொரு பையன்களைக் கூடப் படிக்கப் போட முடியாமல் படிப்பை நிறுத்தி விடும்படியாயும் ஆகிவிட்டது. ஒரு சில ஜமீன்தார்கள் பணக்காரர்களாயிருக்கலாம். 'எல்லோரும் பணக்காரர்கள் சுகபோகம் அநுபவிக்கிறார்கள்' என்று எண்ணுவது தவறு. ஜமீன் ஒழிப்பு வந்த பிறகு நாங்கள் படும் கஷ்டம் நேரில் எங்களைப் பார்த்தவர்கள்தான் அறிவார்கள்.

சென்ற ஒரு வருஷ காலமாய் அரசாங்கத்தார் வரிக் குறைப்புச் சட்டப்படி எங்கள் ஜமீனை எடுத்துக் கொண்டு அவர்களே வசூல்செய்து 'பேஷ்கஷ்' செலுத்தி மீதமுள்ள ரூபாயை அவர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குமுன் எங்கள் குடும்பச் செலவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வந்துமே காணாதிருந்தது. அந்த ஜமீனின் வருமானத்தையே எதிர்பார்த்திருப்பவர்களுக்கு வருஷம் ஒன்று ஆகியும் 'பேஷ்கஷ்' செலவு போக பாக்கி ரூ. 6000 த்தை எங்களிடம் கொடுப்பதற்கில்லாமல் காலதாமதம் செய்து வருகிறார்கள். நாங்கள் கவர்ன்மெண்டுக்குப் பலதடவை எழுதிய பிறகு ரூ. 2000 த்துக்கு அநுமதி செய்திருக்கிறார்கள். இந்த ரூ 2000 மும் மாதம் இரண்டு ஆகியும் எங்கள் கைக்குக் கிடைக்கவில்லை. நாங்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இப்படியிருக்கப் பொது ஜனங்கள் ஜமீன்தார்களை ஒழிக்கவேணும்; ஜமீன்தார்கள் ஆடம்பர வாழ்க்கையில் உள்ளவர்களென நினைக்கிறார்கள். நன்றாய் ஜமீன்களை ஒழிக்கட்டும். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒன்று அரசாங்கத்தில் ஜமீன்களை உடனடியாக எடுத்துக் கொண்டு எங்களுக்குச் சீக்கிரமாக நஷ்டஈடு கொடுக்கவேண்டும். இல்லையெனில் எங்கள் ஜமீனை முன்மாதிரி எங்களிடமே ஒப்படைத்து 'பேஷ்கஷ்' வகையறாக்களை வாங்கிக் கொண்டு, மீதியை எங்கள் செலவுகளுக்கு உபயோகமாகச் செய்ய வேணும்.

நத்தம்
14—6—50 — துபாஷ் ஈஸா

○●○

பள்ளிக்கூடமா? பலசரக்குக் கடையா?

★ நான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என் தகப்பனார் ஒரு ஜவுளிக் கடையில் கணக்கு வேலை பார்க்கிறார். அவர் சொற்ப வருவாயைக் கொண்டுதான் குடும்பம் நடக்கிறது. இந்தச் சிரமமான தசையிலும் படிப்பை நிறுத்தாமல் ஒன்பதாவது வகுப்பு படித்து வருகிறேன். மாதா மாதம் என் பள்ளிக்கூடச் சம்பளமே இத்து ரூபாய்க்கு மேல் ஆகிவிடுகிறது. இந்த நிலையில் எங்கள் ஹைஸ்கூலில் ஒரு புத்தகக் கடை இருக்கிறது. இதுபோல் பல பள்ளியிலும் இருக்கிறது. பள்ளிக் கூடத்தின் பெயர் பதித்த பயிண்டு செய்த கணக்கு நோட்டுகள், வியாச நோட்டுகள், டிராயிங் நோட்டுகள், புதிய புஸ்தகங்கள் இன்னும் பென்சில் வகையறா சாமான்கள் விற்கின்றார்கள். நாங்கள் எல்லோரும் அந்தக் கடையில்தான் புத்தகம், நோட் முதலியவைகளை வாங்க வேண்டுமாம்! ஏனெனில் அந்தக் கடைக்கு வியாபாரம் ஆகவேண்டுமல்லவா? என்றால் அந்தக் கடையில் விற்கும் நோட்டுகளை அவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்க முடியுமா? நான் மலிவான சாதாரணத் தாளில் சொந்தமாகக் கணக்கு நோட்டு முதலிய பல நோட்டுகளைத் தைத்துக் கொண்டேன். இதற்காக எல்லா உபாத்தியாயர்களும் என்னைக் கடிந்து கொள்கிறார்கள். பள்ளிக்கூடக் கடையில் விற்கும் பயிண்டு செய்த நோட்டுகளில் எழுதினால்தான் படிப்பு வருமா, என்ன?

என்னால் புதிய புத்தகங்கள் வாங்க முடியவில்லை. அதற்காக எல்லாம் பழைய புத்தகங்களாகவே வாங்கி வைத்திருக்கிறேன். மேலும் சரித்திரம், விஞ்ஞானம், பூகோளம் முதலிய புத்தகங்கள் எனக்குப் பழைய விலைக்குக் கிடைக்காததால் வேறு ஆசிரியர்கள்—அதாவது பள்ளியில் தற்காலம் உபயோகப் படுத்தாத வேறு ஆசிரியர்கள் — எழுதிய பழைய புத்தகத்தை உபயோகப்படுத்திக் கொள்கிறேன். ஆனால் விஷயம் எல்லாவற்றிலும் ஒன்றேதான். தற்போது எழுதிய புதிய புத்தக ஆசிரியர் பூமி உருண்டை என்று சொல்லுகிறார்; பழைய புத்தக ஆசிரியரும் அதையே சொல்லுகிறார். தண்ணீரில் பிராணவாயுவும் ஜலவாயுவும் கலந்திருப்பதாக பழைய ஆசிரியர் சொல்கிறார்; புதிய ஆசிரியரும் அதையே ஒப்புக் கொள்கிறார். ஆனால் இரு ஆசிரியர்களின் நடைதான் வித்தியாசம். நான் மேற்படி புதிய புத்தகங்களை உபயோகப் படுத்தாததற்காக என்னைப் பூகோள ஆசிரியர் 'பெஞ்சி" மேல் ஏற்றிவிட்டார். மற்ற ஆசிரியர்களும் என்னை அடிக்கடி கோபித்துக் கொள்ளுகிறார்கள்.

நாட்டில் மக்களுக்குக் கல்வி ஞானம் எப்படியாவது புகுத்த வேண்டுமென்று நம் தலைவர்கள் படாதபாடு படுகிறார்கள். ஆனால் ஆர்வத்துடன் படிக்கும் என்னைப் போன்ற ஏழை மாணவர்களை உபாத்தியாயர்கள் உபத்திரவப் படுத்துகிறார்கள். நான் பழைய புத்தகம் படித்தால் எனக்குப் பூகோள ஞானமும் விஞ்ஞானமும் வராதா? ஏழைகளாகிய நாங்கள் அதிகப் பணம் கொடுத்துப் புதிய புத்தகங்கள் வாங்கிப் படிக்க எங்கே போவோம்?

20—6—50 — பி. எஸ். சுவாமிநாதன்

---

* வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25ஐ "வழிகாட்டிகள்!" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ டி. பாலசுப்பிரமணியத்துக்கும், "பள்ளிக்கூடமா? பலசரக்குக் கடையா?" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ பி. எஸ். சுவாமிநாதனுக்கும் ரூ. 12—8—0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

மார்க்குகளுக்கு இடம் கொடுத்துவிட்டால் அப்புறம் கேட்பவா வேண்டும்?

தென்னம்பட்டு
1—6—50 டி. ஆர். நடராஜன்.

○●○

அக்டோபர் பரீக்ஷை

நான் சென்ற மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை எழுதிய மாணவர்களில் ஒருவன். அந்தப் பரீக்ஷையின் முடிவு ஜூன் மாதம் 7-ந்தேதி வெளியாயிற்று. ஆனால் அதில் நான் தேறவில்லை. இரண்டு தினங்களுக்கு முன் சர்டிபிகேட் புத்தகம் வந்தது. அதில் நான் பெற்றுள்ள மார்க்குகளைப் பாருங்கள் :—

	மார்க்குகள்	மாகாண சராசரி
ஆங்கிலம்	— 32	— 33
தமிழ்	— 56	— 41
கணக்கு	— 75	— 48
சயன்ஸ்	— 42	— 39
சரித்திரம் & பூகோளம்	— 34	— 36
ஆப்ஷனல்ஸ்	— 46	— 41
மொத்தம்	285	238

இப்படி இருந்தும் நான் பரீக்ஷையில் வெற்றி பெறவில்லை. அரசாங்கத்தாரின் கல்வித் திட்டப்படி 210 மார்க்குகள் வாங்கினால் பரீக்ஷை பாஸ் செய்யப் போதுமானது. ஆங்கிலத்தில் மாகாண சராசரிக்கு ஒரு மார்க்கு குறைந்ததினால் நான் தேறவில்லை. இதற்காக நான் இன்னும் ஒரு வருடம் படித்தாக வேண்டும்.

1960 அக்டோபர் பரீக்ஷைக்கு 1950 மார்ச்சில் இல்லாத பாடங்களையும் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பாடங்களை எங்களுக்கு ஆசிரியர்கள் யாரும் சொல்லிக் கொடுக்கவேயில்லை. ஏழையாகிய என் போன்ற மாணவர்கள் டியூட்டோரியல் காலேஜுக்குப் போய்ப் படிப்பதும் சாத்தியமில்லை. அதனால் அரசாங்கத்தார் மார்ச் பரீக்ஷைக்கு ஒதுக்கிய பாடங்களை அக்டோபர் பரீக்ஷையிலும் ஒதுக்கி விடும்படி பரீக்ஷையில் தேறாத ஆயிரக் கணக்கான மாணவர்களின் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

சேலம்
17—6—50 ஆர். முத்துசாமி

○●○

ஜமீன்தார்களின் அவதி

ராமநாதபுரம் ஜில்லாவில் அருப்புக்கோட்டைத் தாலுகாவில் உள்ள பந்தல்குடி ஜமீனை எங்கள் தகப்பனார் துபாஷ்காதர் என்பவர் அந்தக் காலத்தில் இரண்டு லக்ஷ ரூபாய்க்கு வாங்கினார். நாங்கள் சகோதரர்கள் மூன்று பேர். இந்த ஜமீன் எங்கள் மூன்று பேருக்கும் பாத்தியதை உடையது. நான்தான் கடைசி. இந்த ஜமீனுக்கு வருஷ வருமானம் ரூ. 16,000. இதில் கவர்ன்மெண்டுக்குச் செல்ல வேண்டியது ரூ. 9000 போக பாக்கி ரூ. 7000. இந்த ரூ. 7000 த்தில் சிப்பந்திச் சம்பள வகையரா செலவுகள் போக மீதம் இருப்பது ரூ. 6000. இதில் என் பங்குக்கு ரூ. 2000. இந்த ரூ. 2000 உடனடியாகக் கிடைத்துவிடாது. நாங்கள் வருஷம் பூராவும் வசூல் செய்து மாதம் ஒன்றுக்கு ஆளுக்கு ரூ. 100தான் குடும்பச் செலவுக்கு எடுத்துக் கொள்வது; வருஷக் கடைசியில் மீதம் இருப்பதை எடுத்துக் கொள்வது வழக்கம்.

எங்கள் குடும்பமோ பெரிய குடும்பம். எங்கள் ஒவ்வொருவருக்கும் பிள்ளை குட்டிகள் உள்பட 15 பேருக்கு மேல் ஆகிறது. இந்த நூறு ரூபாயும் காணாமல் நாங்கள் நகை நட்டு, தட்டு முட்டுச் சாமான்களை விற்றுச்



“திறமான புலமை எனில் பிறநாட்டு நல்லறிஞர் வணக்கம் செய்தல் வேண்டும்” என்று மகா கவி பாரதியார் பாடினார். பாரதியாரின் எத்தனையோ கனவுகள் நனவாகி வருகின்றன. மேற்கண்ட கனவும் நனவாவதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன.

வால்டேர், ஆந்திர சர்வகலாசாலையில் கணிதப் பேராசிரியராக இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் எஸ். மீனாட்சிசுந்தரம் எம். ஏ., டி. எஸ்ஸி., அவர்களை அமெரிக்கக் கணித ஆராய்ச்சியாளர் சங்கம் வரவேற்றிருக்கிறது. அமெரிக்காவில் 'ஸ்டில்வாட்டர்' என்னும் இடத்தில் ஜூன் மாதம் 20-ந் தேதியிலிருந்து நடக்கும் கூட்டத்திலும் கேம்பிரிட்ஜ் என்னுமிடத்தில் ஆகஸ்ட் மாதம் 30-ந் தேதி ஆரம்பமாகவிருக்கும் அகில உலக கணித ஆராய்ச்சியாளர்கள் மகாநாட்டிலும் கலந்து கொள்ள சென்ற மாதம் 18-ந் தேதி வானமார்க்கமாகப் புறப்பட்டுச் சென்றார். அவருடைய அமெரிக்க விஜயம் வெற்றி பெறுவதாகுக!

பாதுகாக்கவும் வேண்டும்!

மத்திய சர்க்கார் வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தை மரம் நடும் விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று மாகாண சர்க்கார்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த நல்ல முயற்சியை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காடுகளிலுள்ள ஏராளமான மரங்கள் தினமும் அழிக்கப்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

எங்கள் ஊருக்கு சுமார் ஐந்துமைல் தூரத்தில் சிறுமலை என்ற ஓர் பெரிய மலை இருக்கிறது. இதில் இரவு காலங்களில் மரங்கள் கொழுந்து விட்டெரிவதைத் தினமும் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். பகல் காலங்களிலும் ஒரே புகை மயம். இப்படி எரிய ஆரம்பித்தால், அது அணைவதற்கு சுமார் ஆறு அல்லது ஏழு மணி நேரத்திற்கு மேல் பிடிக்கிறது.

தவிர, சில ஜமீன்களுக்கு உட்பட்ட மரங்கள் அடிக்கடி நாசம் செய்யப்பட்டு வருகின்றன. மழையே அற்றுப் போய்க் கிடக்கும் எங்கள் பக்கத்தில் இப்படி மரங்கள் அழிக்கப்படுவதை யாரும் விரும்பவில்லை. ஆகவே மாகாண சர்க்கார் முதலில், இப்படி அநியாயமாக மரங்கள் எரிக்கப்படுவதை சட்டத்தின் மூலம் தடுத்தாக வேண்டும். அப்படிச் செய்தால்தான் மரம் நடும் முயற்சி நல்ல பயனைக் கொடுக்க முடியும். ஒரு பக்கம் சர்க்கார் மரம் நடுவது, மறு பக்கம் ஒரு சிலரால் மரம் எரிக்கப்படுவதென்றால் சர்க்கார் செய்யவிருக்கும் நல்ல முயற்சியைக் கேலி செய்வதாகவே ஆகும்.

ஆகையால் புதிதாக மரங்களை உண்டாக்க முயற்சிக்கும் சர்க்கார் ஏற்கெனவே உண்டாகி நல்ல பயனைக் கொடுத்துக்கொண்டிருக்கும் மரங்களை அழிக்காமல் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவும் வேண்டும்.

திண்டுக்கல்
6—6—50

ஏ. எம். ஹாஸன்

○●○

மத மாற்றம்

ஏழைகளின் நன்மைக்காக சர்க்கார் மேற்கொண்டுள்ள திட்டங்களைப் பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பை, தகுந்த நபர்களிடம் ஒப்படைக்காத காரணத்தினால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன.

செய்யாறு தாலுக்காவில் மோரணம் கிராமத்திற்கு அருகாமையில் சென்னைவேலி காடு என்ற பெயரில் ஒரு சிறிய காடு இருந்தது. அதன் விஸ்தீரணம் சுமார் நாலாயிரம் ஏக்கர். அந்தக் காடு அழிக்கப்பட்டு விட்டது. ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைப் பங்கிட்டுத் தந்து, விவசாய காலனிகளை ஏற்படுத்துவதுதான் சர்க்காரின் திட்டம்.

இந்தக் காலனிகளைத் தோற்றுவித்து, நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொள்ளுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவைகளைச் செயலில் ஈடுபடச் செய்வதுதான் சர்க்கார் திட்டத்தின் முதல் அம்சம். இது வரவேற்கத் தக்கதே. ஆனால் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள, கல்வி வாசனையற்ற ஏழை மக்கள் தாமாகவே முன் வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பொதுஜன நலனையே முக்கியமாகக் கருதும் பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்கள் முன் வந்து அக்கறை எடுத்துக் கொண்டால்தான், அது சாத்தியமாகும். இல்லாவிட்டால் குறுகிய மனப்பான்மை படைத்துள்ள வகுப்பு வாதிகளும், மதப் பித்தர்களும், அரசியல் விஷமிகளும் முந்திக்கொண்டு, அப்பாவிகளான ஏழைகளை ஏமாற்றி விடுவார்கள்.

மோரணம் கிராமத்துக்கு அருகில் உருவாகி வரும் காலனி விஷயத்தில் ரோமன் கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டு வருகிறார். வேறு எந்த விதமான நோக்கமுமின்றி, ஏழைகளின் நன்மையையே கருதி அவர் இதில் ஈடுபடுகிறார் என்றால், அதைக் குறித்து யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை.

ஆலைப் பஞ்சத்தால் அடிபட்டோரான வந்தவாசி முதலிய தாலூக்கா ஹரிஜனங்களுக்கு ஆசை காட்டி, அவர்களைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்து, அதற்குப் பிறகு தான் இந்தக் காலனியில் குடியேற்றுவிக்கிறார். இந்தக் காலனியில் இதுவரையில் சேர்ந்துள்ள 37 குடும்பத்தினரும், சமீபத்தில் மதம் மாறிய கிறிஸ்துவர்கள். இந்தக் காலனியில் இன்னும் 47 குடும்பங்களுக்கு இடம் இருக்கிறது. பல ஹரிஜனங்கள் இந்தப் பாதிரியைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் கூட இவர் அவர்களை அனுமதிக்கவில்லை. கிறிஸ்துவர்களை மட்டுமே அனுமதிக்கிறார்.

இப்படி நடப்பதால், இந்தப் பக்கத்து ஹரிஜனங்களிடையில் ஒரு தவறான அபிப்பிராயம் பரவி வருகிறது. "கிறிஸ்துவர்களாகிவிட்டால் இலவசமாக நிலம் கிடைக்கிறது. பாதிரியார் இருக்கிறார். கேட்டால் கொடுக்கிறார்" என்பதுதான்.

ஒரு குடும்பத்தில் ஒரு பையனுக்கு ஸ்காலர்ஷிப்போ, அல்லது ஒருவருக்கு உத்தியோகமோ வாங்கித் தருவதன் மூலமே, கிறிஸ்துவர்களாக மாற்றப்பட்டுள்ள ஹரிஜன சகோதரர்களின் எண்ணிக்கை எண்ணித் தொலையாது. அப்படியிருக்க நிலம் வாங்கித் தரும் சாமர்த்தியம் அல்லது அதிகாரம் தமக்கு உண்டு என்ற அபிப்பிராயத்தைப் பரப்புவதற்கும் இந்தப் பாதிரி

வட்ட மேஜை

★ வழிகாட்டிகள்!

இயற்கை வனப்பு, சரித்திரம், புராணம் இவைகளால் பெயர் பெற்ற இடங்களைக் காண்பிக்கச் சரியான வழிகாட்டிகள் வேண்டும். வழிகாட்டிகளாக இருப்பவர்கள் கல்வியறிவுடனும் அடக்கத்துடனும் இருந்தால்தானே நல்ல வருவாய் அவர்களைத் தேடி வரும். ஆனால் நாங்கள் பார்த்த ஊர்களிலெல்லாம் அநேகர் பணம் பறிப்பதையே குறியாகக் கொண்டிருக்கிறார்கள்; வாய்கூசாமல் ஏது வேண்டுமானாலும் கூறுகிறார்கள்.

மகாபலிபுரத்திற்கு நாங்கள் போயிருந்தபோது வங்காளிப் போர் வீரர்கள் நாலைந்து பேர் மகாபலிபுரத்தின் சிறப்புக்களைக் காண வந்திருந்தனர். அவர்களுக்கு இந்த வழி காட்டிகள் அளித்த தொந்தரவு கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு இடம் காண்பித்தவர்களும் இடையறாது காசு கேட்டுக் கொண்டே வந்தனர். ஒரு வங்காளி நண்பர் என்னிடம் "ஏன் இத்தகைய வழிகாட்டிகளை மாகாண அரசாங்கம் அனுமதிக்கிறது?" என்று சலிப்போடு வினவினார். வங்காளத்தில் உள்ள நிலை எனக்குத் தெரியாது. இருந்தாலும், அவர் கூறியது தமிழ் நாட்டிற்கே ஒரு இழிச் சொல்லாகும்.

தஞ்சாவூர் அரண்மனையின் உள்ளே இருக்கிற சில வழிகாட்டிகள் கொஞ்சமும் மரியாதை யற்ற முறையில் நடந்து கொண்டதைப் பார்த்ததும் என் நண்பர்களுக்கு உடனே அவ்விடத்தை விட்டு நகர்ந்தால் போதுமென்று இருந்தது.

பழனியில் மலைமீது ஏற ஆரம்பித்தோம். திடீரென்று 'பிடி, இதை!' என்ற இடியோசை ஒன்று கேட்டது. எங்கள் எதிரில் உடல் பூராவும் வெண்ணீறு பூசிய சாமியார் ஒருவர் தோன்றி எங்கள் கையில் விபூதியைத் திணித்து, 'ஆண்டவன் இந்த ரூபாய் உடனே வேண்டு மென்கிறான்!' என்று சொன்னபோது, இந்த ஏமாற்று வித்தையைக் கண்டு சிரிப்பதா, அல்லது தமிழ் நாட்டின் நிலை இப்படி ஆகிவிட்டதே என்று அழுவதா என்று தெரியவில்லை!

இதுபோன்ற அனுபவங்கள் இன்னும் பல ஏற்பட்டன. கோயில்கள் பல கொண்ட தமிழ் நாட்டை வெளிநாட்டினர் பலரும் விழைந்து காண வருகின்றனர். ஆங்காங்கே உள்ள வழிகாட்டிகள் நடந்து கொள்வதைப் பார்த்தும் இந்தமாதிரிச் சாமியார்களைப் பார்த்தும்தான் வெளி நாட்டினர் தமிழ் நாட்டின் நிலை, பண்பாடு இவற்றைப் பற்றி அபிப்பிராயம் கொள்வர். அதனால், இம்மாதிரியான வழிகாட்டிகளும் போலிச் சாமியார்களும் யாத்திரை ஸ்தலங்களில் மலிந்து விடாமல் பொது மக்களும் சர்க்காரும் கவனிக்க வேண்டும். வழிகாட்டிகளுக்கு சர்க்காரிலேயே பயிற்சி அளித்து லைசென்சு வழங்குதல் நலம்.

சிதம்பரம்
13—6—50 டி. பாலசுப்பிரமணியன்

○●○

ஆடவர் கவனிப்பார்களா?

நம் நாட்டு இளைஞர்களின் நாகரிகம் மேனாட்டு ஆடை அணிவதிலும், அவர்கள் பழக்க வழக்கங்களைக் கையாளுவதிலுந்தான் முற்போக்கடைந்து வருகிறதே யல்லாது உள்ளத்தில் பண்பாடுடையவர்களாகக் காணப்படவில்லை. பெண்களைக் காணுங்கால் பராசக்தியின் அவதாரமெனக் கொள்ள வேண்டுமென்பதை விடுத்து, சிலர் அறிவிழந்து மிருகங்களாய் நடந்து கொள்கிறார்கள். தற்காலப் பஞ்சப் பிணியை அகற்ற ஆண் பெண் இருபாலரும் பொருளீட்ட வேண்டிய நிலையை யடைந்திருக்கிறோம். நன்கு ஆராயுங்கால், சில குடும்பங்களில் பெண்கள் ஊதியத்தாலேயே குடும்பம் பராமரிக்கப்பட்டு வருவதையும் காண்கிறோம். ஏழை, அனாதை, கைம்பெண் போன்ற அதிர்ஷ்டமற்ற இனத்தினர், தங்கள் கையினாலேயே ஜீவியத்தை நடத்த வேண்டியவர்களா யுள்ளனர். இத்தகையோர்கள் தங்களுக்குள்ள கல்வியின் உதவி கொண்டு உத்தியோகம் செய்யும் பொழுது அவர்கள் அலுவலகத்தில் படும் துன்பத்துக்கும் நரக வேதனைக்கும் வித்தியாசமிருப்பதாகவே தோன்றவில்லை. கல்வி மிக்க சகோதரர்கள் பேதமையுள்ள சகோதரிகளுக்கு உபகாரிகளாயிருந்து கௌரவித்து உற்சாக மூட்டுவதை விடுத்து, அவர்களைக் கேலிப்பேச்சு முதலியன பேசுவதும், கண்ட இடங்களில் தகாதவைகளை எழுதிவைப்பதும், சம்பந்தமற்ற சிலருடன் பிணைத்து அனாமதேயக் கடிதங்கள் எழுதுவதையே முக்கிய அலுவலாகக் கொண்டுள்ளனர்.

பஞ்சத்தின் பொருட்டுப் பொருளீட்ட வரும் ஏழைப் பெண்களின் கௌரவத்தைக் காப்பாற்ற நவயுவர்கள் பண்பாடுடன் நடந்து கொள்வார்களா? பெண்களை உடன் பிறந்த சகோதரிகளாகப் பாவித்துத் தொன்மை வாய்ந்த தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டை உயர்த்துவார்களா?

திருவல்லிக்கேணி
7—6—50 எஸ். காந்தம்

சென்னையை அடைந்த மறுநாள் மாலை நளினியும் ராமமூர்த்தியும் ஹேமாவின் வீட்டிற்கு டாக்ஸியில் புறப்பட்டார்கள். ராமமூர்த்தி வேண்டுமென்றே காரை விட்டு இறங்காமல் "நான் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். நீ போய்ப் பேசி விட்டுக் கால் மணி நேரத்தில் திரும்ப வேண்டும்" என்றான். "சரி" என்று சொல்லி விட்டுக் காரிலிருந்து இறங்கி வீட்டினுள் நுழைந்தாள் நளினி.

அவன் தன்னை வற்புறுத்தி அழைப்பாள் என்று எண்ணிய ராமமூர்த்தி அவள் பேசாமல் போவதைக் கண்டு ஆத்திரத்துடன் காரில் சாய்ந்தான்.

பட்டுப் புடவையின் சலசலப்புக் கேட்டுச் சிந்தனையில் இருந்து விழித்துக் கொண்ட ஹேமாத்ரி தனக்கு எதிரில் ஒரு பெண்ணுருவம் மருண்டபடி நிற்பதைக் கண்டு விழித்தான்.

"இதுதானே ஆசிரியை ஹேமாவின் வீடு?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டாள் நளினி.

"ஆம், இதுதான்! நீங்கள் யார்?"

"நான் இருப்பது செய்யூர். நீங்கள் ஹேமாவின்......" மேலே சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள் நளினி.

செய்யூர் என்று சொன்னதும் ஹேமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. இவள் தான் நளினி என்று திட்டமாகத் தெரிந்து கொண்டான் அவன். கலகல வென்று நகைத்து விட்டு "நீங்கள்தானே நளினி? நிற்கிறீர்களே, உட்காருங்கள்!" என்று நாற்காலியைக் காண்பித்தான்.

கண்களைச் சற்று விரித்த நளினி "ஆம், நான்தான் நளினி. தயவுசெய்து ஹேமாவைக் கூப்பிடுங்கள். நான் அவளைப் பார்க்கத்தான் ஆவலோடு வந்தேன்" என்றாள்.

"நான்தான் ஹேமா. என் முழுப் பெயர் எம். என். ஹேமாத்ரி. நான் ஹேமா என்று கதையில் போடப் போக எல்லோரும் என்னைப் பெண்மணி என்று எண்ணிக் கொள்கிறார்கள். இதற்கு நான் என்ன செய்வது?" என்றான் ஹேமாத்ரி.

நளினியின் உடம்பு ஒரு குலுங்குக் குலுங்கியது. பேசுவதற்கு நா எழவில்லை. மௌனமாகத் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்!" என்றான் ஹேமாத்ரி.

சற்றுத் துணிவை வரவழைத்துக் கொண்ட நளினி "ஹூம்! ஹேமாவைப் பெண் என்று நினைத்துத்தான் உங்களுக்குக் கதைகளும் கடிதங்களும் எழுதி அனுப்பி வந்தேன்; நேரில் உங்களைக் காணவும் வந்தேன். இப்போதுதான் என் தவறு தெரிகிறது. நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வாசற்படியை நோக்கி நடந்தாள்.

பின்னாலேயே வந்தான் ஹேமாத்ரி.

பதட்டமாகக் காருக்கு அருகில் சென்ற நளினி பேசாமல் ஏறிக் கொண்டாள்.

பின்னால் வந்து நின்ற ஹேமாத்ரி காரில் ராமமூர்த்தியைக் கண்டதும் அசைவற்று நின்றான்.

ஆத்திரமடைந்த நளினி, "அண்ணா, இவர்தான் ஹேமா!" என்றாள்.

ராமமூர்த்தியின் சித்தம் கலங்கியது.

"நான் இதுவரையில் உங்களுக்குத் தெரிவிக்காமல் இருந்ததற்கு மன்னிக்க வேண்டும். தயவு செய்து உள்ளே வந்து சற்று நேரமாகிலும் பேசிவிட்டுப் போனால்தான் என் மனம் நிம்மதி அடையும்" என்று கேட்டுக் கொண்டான் ஹேமாத்ரி. அவன் சொல்லை மறுத்துப் போக மனமில்லாமல் ராமமூர்த்தி காரைவிட்டு இறங்கினான். வேறு வழியில்லாமல் நளினியும் இறங்கி அவர்களைத் தொடர்ந்தாள். டிபன் உபசாரத்திற்குப் பிறகு மூவரும் நெடுநாள் பழகியவர்கள் போலாகி விட்டார்கள். ராமமூர்த்தி ஹேமாவின் மேல் காணாமலே கொண்ட காதலை, நளினி ஹேமாத்ரிக்குச் சொல்ல, அவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

நாணமடைந்த ராமமூர்த்தி "ஏன் சார், என்னைக் கேலி செய்கிறீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்! நீங்கள் மட்டும் காணாமல் காதல் கொண்டதில்லையா?" என்றான்.

இந்த நேரிடையான தாக்குதலைச் சமாளிக்க ஹேமாத்ரி நளினியைப் பார்த்தான். அஞ்சனம் தீட்டிய அவள் விழிகள் அவன் பார்வைக்கு அபயமளித்தன.

பெயரிலேயே எழுதினான். நளினி மட்டும் அப்போதைக்கப்போது அவனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டே இருப்பான்.

நளினி ஹேமாவுடன் உறவு பூண்ட விஷயம் முதலில் இருந்தே அவன் அண்ணன் ராமமூர்த்திக்குத் தெரியும். ஹேமாவின் கதை மோகத்தில் மூழ்கிய ராமமூர்த்தி நளினியை மேலும் உற்சாக மூட்டி ஹேமாவுடன் நட்பை வளரச் செய்தான். ஹேமா ஒரு ஆணாக இருக்க முடியும் என்று அவனால் ஊகிக்கவே முடியவில்லை. அவன் கடிதங்களில்கூட ஹேமா என்றுதானே கையெழுத் திடுகிறான்? அப்படியிருக்கச் சந்தேகப்படுவதற்கு என்ன இருக்கிறது?

ஹேமாவுக்கு நளினி எழுதும் ஒவ்வொரு கடிதங்களையும் கதைகளையும் அவனும்கூட இருந்துதான் அனுப்பி வைப்பான். அதற்குப் பதிலாக அடுத்த வாரப் "பிரேமை"யில் வெளியாகும் கதைகளையும் தவறாமல் படிப்பான். அதைப் பற்றி நளினியும் அவனைப் பரிகசிப்பான். "என்ன அண்ணா, ஹேமாவை அரை நிமிஷம் கூட மறக்கமாட்டாய் போலிருக்கிறதே!" என்று கேலியாகப் பேசுவான்.

"நளினி, இதெல்லாம் என்ன விளையாட்டு! என்னமோ உன் சிநேகிதி ஆயிற்றே, கதைகளும் நன்றாக எழுதுகிறாளே என்று நினைத்தால், நீ மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகிறாயே" என்று ஒரே அடியாய் அடித்து அவனை மேலே பேச முடியாமல் செய்து விடுவான் ராமமூர்த்தி.


• • •

ஒரு முறை அவன் சென்னைக்குச் செல்லவேண்டி வந்தது. "என்ன நளினி! நீயும்தான் வாயேன்; உன் சிநேகிதி ஹேமாவைப் பார்த்து விட்டு வரலாம்" என்றான்.

"என் சிநேகிதியைப் பார்க்க உனக்கு ஏன் இத்தனை ஆவல்?" என்று கறுக்கென்று கேட்டு விட்டான் நளினி.

ராமமூர்த்திக்குச் 'சுருக்'கென்று கோபம் வந்தது. "உன் சிநேகிதி கறுப்போ சிவப்போ என்று தெரியாமல் கிடக்கிறாயே, பார்த்துவிட்டு வரலாமே என்று கூப்பிட்டால் நீ இல்லாத அர்த்தமெல்லாம் செய்து கொள்கிறாயே!" என்று இரைந்தான்.

"நான் விளையாட்டிற்குத் தானே சொன்னேன்? எனக்கும்தான் ஹேமாவைப் பார்க்க ஆசை. நானும் உன்னோடு சென்னைக்கு வருகிறேன்" என்று அண்ணனைச் சமாதானப் படுத்தினான்.



கதையும் காதலும்

கஸ்தூரி

ஏழாவது முறையாக அந்தக் கடிதத்தை வாசித்தான் ஹேமாத்ரி :—

"அன்பார்ந்த ஹேமா அவர்களுக்கு,

சென்ற வாரம் வெளியான 'பிரேமை' என்கிற பத்திரிகையில் நீங்கள் எழுதிய 'சாந்தியின் சபதம்' என்கிற கதையைப் படித்தேன். அழுவதா சிரிப்பதா என்று புரியாமல் விழித்தேன்.

உங்கள் கதாநாயகி சாந்தா கதையின் ஆரம்பத்தில், சாகரனை உயிரினும் மேலாகக் காதலிக்கிறாள். நடுவில் சாகரனது நடத்தை சரியில்லாததால் அவனை வெறுத்துப் பிறந்தகத்துக்குப் போய்ச் சேருகிறாள். உயிரினும் மேலாகக் கணவனைக் காதலித்த சாந்தா, கணவனின் கெட்ட நடத்தையைக் கண்டு பிறந்தகம் போய் விடுவாளா? அவனுடன் இருந்து அவனை நல்வழிப் படுத்துவதை விட்டுத் தாய் வீட்டில் என்ன வேலை? கதையின் கடைசி பாகத்தில் தான் செய்த தவறுகளுக்கு மனமார வருந்திய சாகரன், சாந்தாவின் பிறந்தகத்திற்குச் சென்று அவளைக் கெஞ்சி மன்றாடி அழைக்கிறான். ஆறு மாதத்திற்கு முன் கணவனை உயிருக்குயிராகக் காதலித்த சாந்தா ஒரே பிடிவாதமாகச் சாகரனை மன்னிக்க மறுத்து விடுகிறாள். கணவன் மன்றாடியும் மன்னிக்காத ஸ்திரீயும் உண்டா? நம்பத் தகாத கதையாக இருக்கிறதே! தயவு செய்து இதுமாதிரிக் கதைகளை இனி மேல் எழுதாதீர்கள். இதற்குப் பிராயச்சித்தமாக நான் இத்துடன் அனுப்பியிருக்கும் 'தமயந்தியின் தியாகம்' என்கிற கதையை அடுத்த வார 'பிரேமை' இதழில் வெளியிடுங்கள்.

நளினி."

கடிதத்தைப் பத்திரமாக மடித்துத் தனது குறிப்புப் புத்தகத்தின் நடுவில் வைத்துக்கொண்டு மேஜை மேல் இருந்த கதையைப் பிரித்தான் ஹேமாத்ரி. அந்தக் கையெழுத்துப் பிரதியின் எழுத்தழகும் கருத்தழகும் அவன் மனதைக் கவர்ந்தன.

தன்னை வெறுத்த கணவனின் நன்மைக்காகக் கடைசிவரை பாடுபட்டு அவனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கிறாள் நளினியின் கதாபாத்திரமான தமயந்தி.

ஹேமாவுக்குக் கதை பிடித்துத்தான் இருந்தது. அவன் பி. ஏ. வகுப்பில் மூன்றாவது முறை தோற்ற உடன் படிப்பு ஆசையை விட்டுவிட்டுக் கதை எழுதத் தொடங்கினான். அவன் மாமா சங்கரலிங்கம் நடத்தும் "பிரேமை" என்கிற வாரப்பதிப்பில் அடிக்கடி கதைகளை எழுதிவிடுவான். ரஸிக உலகமும் அவன் கதைகளை விரும்பிற்று. ஹேமாவை சங்கரலிங்கம் மேலும் தூண்டி உற்சாகப் படுத்தினார். ஹேமாவும் பொழுது போக்காக எழுதி வந்தான்.

அவன் கதையைச் சிலாகித்து அடிக்கடி ரஸிகர்களிடமிருந்து கடிதம் வரும். ஹேமாத்ரி ஒரு கடிதத்துக்கும் பதில் எழுத மாட்டான். இந்தக் கடிதத்தைக் கண்ட பிறகு அவன் மனம் வேதனையை அடைந்தது. கிராமவாசியான ஒரு பெண் தன் கதையை எத்தனை கண்டித்து எழுதி, அதற்குப் பிராயச்சித்தமாக அவள் முதன் முதல் எழுதிய கதையை வெளியிட வேண்டும் என்றும் எழுதி இருக்கிறாளே என்று திடுக்கிட்டான்.

மனதைத் திடம் பண்ணிக்கொண்டு அந்தக் கதைக்குச் சற்று மெருகு ஏற்றி, "ஹேமநளினி" என்கிற புனைப்பெயர் சூட்டிப் "பிரேமை"க்கு ஆசிரியரான தன் மாமாவுக்கு அனுப்பி விட்டான். அதற்கு அடுத்த வாரம் நளினியிடமிருந்து இரண்டாவது கடிதம் வந்தது. ஆவலுடன் பிரித்தான் ஹேமாத்ரி.

"பிரியமுள்ள ஹேமா!

சென்றவார "பிரேமை"யில் நமது கதையைக் கண்டேன். அதில் சில இடங்களில் திருத்திப் புது மெருகு கொடுத்திருப்பதைக் காண அளவற்ற சந்தோஷமடைந்தேன். உங்கள் பெயருடன் என் பெயரையும் சேர்த்து "ஹேம நளினி" என்று எழுதியிருந்தது ரொம்பப் பொருத்தம். இனியும் நான் எழுதும் கதைகளையெல்லாம் உங்களுக்கே அனுப்புகிறேன். நீங்கள் அவைகளைத் திருத்தி 'ஹேம நளினி' என்கிற பெயரில் வெளியிட்டுக் கொள்வதில் எனக்கு ஆட்சேபமில்லை. உங்கள் நட்பு கிடைத்தது பற்றி எனக்கு மிகவும் பெருமையாகவே இருக்கிறது.

நளினி."

இதற்குப்பிறகு "பிரேமை" பத்திரிகையில் அடிக்கடி ஹேம நளினியின் கதைகள் வெளிவரலாயின.

மேலும் நான்கு மாதங்கள் கழிந்தன. கதை உலகில் ஹேம நளினியின் பெயர் பிரபலமாயிற்று. இப்போதெல்லாம் ஹேமாத்ரி தான் சுயமாக எழுதும் கதையைக் கூட ஹேம நளினி என்கிற

சொன்னாலும் புரியாது. நான் வந்த காரியமே வேறு. நாளைக்கு மறுநாள் அப்பாவுக்கு சஷ்டியப்த பூர்த்தி செய்வதாகத் தீர்மானித்திருக்கிறது. ஆனால், திடீரென்று இரண்டு நாட்களாக அவருக்கு உடம்பு சரியாயில்லை. அம்மா உங்களிடம் ஜாதகத்தைக் காட்டிவிட்டு வரச் சொன்னாள். அதனால்தான் ஓடி வந்தேன்" என்று உண்மையைப் பளிச்சென்று கூறி விட்டேன். என் நினைவுதான் வீட்டிலிருக்கும் என் தந்தையிடமே இருந்ததே!

ஜோசியர் தமது மூக்குக் கண்ணாடியை ஒரு தடவை துடைத்து மாட்டிக் கொண்டு, மீண்டும் ஜாதகத்தின்மீது கண்களைச் செலுத்தினார். ஒரு பென்சிலையும் காகிதத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு, மலாயனுக்கு மட்டும் விளங்கும் வகையில் ஏதோ கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தார். பி. ஏ. வகுப்பு வரையில் கணக்கைப் பிரதான பாடமாக எடுத்து, அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி, டிரிக்னமெட்ரி எல்லாவற்றையும் கரைத்துக் குடித்து முதல் வகுப்பில் தேறியிருந்த எனக்கு, அந்த ஜோசியர் கணக்கு மட்டும் ஏனோ விளங்கவேயில்லை.

நெற்றியில் கை வைத்து வெகு நேரம் யோசித்தார். விரல்களை ஒவ்வொன்றாய் விட்டு, என்னென்னவோ எண்ணினார். அவர் கணக்கை முடித்த பின் என் பக்கம் திரும்பியபோது அவர் முகத்தில் தவழ்ந்த லேசான புன்னகை, துடிதுடிக்கும் என் மனதுக்குச் சற்று சாந்தியை அளித்தது.

"இந்த ஜாதகருக்கு இப்போது சர்த்திராஷ்டமம். அதனாலேதான் கொஞ்சம் படுத்தி வைக்கிறது. நாளை மத்தியானம் இரண்டு மணியோடே எல்லாக் கஷ்டங்களும் நிவர்த்தியாகி விடும். சஷ்டியப்த பூர்த்தி மட்டுந்தானா என்ன? சதாபிஷேகம் கூடச் செய்து கொள்ளத்தான் போகிறார். கவலைப்படாதே, போ!" என்று அடித்துச் சொன்ன ஜோசியரின் கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை வைத்துவிட்டு வீடு திரும்பினேன்.

என்னையே எதிர்பார்த்து வீட்டு வாசலிலேயே நின்றிருந்த என் தாயார் சிரித்தபடியே கூறினாள்: "நல்ல பிள்ளையடா நீ! ஏதாவது ஒண்ணு கொடுத்தால், என்ன, ஏதுன்னு பார்க்க வேண்டாமோ? நான்தான் அவசரத்திலே ஒரு அசட்டுக் காரியம் செய்துட்டேன்னு, நீயும், படிச்சவன் கூட அப்படியே இருக்கயே!" என்றாள்.

நான் ஜோசியர் வீட்டுக்குப் போய் அவரைப் பார்த்து அவரிடம் அப்பாவின் ஜாதகத்தைக் காட்டிப் பலன் கேட்டுக்



" ஜாதகத்திலே ஸ்பஷ்டமா யிருக்கே ...... !"

கொண்டு வந்திருக்கிறேன். ஒரு வார்த்தைகூட அம்மா அதைப் பற்றிக் கேட்காமல் எனக்கு அசட்டுப் பட்டம் கட்டினால் எப்படியிருக்கும்? எனக்கு ரொம்பக் கோபம் வந்தது.

அவள் சொன்னதின் கருத்து விளங்காமல் நான் திகைத்து நின்றது கண்டு அவள் விவரமாகத் தொடர்ந்து சொன்னாள்: "கைத் தவறுதலாக அப்பா ஜாதகத்துக்குப் பதில், வள்ளியூர்ச் சாமியார் ஜாதகத்தை எடுத்துக் கொடுத்து விட்டேன் உன்னிடம். உங்க அப்பாவுக்குத்தான் ஜோசியத்தில் கொஞ்சம் பைத்தியமாச்சே! வள்ளியூர்ச் சாமியாரின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒரு புஸ்தகத்தில் அவரது ஜாதகம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த ஜாதகத்தின் நகல் ஒன்று அப்பா எடுத்து வைத்திருந்தார். அதைத்தான் உன்னிடம் கொடுத்துவிட்டேன். தர்மாமீட்டரை எடுக்க மறுபடியும் பீரோவைக் குடைந்தபோது அப்பா ஜாதகம் கிடைத்து விட்டது" என்று அவள் சொன்னதும் என்னிடமிருந்த வள்ளியூர்ச் சாமியாரின் ஜாதகத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனேன்.

என் ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு, "பரவாயில்லை, அம்மா! கல்யாணமே செய்து கொள்ளாத சன்னியாசிக்கும் ஐந்து குழந்தைகளுக்குத் தகப்பனான ஒரு கிருஹஸ்தருக்கும் ஒரே பலன்தான் சொல்லியிருக்கிறார், ஜோசியர்" என்று சொல்லி மழுப்பியபோது, "அட, பைத்தியமே! இதற்காகவா ஐந்து ரூபாய் தண்டம் அழுதாய்?" என்று என் உள்ளுணர்ச்சி என்னைக் கேலி செய்தது.

பலன் ஒன்றுதான்!

ரா. பாலகிருஷ்ணன்

என் தந்தையின் சஷ்டியப்த பூர்த்திக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்தேறி விட்டன. முகூர்த்தம் வைத்து, நண்பர்கள், உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள்கூட அனுப்பியாகி விட்டது. எந்த வேளையில் முகூர்த்தம் வைத்தார்களோ என்று என் தாயார் வருத்தப் பட்டது போல், முகூர்த்தத்துக்கு இரண்டு நாள் முன்பு என் தந்தை திடீரென்று காயலாவாகப் படுத்து விட்டார். இலேசாக மார்பை வலிக்கிறது என்று சொல்லிப் படுத்தவர் இரண்டு நாட்கள் எழுந்திருக்கவே யில்லை.

டாக்டர் வந்து பார்த்து விட்டு, "அசதி தான்; வேறு ஒன்றுமில்லை. நாளைக்கே மனையில் உட்கார்ந்து கொள்ளுவார், பாருங்களேன்!" என்று தைரியமளித்து விட்டு ஒரு ஊசியையும் போட்டுச் சென்றார். அவர் என்னதான் தைரியம் சொல்லிய போதிலும் என் தாயாரின் மனது மட்டும் சமாதான மடையவில்லை.

எங்கெல்லாமோ தேடி என் தந்தையின் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, "உன் சைக்கிளை எடுத்துக் கொண்டு சித்தமல்லி ஜோசியர் வீட்டுக்குப் போய் இந்த ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லச் சொல்லு. ரொம்ப நன்றாய்ப் பலன் சொல்லுகிறாராம், அவர்" என்றாள் அம்மா.



"சித்தமல்லி ஜோசியர் வாக்கு வேதவாக்கு..."

எனக்கு ஜோசியத்தில் அவ்வளவாக நம்பிக்கையில்லை என்பது அம்மாளுக்குத் தெரிந்திருந்தும் என்னையே இந்தக் காரியத்துக்கு அனுப்புகிறாளே என்று ஒரு கணம் தயங்கினேன். "என்ன அம்மா, ஜோசியம் பார்க்க இதுதானா சமயம்? டாக்டர், அப்பாவை விட்டு அகலக் கூடாது என்று என்னிடம் சொல்லியிருக்கிறார். ஜாதகம், ஜோசியமெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லித் தட்டிக் கழிக்க முயன்றேன்.

ஆனால் அம்மா வழிக்கு வருவதாயில்லை. "இதோ இருக்கு சித்தமல்லி. காதமா, தூரமா? அரை மணியில் போய்விட்டு வரலாம். வேறே யாருடா இருக்கா, குழந்தே? போய்விட்டு வா! எனக்கென்னமோ சித்தமல்லி ஜோசியர் வாக்கு வேதவாக்கா இருக்கு. உம், கிளம்புடா குழந்தே!" என்று சொல்லும் போது, அவள் கண்களின் ஓரங்களில் அரும்பிய நீர்த்துளிகள் என் மனதைக் கரைத்து விட்டன. உடனே சித்தமல்லி ஜோசியர் வீட்டை நோக்கி நடந்தேன்.

நான் போன சமயம் ஜோசியர் வீட்டில் தான் இருந்தார். என் தந்தையின் ஜாதகத்தை வாங்கி அதிலுள்ள கட்டங்களின் மீது பார்வையை ஓட்டினார்.

"ஏண்டாப்பா, குப்புசாமி! நீங்கள் ஐந்து குழந்தைகளல்லவா, உங்க அப்பாவுக்கு?" என்று என்னைக் கேட்டார்.

"ஆமாம்" என்று பதிலிறுத்தேன், சுருக்கமாக.

"உம்; அதுதான் ஜாதகமே சொல்லுகிறதே! பெரிய உத்தியோகம்; கை நிறையச் சம்பளம்; கவலையற்ற வாழ்வு; எப்போதும் சிரித்த முகம்...... எல்லாம் ஸ்பஷ்டமா யிருக்கே ஜாதகத்திலே! இப்போ சந்திரன் திடீரென்று பெயர்ந்து......" என்று அவர் சொல்லி முடிக்கும் வரை எனக்குப் பொறுமை யில்லை.

"ஒரு வார்த்தை. இந்தக் கிரகங்களின் விவகாரமே எனக்குத் தெரியாது;

தேன் என்று தானே எண்ணுவான், இந்தச் சங்கடத்திற்கு இடமில்லாமல் அவளாக இதைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கக்கூடாதா? அவள் கேட்டு நான் உண்மையை மறைக்க முயல வில்லையே? ஒருவேளை அவள் கேட்கப் பயப்பட்டாளோ? அப்படித்தான் கேட்டு, 'மணமானவன்' என்று சொன்னால் அந்த அதிர்ச்சியைத் தன்னால் தாங்க முடியாது என்று எண்ணினாளோ?

கபட நாடகம் நடிக்கிறேன் என்றோ, அவளை ஏமாற்றினதாகவோ எண்ணிக் கொண்டாளானால் அவள் உள்ளம் உடைந்து போகாதா? சினம் மூளாதா? அடியுண்ட நாகமெனப் பின்னால் சீறினால் ஆபத்தாகவல்லவோ முடியும்? அவள் ஆபீஸர். கெட்ட "ரிபோர்ட்" ஏதாவது எழுதி விட்டாளானால் வேலை காயமாகாமல் போனாலும் போகலாம். இந்தச் சங்கடத்திலிருந்து தப்ப என்ன வழியென்று தெரியாமல் என் மனம் படாத பாடு பட்டது.

அவள் மாமாவுக்கு உடம்பு அதிகமாக இருக்கிறது என்று திடீரென்று ஒரு நாள் தந்தி வந்தது. அவள் தாயார் தன் தம்பியைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று துடிக்கவே, தாராவும் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு தன் தாயாருடன் ஊருக்குப் பயணமானாள்.


தாரா லீவில் இருந்த சமயம் "மீரட்டுக்கு ஆள் தேவை. யாராவது போகிறீர்களா?" என்று ஆபீஸில் கேட்டார்கள்.

'இதை விட நல்ல சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்குமா, அவள் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள? அவள் இருக்கும் போது நாம் எங்கேயாவது மாற்றிக் கொள்ள முயன்றால் குறுக்கிடுவாள்; விடமாட்டாள். அவள் இல்லாதபோது நாம் போய்விடுவது தான் நல்லது' என்று எனக்குத் தோன்றியது. ஆகவே "மீரட்டுக்குப் போகிறேன்" என்று எழுதிக் கொடுத்தேன். தாரா வருவதற்குள் என்னை மீரட்டுக்கு மாற்றி விட்டார்கள்.


★

"இதுதான் நான் மீரட்டுக்கு வந்த கதை" என்று கூறி முடித்தார் என் கணவர்.

இதைக் கேட்டதும், 'ஜலமே இல்லாத காட்டுக்குப் போனாலும் போய்விட்டுப் போகிறோம். இத்தகைய ஒரு உத்தமரைக் கணவராக அடையக் கொடுத்து வைத்தோமே, அதுவே போதும்' என்று எண்ணி எண்ணி என் உள்ளம் பூரித்தது.



பெரியவருக்கு நோய் கண்டது. டாக்டர் வந்து பரிசோதனை செய்தார். வியாதிக்கு ஒரு புதுப் பெயர் சொல்லி அந்த வியாதியாக இருக்கலாம் என்றார்.



மற்றொரு டாக்டர் வந்து பார்த்தார். அந்த வியாதி இல்லை என்று சொல்லி வேறு ஒரு பெயர் சொல்லி அந்த நோய்தான் என்றார்.



இதுமாதிரி அநேக டாக்டர்கள் வந்து, வியாதி என்ன என்பதைப்பற்றின அபிப்பிராயங்களை வாதித்தார்கள்.



யமதூதரும் போய்ப் பெரியவர் உயிரைக் கொண்டு வந்து விட்டார். 'பெரியவருக்கு என்ன வியாதி எழுதிக்கொள்ள வேண்டும்,' என்று சித்திரகுப்தர் கேட்டார். 'தெரியாது. டாக்டர்கள் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.' என்றார்.

வேண்டியமட்டும் அழுதாகி விட்டது. தினப்பத்திரிகை படிக்கவே மனம் வருவதில்லை. தினமும் ஆபீஸ் விட்டதும் என்கூடவே வந்துவிடுங்கள். நம் வீட்டிலேயே டிபன் சாப்பிட்டுவிட்டு நாம் பந்தாடுவோம்'' என்றாள் தாரா.

அவளோ ஆபீஸர். நானோ ஆடிட்டர். அவள் சொல்லுவதோ, கேட்பதோ, வேண்டுகோளாக இருந்தாலும், உத்தரவு போல் கீழ்ப்படிய வேண்டியிருந்ததே தவிர ஒன்றையும் மறுத்துப் பேச முடியவில்லை. அவள் சொன்னதையெல்லாம் 'சரி' 'சரி' என்று கேட்டுக் கொண்டிருந்தேனே தவிர, என் விருப்பையும், வெறுப்பையும் அவளிடம் சொல்ல எனக்குத் துணிவு வரவில்லை. ஆகவே பூப்பந்து விளையாட ஒப்புக் கொண்டேன்.

''இதுதான் சுமாராக ஆடும் ஆட்டமோ? உங்களது பிரமாதமான விளையாட்டினால் என்னைத் திக்கு முக்காட வைத்து விட்டீர்களே! உங்கள் 'கட்'டுகள் எல்லாம் ஜோராக இருக்கின்றன. நீங்கள் கண்டிப்பாகத் தினமும் தவறாமல் விளையாட வரவேண்டும்'' என்றாள் முதல் நாள் பந்தாட்டத்திற்குப் பிறகு தாரா.

''ஓட்டலில் சாப்பிட்டு விட்டு ரூமில் என்ன செய்யப் போகிறீர்கள்? இன்றைக்கு இங்கேயே சாப்பிட்டு விடுங்கள். அம்மாவும் வருகிறேன் என்கிறாள். ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போய்விட்டு வரலாம்'' என்றாள் இன்னொரு நாள்.

''சரி'' என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

சில சமயம் அவள் தாயார் வராமல் போனாலும் ''நாம் போவோம்'' என்று என் அறைக்கு வந்து என்னைச் சினிமாவுக்குக் கூப்பிடுவாள்.

ஒரு நாள் நான் ஆடுவதைப் போல அவள் ஆடுவதற்குப் பிரயத்தனப்பட்டாள். அப்படி ஆடும்போது ஒரு சமயம், சற்றும் எதிர்பாராத விதம் ஓங்கிப் பந்தை அடித்தாள். பந்து என் இடது கண்ணில் பலமாகப் பட்டுவிட்டது. 'அம்மா' என்று அலறி அப்படியே மட்டையைக் கீழே போட்டு விட்டு, கண்ணைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்து விட்டேன். தாரா பதறிக் கொண்டு வலைக்கு மறுபக்கத்திலிருந்து ஓடி வந்தாள். மண்டியிட்டு, பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, புடவைத் தலைப்பைச் சுருட்டி ஒத்தினாள். அவள் தன் கையினால் என்னை அணைத்த வண்ணம் கண்ணில் ஒத்தும்போது என் உடம்பு புல்லரித்தது. 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று அவள் நூறு தரமாவது அப்பொழுது கேட்டிருப்பாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு என் கண் உபாதையினால் ஒரு வாரம் நாங்கள் பந்து விளையாடவே இல்லை.

★

மணமாகாத ஒரு அழகான யுவதியோடு என்னதான் அவள் என்னைவிட உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தாலும், நான் நெருங்கிப் பழகினதைப் பற்றி ஆபீஸில் பலர் பலவிதமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் நான் மட்டும் தனியாக ஆபீசுக்குப் போனேன். தாராவோடு தினமும் ஆபீசுக்குப் போகும் நான், 'கண்ட்ரோல'ருக்கு அனுப்ப வேண்டிய அவசரக் கேஸ் ஒன்று இருந்ததால், அன்று அவளுக்கு முன்னால் போக வேண்டியிருந்தது.

''என்ன மிஸ்டர், விங் ஆபீஸர் மட்டும் போகிறார்? மிஸஸ் விங் ஆபீஸரை காணோமே?'' என்று இரண்டுபேர் பின்னால் கேலியாகச் சொன்னது என் காதில் விழுந்தது.

இதையும் கேட்ட பிறகு என் மனம் திடுக்கிட்டது.

'ஓட்டலில் சாப்பிடுகிறேன்' என்று சொன்னதைத் தப்பாக எடுத்துக்கொண்டு விடப்போகிறாள்? மணமாகாதவன் என்று எண்ணி இப்படி நடக்கிறாளோ, என்னவோ? வீணாக ஏன் அவள் உள்ளத்திலே ஈடேற முடியாத ஆசைக்கு இடம் கொடுக்க வேண்டும்? 'எனக்கு மணமாகி விட்டது' என்று சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். ஒவ்வொரு தரமும் சொல்ல வாயெடுக்கும் போது வார்த்தை வெளி வராமலே தடைப்பட்டுப் போகும். அவள் முந்திக் கொண்டு எதையாவது சொல்லுமுன், நான் முந்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். அவள் மோகனப் புன்னகைக்கோ, சரள சுபாவத்திற்கோ, அல்லது வேறு எதற்காகவோ, நான் அடிமையாகி உண்மையை மறைக்க முயன்றேன் என்று சொல்வதற்கில்லை. எப்படிச் சொல்வது என்று புரியாததால்தான் பேசாமலிருந்தேன்.

அவள் உள்ளம் ஆனந்த நர்த்தனம் செய்து கொண்டிருக்கும்போது இந்த விஷயத்தை எப்படி வெளியிடுவது என்று தயங்கினேன்.

அப்படியே நான் சொல்லாமல் தயங்கினாலும் ஊர் வாயை மூட முடியுமா? யாராவது பேச்சு வாக்கில் 'அவன் மணமானவன்' என்று விஷயம் தெரியாமல் சொல்லி விட்டால் என்ன செய்வது? வஞ்சகன், உண்மையை மறைத்து வைத்

களைக் கேட்டான். அதற்குச் சரியான பதில் நான் சொன்னதும், நாங்கள் எழுதியது ஒன்றையும் திருத்தாமல், அப்படியே கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டான். எல்லோருக்கும் ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக, இல்லாத சந்தேகங்களை எல்லாம் கிளப்பி, வேண்டாத கேள்விகளைக் கேட்டு, தர்க்கம் செய்து, கடிதங்களுக்கு எழுதும் பதிலை ஒப்புக் கொள்ளாமல் திருப்பி அனுப்பும் அவன் ஒரு வார்த்தைகூட அடிக்காமல் கையெழுத்துப் போட்டது ஆபீஸிலுள்ள அனைவருக்கும் அதிசயமாக இருந்தது.

அன்றையிலிருந்து என்பாடு ஆபத்தாகி விட்டது. என்னை அடிக்கடி கூப்பிட்டனுப்பி "இதைக் கொஞ்சம் பாருங்கள். நீங்கள் பார்த்தால் எனக்குத் திருப்தியாயிருக்கிறது" என்று எனக்குச் சம்பந்தம் இல்லாத, பிறர் செய்த வேலைகளையும் என்னைப் பார்க்கச் சொன்னான் தாரா. இதை யறிந்த நண்பர்கள் கஷ்டமான கடிதமாக இருந்து அது தாராவுக்குப் போகவேண்டியிருந்தால், அதை என்னிடம் கொடுத்து விடுவார்கள். என் கையெழுத்திருந்தால் எந்தக் கேஸையும் அவன் ஆட்சேபம் ஒன்றும் சொல்லாமல், உடனே கையெழுத்துப் போட்டு விடுவான் என்ற காரணத்தினால்தான். இதனால் பொறுப்பும், தொந்தரவும் எனக்கு அதிகமாயிற்று.

★

"மணி ஐந்து ஆனதும் போய்விடாதீர்கள். கொஞ்சம் இருங்கள்" என்று ஒருநாள் ஆபீஸ் பியூனிடம் தாரா ஒரு சீட்டு எழுதியனுப்பினான். நான் காத்துக் கொண்டிருந்தேன். எல்லோரும் போன பிறகு "சைக்கிளில் தானே போகிறீர்கள்? வாருங்கள், போவோம்!" என்று என்னை வந்து கூப்பிட்டான் தாரா.

"ஆபீஸ் வருஷாந்திர 'பூப் பந்து' விளையாட்டுப் போட்டிக்கு உங்கள் பெயரைக் கொடுத்திருக்கிறீர்களே? நீங்கள் நன்றாக விளையாடுவீர்களா?" என்று சைக்கிளில் போகும்போது கேட்டான் அவன்.

"சுமாராக விளையாடுவேன்" என்றேன்.

"எனக்கும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. என் வீட்டில் 'வலை' இருக்கிறது. விளையாடச் சரியான ஆசாமிதான் கிடைக்கவில்லை. விளையாடிப் பழக்கப்படுத்திக் கொள்வோம் என்று எண்ணித்தான் உங்களை இருக்கச்சொன்னேன். மேலும் மாலை நேரத்தில் பொழுது போவது சிரமமாக இருக்கிறது" என்று அவன் சொன்னான்.

"நம் ஆபீஸ் 'லைப்ரரி'யில் எத்தனையோ நல்ல புஸ்தகங்கள் இருக்கின்றன. உங்களுக்குப் பொழுது போகாவிட்டால் வாங்கிப் படிக்கலாமே? அல்லது ஒரு நல்ல 'ரேடியோ' செட் வாங்கினீர்களானால் பொழுது போவதே தெரியாது" என்று மறைமுகமாகத் தட்டிக் கழிக்கப் பார்த்தேன்.

"எனக்கு அதிலெல்லாம் இப்பொழுது மனம் செல்லவில்லை. புத்தகம், புத்தகம் என்று புத்தகத்தைக் கட்டிக்கொண்டு



அவர் பயித்தியமா?

ராஜலட்சுமி

"என்னை மீரட்டுக்கு மாற்றி விட்டார்கள்" என்று திடுதிப்பென்று அவர் எழுதியிருந்தார்.

அப்பொழுது நான் பாபுவைப் பிரசவிப்பதற்காக ஊருக்கு வந்திருந்தேன். வீடு கிடைப்பதோ இந்தக் காலத்தில் குதிரைக் கொம்பாக இருக்கிறது. வீட்டிற்காக ஜனங்கள் திண்டாடுவதைச் சொல்லவே முடியாது. ஜல வசதியும் 'எலக்ட்ரிக் லைட்'டும் உள்ள வீட்டை விட்டுப் போகவேண்டி வருகிறதே. அதிலும் பூனாவைப் போன்ற நல்ல சீதோஷ்ண ஸ்திதியுள்ள ஊரை விட்டுப் போகவேண்டி வந்ததே என்று நான் ரொம்பவும் அங்கலாய்த்தேன். மீரட்டில் எப்பொழுது வீடு கிடைத்து நாம் மறுபடியும் குடித்தனம் செய்யப்போகிறோம் என்று கவலையாக இருந்தது.

ஒரு வருஷம் சல்லடை போட்டுச் சலித்த பிறகு மீரட்டில் ஒரு 'ரூம்' கிடைத்தது. கைக்குழந்தையோடு அங்கே குடித்தனம் செய்யப் போனேன். அந்த ஊரில் ஜலத்திற்குக் கஷ்டப்பட்ட போதெல்லாம் நான் பூனாவில் இருந்த ஜலவசதியைப் பற்றி அவரிடம் சொல்வது உண்டு.

"ராஜம்! மீரட்டுக்கு நானாக மாற்றிக் கொண்டு வந்தேன். ஆபீஸில் அவர்களாக என்னை மாற்றவில்லை" என்றார் ஒரு நாள் அவர்.

"நிஜமாகவா?" என்றேன் நான் நம்ப முடியாமல்.

"ஆமாம்!" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"அப்போ உங்களுக்குக் கட்டாயமாகப் பயித்தியம்தான் பிடித்திருக்க வேண்டும். நல்ல வீட்டை விட்டு யாராவது வருவானா?"

"எனக்கும்தான் மனம் வரவில்லை, ராஜம்! நான் மாற்றிக் கொண்டதற்குக் காரணமில்லாமல் இல்லை."

"என்ன காரணமோ? சம்பளம் உயர்ந்ததா? ஊருக்குக் கிட்டே இருக்கா? இல்லை, புண்ணிய க்ஷேத்திரமா தட்டுக் கெட்டுப் போகிறது!"


"அதெல்லாம் இல்லை, ராஜம்! ஆனால் நான் மாற்றிக் கொண்டதற்குக் காரணம் இருக்கிறதே. அது பெரிய கதை" என்று அவர் சொன்னார்.

"எனக்கு 'விங் ஆபீஸ'ராகக் கோபால கிருஷ்ணன் என்று ஒருவர் இருந்தார் என்று சொன்னேனே, உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அவரை அலகாபாத்துக்கு மாற்றி விட்டார்கள். அவர் போன பிறகு, ஐ. ஏ. அண்டு ஏ.எஸ். எல் பாஸ் பண்ணின ஒருத்தி எங்களுக்கு 'விங் ஆபீஸ'ராக வந்தாள். அவள் பெயர் தாரா. எங்கள் இலாகாவுக்கு அவள் புதிது. வேலை பயின்று கொண்டிருந்தாள். அதனால் அவளுக்கு எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் வந்துவிடும். விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கும். சட்ட புஸ்தகத்தை எடுத்துக் காட்ட வேண்டும். 'இந்தப் பதிலுக்கு இந்த அதிகாரம் (அதாரட்டி)' என்று ஒவ்வொன்றையும் அச்சு வேறு ஆணி வேறாக எடுத்து விளக்காமல் போனால் அவள் கையெழுத்துப் போட இசையமாட்டாள்.

மிலிடரி ஆபீஸர்களிடமிருந்து அவர்கள் குடியிருக்கும் சர்க்கார் வீடுகளுக்கு அவர்களுடைய சம்பளத்திலிருந்து வாடகையை வசூலிப்பதுதான் நாங்கள் செய்யும் வேலையிலேயே ரொம்பவும் கஷ்டமான வேலை. எல்லாச் சந்தேகமும் தகராறும் தப்பும் இந்த வாடகை விஷயத்திலேதான் அநேகமாக ஏற்படும். என்னிடம் அந்த மாதிரி ஒரு கஷ்டமான வாடகை கேஸ் இருந்தது. அது ஒரு ராணுவ தளபதியாகிய மேஜரினுடையது. அவர் வாடகை அதிகமாகத் தம் சம்பளத்தில் பிடித்து விட்டதாகப் புகார் செய்து பெரிய கடிதம் ஒன்று எழுதியிருந்தார். அந்தக் கேஸைத் தாரா தன்னிடம் காண்பிக்கச் சொல்லியிருந்தாள். ஆனால் அதைப் படித்ததும் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சூப்பரின்டெண்டைக் கூப்பிட்டனுப்பினாள். அவர் புதிய ஆசாமி. இரண்டு நாளைக்கு முன்புதான் அவர் வேறு இடத்திலிருந்து மாறி அங்கே வந்திருந்தார். அவர் விளக்கிச் சொன்னது தாராவுக்குப் பிடிபடவில்லை. "நீங்கள் இந்த ஆபீஸின் கணக்கை வைத்துக் கொண்டிருக்கும் ஆடிட்டரை அனுப்பி வையுங்கள்" என்று கூறி அனுப்பி விட்டாள். ஆகவே நான் போய்ச் சிக்கல்களையெல்லாம் விளக்கிச் சொல்ல வேண்டி வந்தது. மிகவும் பயந்துகொண்டு 'விங் ஆபீஸ'ரிடம் போனேன். கேஸை முதலிலிருந்து விளக்கினதும், அவள் தன் சந்தேகங்

உங்கள் சருமம் ஒவ்வொரு தினமும் அதிக அழகைப் பெறுகிறது





ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும் புது அழகும் தருகிறது

தினமும் குறைந்தபக்ஷம் இரண்டு தடவையாவது ரெக்ஸோனா சோப் உபயோகியுங்கள். கேடில் அடங்கியுள்ள அதன் நுரையை மெதுவாக சருமத்தில்தடவி பிறகு கழுவுங்கள். ரெக்ஸோனாவிலுள்ள கேடில் உங்கள் சருமத்தை சுத்தமாகவும் மழமழப்பாகவும் புத்துணர்ச்சியுடையதாகவும் செய்யும். மேலும் புதிய ஆரோக்கியத்தையும் புதிய சௌந்தரியத்தையும் அளிக்கும். கேடில் உங்கள் சருமத்தின் சுத்தத்தையும் மலர்ச்சியையும் மேம்படுத்துவதோடல்லாமல், சூட்டிலும், குளிரிலும், காற்றிலும், புழுதியிலும் சருமத்தை மாசற்றதாகவும் சௌந்தரியமுடையதாகவும் இருக்கச்செய்கிறது.

ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே!



R.P. 46A-172 TM

நான் சபேசன் குடும்பத்தைப் பிரிய வேண்டுமா? முகம் காணாத வேற்று மனிதர்களை வரவேற்க வேண்டுமா? அவர்களுடன் தொடர்பு கொண்ட கடைசி நாளை என்றும் மறக்க முடியாது.

படங்களை எல்லாம் கழற்றி வைத்தார்கள். சாமான்களை எல்லாம் மூட்டை கட்டினார்கள். நான் இரண்டு வருஷமாகச் சுமந்த சாமான்களை அப்புறப் படுத்தும் போது என் உயிரை அணு அணுவாக நீக்குவது போல் இருந்தது. சுந்தரி, தான் படித்த அறையைப் பரிதாபமாகப் பார்த்தாள். சிறுவர்கள் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெகு நேரம் நின்றார்கள். பிரிந்து போகும் குழந்தை கமலத்தைக் கொய்யா மரம் தடுப்பது போல் சலசலத்தது. கடைசியாக எல்லோரது காலடிகளும் என் 'காம்பவுண்'டை விட்டு வெளியே வந்தன. அவர்கள் முகங்களில் தேங்கி நின்ற பிரிவின் ஏக்கத்தை என்னால் சகிக்க முடியவில்லை. சோகத்துடன் ஜன்னல் கதவுகளைப் 'படால்' என மூடிக்கொண்டேன். சாமான் வண்டி முன்னே போய்விட்டது. அவர்களும் ஜட்கா வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டி புறப்பட்டு விட்டது. குதிரையின் குளம்படிகளும் சக்கரங்கள் உருளும் ஓசையும் சலங்கைகளின் சத்தமும் தூரத்தே கேட்கின்றன. அதோ, அந்த ஒலியும் தேய்ந்து ஓய்ந்து விட்டது.

இனி .....?

வேற்று மனிதர்களை வரவேற்க வேண்டும். சபேசனின் குடும்பத்தைப் போல் மறுபடி வேறொன்றை இனிமேல் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை!

காலக்ஷேபம்

பாக்கி விஷயம்

ஒரு கடை முதலாளி பிச்சைக்காரன் ஒருவனுக்குத் தினந்தோறும் ஓரணா கொடுப்பது வழக்கம். அவர் ஒரு தடவை வெளியூருக்குப் போயிருந்தார். திரும்பிவர ஒரு மாதம் ஆயிற்று. அவர் வந்தவுடனே பிச்சைக்காரன், அவரைப் பார்த்து, சற்றுக் கண்டிப்பான குரலில், "என்ன ஸேட், நீங்கள் எனக்கு இரண்டு ரூபாய் பாக்கி தர வேண்டுமே!" என்றான்.

★

தூங்கினது யார்?

நாலு வயதுப் பயல் மணி ஒருநாள் இரவு மணி ஒன்பது ஆகியும் தூங்காமல் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தான். அப்பா அவனைத் தூங்கப் பண்ணுவதாகச் சொல்லி மாடிக்குத் தூக்கிக்கொண்டு போனார். பிறகு வெகு நேரம் வரையில் பேச்சு மூச்சு இல்லை. மணி பத்து ஆகிவிட்டது. மாடிப் படியில் மெள்ள ஆள் இறங்கி வரும் காலடிச் சத்தம் கேட்டது. 'சரி, அவர் மணியைத் தூங்கப் பண்ணி விட்டார்' என்று நினைத்து அம்மா சந்தோஷப் பட்டாள்.

அம்மா :—குழந்தை தூங்கிவிட்டானா?

மணி :—உஷ், சத்தம் போடாதே, அம்மா! அப்பா மாடியில் தூங்குகிறார்!

உதவி!

உபாத்தியாயர் :— பாடத்தைக் கவனிக்காமல் என்னடா செய்து கொண்டிருக்கிறாய்?

சிறுவன் :—கடவுளின் படம் வரைந்து கொண்டிருக்கிறேன், ஸார்!

உபாத்தியாயர் :—கடவுளின் படமா? அதை நீ வரையக் கூடாது. கடவுள் எப்படி இருப்பார் என்று இதுவரையில் யாருமே பார்த்ததில்லை, தெரிந்ததா?

சிறுவன் :—அது சரி, ஸார்! அதனால் தான் நான் இந்தப் படத்தை வரைகிறேன். அவர் எப்படி இருப்பார் என்பதை இதைப் பார்த்து எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்.

★

சரிதான்!

ஒரு ரயில்வே உத்தியோகஸ்தரை ஜூரியாகப் போட்டிருப்பதாக உத்தரவு வந்தது. உடனே அவர் நீதிபதியைத் தனியாகப் போய்ப் பார்த்து, தாம் ஜூரியாக இருக்க முடியாது என்றும், தமக்கு ஆபீஸில் வேலை அதிகம் இருப்பதாகவும் சொன்னார்.

நீதிபதி :—நீங்கள் இல்லாவிட்டால் ஆபீஸில் வேலை நடக்காது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

அவர் :—வேலை நடந்துவிடும். ஆனால் அது அவர்களுக்குத் தெரியக் கூடாது!

இருமலையும் தான் எதிரொலித்தன. முன் போல் அவரால் அதிகமாகக் கத்த முடியவில்லை. அவ் வருஷம் கல்லூரி மூடுவதற்குள் உழைப்பும் இருமலும் அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டன. முன்பு வீட்டிலே தேங்கி நின்ற கலகலப்பு மறைந்தது. நிலவி நின்ற மகிழ்ச்சி நீங்கிப் பயங்கர அமைதி என் அறைகளில் சூழ்ந்தது.

கல்லூரி திறந்தார்கள். சபேசனால் வேலைக்குப் போக முடியவில்லை. முதலில் மூன்று மாதம் ரஜா வாங்கிக் கொண்டார். குறையும் என்று எதிர்பார்த்த இருமல் காசத்தில் போய் நின்றது. ராஜம் வேலைக்கே முழுக்குப் போடும்படி வேண்டினாள். அப்படிச் செய்தால் வீடு எப்படி நடக்கும்? காலேஜ் 'பிரின்ஸ்பா'லே பல வருஷ உழைப்பையும், ஆசிரியரின் உடல் இளைப்பையும் கவனித்துப் பாதி சம்பளத்துடன் ஒரு வருஷ விடுமுறை கொடுக்க ஒப்புக் கொண்டார். ஓய்வு கிடைத்தது. உடல் தேறலாம். ஆனால் பாதியாகக் குறைந்து போன வருமானத்தில் மாடிவீட்டில் வாசம் செய்து குடும்பப் படகை நடத்த முடியுமா? மனைவியை அருகே அழைத்தார். 'டுடோரியல் காலேஜ்' வேலையை மாத்திரம் கவனித்துக் கொள்வதாகக் கூறினார். ராஜம் அழுது விட்டாள். சபேசன் சமாதானங்கள் சொன்னார். மனைவி கேட்கவில்லை. மக்கள் மறுத்தார்கள். ஆயினும் அவர் பள்ளிக்கூட மாணவனின் பிடிவாதம் காட்டினார்.

ராஜம் ஒரு நாள் புருஷனைப் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி மன்றாடினாள். சபேசன் வெகு நேரம் மனைவியின் முகத்தையே ஊடுருவிப் பார்த்தார். மெல்ல சிரித்துக் கொண்டே, "நான் முழு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் சொற்ப வரும்படியில், உழைக்காமல் மாடி வீட்டில் வாழ முடியுமா?" என்ற வார்த்தைகள் வெளி வருமுன்னர் நீண்ட இருமல் அவர் அடி வயிற்றிலிருந்து புரண்டு வந்தது. புன்னகை தவழ்ந்த முகத்திலே பயங்கரம் சூழ்ந்தது. விடாமல் இருமல் சூறாவளி போல் வெளி வந்தது. கண்களில் நீர் துளித்தது. எழுந்து போய் வாயில் சேர்ந்த கோழையைத் துப்ப முற்றத்திற்கு ஓடினார். கால் தடுக்கிக் கீழே சாய்ந்தது, அவரது எலும்புக் கூடு. ராஜம் பரபரப்பாகப் பிடித்துக் கொண்டாள். சபேசனால் பேசமுடியவில்லை; அவருக்கு உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுத்து விட்டது; இருதயம் வேகமாகத் துடிதுடித்தது.



ராஜம் கதறி விட்டாள். "மாடி வீட்டு வாசம் போதும்; எனக்குப் புத்தி வந்தது. வருமானத்தை அதிகரிக்க நீங்கள் உயிரையே பணயமாக வைப்பதைப் பார்க்க என்னால் பொறுக்க முடியாது. ஏதாவது முட்டிச்சந்திலேயும் இடிந்து விழுந்த குட்டிச் சுவரைப் பாருங்கள்! குப்பைக் காட்டிலே ஒரு சிறு குடிசையைப் பாருங்கள்! இந்த லீவு நாட்கள் எல்லாம் அங்கே வசித்துவிடலாம்" என்று அவள் என்றுமில்லா உணர்ச்சியுடன் வார்த்தைகளைக் கொட்டினாள்.

சபேசன் கையை அமர்த்தி அதிகம் பேச வேண்டாம் என்று சைகை காட்டினார். சிறிது ஆஸ்வாசப் படுத்திக் கொண்டு, "குட்டிச் சுவரும் வேண்டாம். குப்பைக் குடிசையும் வேண்டாம். காலேஜ் காம்பவுண்'டிற்குள் பேராசிரியர்களுக்கெல்லாம் 'குவார்ட்டர்ஸ்' கட்டித் தர ஏற்பாடு ஆகியிருக்கிறது. வாடகை ஏதோ கொஞ்சம் தான். இனிமேல் திருப்திதானே?" என்று பெருமூச்சுடன் பேசினார். ஆனந்தத்தால் ராஜம் கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய உணர்ச்சிகளை விண்டு பார்க்க அவளால் முடியவில்லை. துக்கமும் மகிழ்ச்சியும் பின்னிக் கொண்டு அவள் சிந்தனை ஓட்டத்திற்குத் தடை விதித்தன.

அவர்கள் சம்பாஷணையைக் கேட்டதுமே என்னை வருத்தம் கவ்விக் கொண்டது.

பார்த்துவிட்டு வந்து. "அப்பா, அப்பா! கொய்யா மரத்திலே பழங்கள் காய்க்கத் தொடங்குதப்பா, வந்து பாரேன்!" என்று சொல்லி அப்பாவின் கையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்து விட்டான்.

"உங்கள் விமர்சனத்தையும் சொல்லி விடுங்கள்!" என்றாள் மனைவி.

"வாசல் புறமிருக்கும் அறை ஒன்று போதும், வருபவர்களை வரவேற்க!" என்றார் பேராசிரியர்.

"மற்றதெல்லாம் எனக்கு!" என்று சொல்லிச் சிரித்தான் ராஜும். "அம்மாவுக்கு இத்தனை இடமா, அப்பா?" என்று உண்மையான சந்தேகத்துடன் கமலம் கேட்டாள். மொத்தத்தில் நான் முழுக் குடும்பத்தினரின் ஒவ்வொரு இதய அறைகளிலும் எனக்குத் தனி இடம் பிடித்துக் கொண்டேன்.

அடுத்த வாரம் அக்குடும்பம் குடி வந்து விட்டது. ஆசிரியர் சபேசன் மக்கள், மிருகம் இவற்றின் மனோதத்துவத்தை மட்டும்தான் அறிந்தவர் என்று நினைத்தேன். ஆனால் அது தவறு என்று தெரிந்தது. என்னைப் போன்ற ஜடப் பொருள்களின் உள்ளத்தையும் அல்லவா அவர் உணர்ந்து வைத்திருந்தார். அறைகளிலெல்லாம் அழகான படங்களை மாட்டினார். மறந்தும் கூட அவர் சுவர்களை அசிங்கப் படுத்தியது கிடையாது. குழந்தைகள் மட்டும் என்ன? ஒரு பென்சிலால், சாக்குக் கட்டியால் கிறுக்குவார்களா? நான்கு பேரும் போட்டி போட்டுக் கொண்டு என்னை அழகு படுத்துவதைப் பார்க்கவேண்டுமே! தரை, தோட்டம், சுற்றுப் புறம் எங்கும் சுத்தம் தான். அசுத்தமே கிடையாது.

பல நாள் வரையில் வீட்டிலே சந்தோஷம் நிரம்பி நின்றது. ஒரு நாள் ராஜும் வருத்தமாகக் காணப்பட்டான். காரணம், பிறகு தான் விளங்கியது.

"காரை விற்று விட்டீர்களா? என்னிடம் சொல்லவே இல்லையே! ஏன் விற்றீர்கள்?" என்று சபேசனை ஒருநாள் ராஜும் சோகத்துடன் கேட்டான்.

"இது கூட அறிந்து கொள்ள முடியவில்லையா, ராஜும்?" என்று அவர் சலிப்பாகப் பேசியது எனக்குப் பிரமிப்பை அளித்தது.

வெகு நேரம் இருவரும் பேசவே இல்லை. சோர்வுடன் சபேசன் நாற்காலியில் கண்ணை மூடிக் கொண்டு சாய்ந்திருந்தார். மெல்ல ராஜும் பின்னால் வந்து நின்றான். கண்களில் நீர் பெருக, குரல் தழுதழுக்க "என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான். சபேசன் தம் மனைவியின் உள்ளம் கஷ்டப் படுவதைக் கண்டு கொண்டார்.

"எதற்கு மன்னிப்பது, ராஜும்? காரைத் தான் விற்று விட்டோமே! இனி மேல் பணமுடை இருக்காது. மாசம் நூறு ரூபாயாவது மிச்சமாகும்" என்றார்.

"நான் மாடி வீட்டுக்கு வரவேண்டும் என்று நச்சரித்து இருக்காவிட்டால் நீங்கள் ஏன் காரை விற்றிருக்க வேண்டும்? இனிமேல் காலேஜுக்கு பஸ்ஸில்தானே போக வேண்டும்? என்னால்தானே இத்தனை தொல்லைகள்?" என்று ராஜும் உண்மை இரக்கத்துடன் கேட்டான்.

"கூழுக்கும் மீசைக்கும் ஆசைப் பட்டால் என்ன செய்வது, ராஜும்? பஸ்ஸில் போவதனால் என்ன சிரமம்?" என்று மிகவும் சகஜமாகப் பேசினார் சபேசன்.

அப்பொழுதுதான் அவர்களுடைய குறை எனக்குப் புரிந்தது. சபேசனுக்கு ஐந்நூறு ரூபாய் சம்பளம். என் வாடகையே வரும் படியில் கால் பாகத்தை விழுங்கி விடுகிறது. படிக்கும் மூன்று பிள்ளைகளுக்கும் பள்ளிக் கூடச் செலவு மட்டும் நூறுக்கு மேல் போகிறது. இத்தனை செலவுகளுக்கும் இடையில் கார் செலவு வேறு இருந்தால் அவர் எப்படிக் குடும்பம் நடத்த முடியும்?

மற்றொரு நாள் மூத்த பெண் சுந்தரி அம்மாவோடு சண்டை போட்டுக் கொண்



டிருந்தான். அதிலிருந்து எனக்கு விஷயம் மேலும் விளங்கிற்று. முன்பு சபேசன் சுமாரான வீட்டில் வசித்தார். அது பட்டணத்தின் மத்தியில் இருந்தது. பாதி இராத்திரியில்கூடப் பலவகையான சத்தங்கள் காதைத் துளைக்கும். அமைதியே இருக்காது. வீட்டுக்குப் பக்கத்தில் பெரிய கலாய் பூசும் கடை. ஓயாமல் 'டங், டங்' என்று அடிக்கும் சம்மட்டி அடிகள் மண்டை மேல் அடிப்பது போலவே இருக்கும். பகலெல்லாம் கலாச் சாரப் புகை 'குப், குப்' என்று மூக்கை வந்து அடைக்கும். போதாக் குறைக்கு அந்த வீட்டிலேயே வசித்த வீட்டுக்காரக் குடும்பத்தினர் சுத்த அநாகரிகம் பிடித்தவர்கள். அவர்கள் போடும் கூச்சலும் செய்யும் அசுத்தமும் ராஜத்துக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

'குழந்தைகள் நடமாடத் தாராளமான இடம் வேண்டும். புருஷனின் ஆழ்ந்த படிப்பிற்கு அமைதியான சூழ்நிலை வேண்டும். பண்பட்டவர்கள் பக்கத்தில் வசிக்கும் வாய்ப்பு வேண்டும்' என்பதே ராஜத்தின் அவா. பல நாள் சபேசனிடம் தன் குறையை முறை இட்டாள். அவர் 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்று சிரத்தை எடுத்துக் கொள்ளாமலே இருந்தார். தன்னுடைய எண்ணங்கள் வார்த்தைகளாக வெளிப்படு முன்னமேயே அவைகளைச் செயலில் செய்து தன்னைத் திருப்தி செய்யும் மனோதத்துவ நிபுணர், தான் பலதரம் விடுத்த வேண்டுகோளை ஏன் நிறைவேற்ற ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்பது ராஜத்துக்குப் புதிராகவே இருந்தது.

சபேசனுக்கு மட்டும் நல்ல வீட்டில் வசிக்க வேண்டும் என்னும் ஆசை இல்லையா என்ன? இருந்தது. ஆனால் அதற்குக் குறுக்கே நின்றது பணமுடை. மற்றொன்று சென்னையிலேயே வாடகைக்கு வீடு கிடைக்காத குறை. இவைகளை ராஜம் அறிந்து தான் இருந்தாள். தன் கணவன் வேறு வழிகளில் சம்பாதிக்க முடியும் என்று அவள் நிச்சயமாக நம்பினாள். 'அவர் ஏன் புஸ்தகங்கள் எழுதக் கூடாது? பத்திரிகைகளுக்கு ஏன் கட்டுரைகள் அனுப்பலாகாது? ஓய்வு நேரத்திலெல்லாம் சில ரூபாய்கள் அதிகமாகச் சம்பாதிக்க ஏன் வழி தேடலாகாது?' என்றெல்லாம் அவள் வாதித்தாள். கடையிசில் ராஜம் கணவனிடம் பாராமுகமாகக் கூட நடக்க ஆரம்பித்து விட்டாள். எப்படியேனும் அடம் பிடித்துத் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு அவளுடைய பிடிவாதம் வளர்ந்து விட்டதாம், இவைகளை எல்லாம் சொல்லிச் சொல்லி பெண் சுந்தரி அம்மாளை ஏசினாள்.

“உன்னால் தானே அம்மா, அப்பா காலேஜுக்குப் பஸ்ஸில் போக வேண்டும்? எவ்வளவு நேரம் 'பஸ் ஸ்டாண்'டில் வீணாகிறது தெரியுமா?” என்று சுந்தரி ஆத்திரமாகக் கேட்டாள். பாவம், ராஜத்தின் நிலை இரக்கத் தக்கதாக முடிந்தது.

ஒரு வாரம் கழிந்தது. சபேசன் ஒரு சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டு வந்தார். அவருக்கு 'டுடோரியல் காலேஜ்' ஒன்றில் ஆங்கில போதகர் வேலை கிடைத்தது. மாலை ஆறு மணி முதல் எட்டரை மணி வரை வேலை பார்க்க வேண்டும். ஆகையால் தம் வரும்படியை அதிகப்படுத்த அடுத்த நாளிலிருந்து அவர் பேராசிரியர் வேலையைச் செய்ய ஒப்புக் கொண்டார்.

சில நாள் வீட்டுக்குக் கூட வராமல் புதிய வேலைக்குப் போகவேண்டியதாக இருந்தது. இரவு ஒன்பது மணிக்கு வீட்டிற்கு வருவார். முகத்தில் சோர்வு சொட்டும். பதினைந்து நாளுக்குள் அவர் இளைத்து விட்டார். இளமையெல்லாம் வற்றிவிட்ட பருவம். அவரால் நாள் முழுவதும் உழைத்துச் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவரிடம் உற்சாகம் நிறைய இருந்தது, ஓயாமல் உழைப்பதற்கு.

மறுமாதம் வந்தது. மூன்று மாணவர்கள் காலை ஆறு மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுக்கு டியூஷன். எட்டு மணி வரை சபேசன் அநேக விதங்களில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். அவர் போதித்தவை எல்லாவற்றையும் என் அறைச் சுவர்கள் கிரகித்து ஜீரணம் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் மந்த புத்தியுடைய மாணவர்களின் மர மூளையிலே ஆசிரியர் சொன்னவை பதியவே இல்லை. சபேசனின் கழுத்து நரம்புகள் வீங்கியதும், தொண்டைத் தண்ணீர் வற்றியதும், மாதம் நூறு ரூபாய் வந்ததும்தான் பலன்.

ஆறு மாதங்கள் அகன்றன. என் சுவர்களுக்கு இரண்டாம் முறையாகச் சுண்ணாம்பும் அடித்து விட்டார்கள். பேராசிரியர் பாதியாக இளைத்து விட்டார். மழைக் காலம் தொடங்கிற்று. பல நாட்கள் அவர் நனைந்து வீட்டிற்கு வந்தார். கதையை வளர்த்துவானேன்? என் அறைச் சுவர்கள் ஆசிரியரின் போதனையையும் ஓயாத



மாடி வீடு

பாலகுரு

அந்தத் தெருவழியாகப் போகிறவர்களின் கண்வீச்சிலிருந்து நான் தப்பியதே கிடையாது. அவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தேன். ஒவ்வொருவரும் தெருவின் திருப்பம் வரையில் என்னைப் பல கோணங்களிலிருந்தும் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே போவார்கள். ஒரு மாதத்திற்குள் என் அழகை எத்தனை ஆயிரம் ஆயிரம் ஜதைக் கண்கள் துளைத்து விட்டன!

“ஹூம், இங்கே வாழ எந்த மகாராஜன் கொடுத்து வைத்திருக்கிறானோ!” என்று அங்கலாய்ப்போடு பெருமூச்சு விட்டு விட்டுப் போவோர் பலர்.

நான் மாம்பலத்தில் அழகிய மாடி வீடாக உருப்பெறுமுன்னமேயே பலர் என் மேல் கண் வைத்து விட்டார்கள். வீடு கட்ட முதலாளிக்குப் பண உதவி செய்ய வந்தவர்களும், ஆயிரம் ரூபாயோடு ஆறுமாத ‘அட்வான்ஸ்’ முன் பணமாகக் கொடுக்க வந்தவர்களும், பாதி உருவிலேயே விலை பேச வந்தவர்களும்......அப்பப்பா! எவ்வளவு போட்டிகள்! இவைகளுக்கெல்லாம் என் எஜமானர் அசைந்து கொடுக்கவில்லை. கண் கவரும் ‘காம்பவுண்டு’ சூழ்ந்த பங்களாவாகச் சிருஷ்டிக்கப்படுமுன் ஒன்றும் பேச முடியாது என்று அவர் கண்டிப்பாக மறுத்து விட்டார். இதெல்லாம் பழைய காலயக் கதை.

இப்பொழுது எனக்கு இரண்டு வயது பூர்த்தியாகிவிட்டது. என்னிடம் ஒரு குடும்பம் குடிவந்து, வாழ்ந்து என்னைப் பிரிந்தும் ஏழு நாட்கள் ஓடிவிட்டன. மற்றொருவர் கூடப் பேரம் பேசப் படையெடுத்து வந்து விட்டார். இருந்தாலும் என்ன? என்னை விட்டுப் பிரிந்த அந்தத் தங்கமான குடும்பத்தினரைப் போல் மறுபடியும் நான் சந்திப்பேனா என்பதை நினைக்க என் கல் மனம் கூடக் கரைகிறது. கல்லூரிப் பேராசிரியர் தான் எவ்வளவு நல்லவர்? அவர் மனைவி ராஜம் மட்டுமென்ன? குழந்தைகள் என்றால் அவர்கள்தான். நாலும் தங்கக் கம்பிகள். அந்த நாட்களை நினைத்தால்...?

அன்று அவர்கள் வந்து நுழைந்த காட்சிக்கும், திரும்பிப் போன காட்சிக்கும் எத்தனை வேற்றுமை? எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சி பொங்கக் காரில் வந்து இறங்கினார்கள். ‘கலகல’ வென்ற சிரிப்பு, குதிப்பு, கும்மாளம் இவைகளை இன்றும் மறக்க முடியவில்லை. பாவம், அவர்கள் சாமான்களை ஒற்றை மாட்டு வண்டியில் ஏற்றிவிட்டு, ஜட்கா வண்டியில் போனதை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

முழுவதும் சொன்னால்தானே உங்களுக்குத் தெரியும்? சபேசன் ஒரு பேராசிரியர். அக்கல்லூரியிலே மனோதத்துவ நிபுணர். அந்த இலாகாவுக்கு அவர்தான் பெரிய தலை. அவரும் அவர் மனைவி ராஜமும், முதலில் என்னைப் பார்க்க வந்தார்கள். திருப்தியுடன் திரும்பினார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? அடுத்த விடுமுறை நாளில் குடும்பம் முழுவதும் என்னை எடை போட வந்து விட்டது.

காலேஜில் படிக்கும் சபேசனுடைய மூத்த பெண் சுந்தரி, “அப்பா, அப்பா! இந்த அறை என்னுடையது அப்பா! அம்மா, ஜிலுஜிலுப்பான காற்றும் வெளிச்சமும் தோட்டத்துப் பக்கம் பார்வையும் படிக்கச் சரியான இடம், இல்லையா, அம்மா?” என்று தன் விமர்சனத்தை அளிக்க ஆரம்பித்து விட்டாள். அவள் தம்பிகள் இரண்டு பேரும், “உனக்குத்தான் அழகான அறை இருக்கா? எங்களுக்குக் கூடத்தான் இதே மாதிரி ‘ரூம்’ அந்தப் பக்கத்தில் இருக்கிறதே!” என்று குதித்தார்கள். கடைக் குட்டி கமலம், இதற்குள் புழக்கடையைச் சுற்றிப்

குட்டிக் கதை 4

காதல்

அந்தி மயங்கிக் கொண்டிருந்தது; இருள் கவிந்து கொண்டிருந்தது. எல்லாப் புள்ளினங்களும் தங்கள் தங்கள் கூடுகளைத் தேடி வந்து சேர்ந்து விட்டன.

எங்கும் நிசப்தம்.

அந்த நிசப்தத்தில் ஒரே ஒரு குயில் மட்டும் “குக்கூ......குக்கூ......!” என்று கூவிக் கொண்டே இருந்தது.

“இந்தக் குயில் ஏன்தான் இப்படி ஓயாமல் கூவுகிறதோ, தெரியவில்லை!” என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டது ஒரு மயில்.

உலகம் இருளில் மறைந்தது; வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றி மின்னின. அப்பொழுதும் குயில் கூவுவதை நிறுத்தவில்லை.

மயிலுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. அது ஒரு முறை மேலும் கீழும் பார்த்தது. பிறகு, “இவ்வளவு நேரமாகியும் இந்தப் பாழும் குயிலுக்குத் தூக்கம் பிடிக்கவில்லையே!” என்று அது தனக்குள் வெறுப்புடன் கூறிக் கொண்டது.



வெள்ளி முளைத்தது; வானம் வெளுத்தது; புள்ளினங்கள் குதூகலத்துடன் சிறகடித்துக் கூவின. அப்பொழுதும் குயில் கூவுவதை நிறுத்தவில்லை; தொடர்ந்து கூவிக்கொண்டே இருந்தது.

மயிலுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. பொழுது விடிந்ததும் அது நேரே குயிலிடம் சென்று, “ஏன் இப்படி ஓயாமல் ஒழியாமல் கூவிக்கொண்டே இருக்கிறாய்?” என்று கேட்டது.

“நான் என்ன செய்வேன்? என்னுடைய காதலர் என்னை விட்டுப் பிரிந்து எங்கோ சென்று விட்டார். அவருடைய பிரிவை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் கூவிக் கொண்டிருக்கிறேன்” என்று சொல்லிவிட்டு, அது மீண்டும் “குக்கூ......குக்கூ......!” என்று வருந்தி வருந்திக் கூவிற்று.

“ரொம்ப அழகாய்த்தான் இருக்கிறது, உங்கள் காதலும் கத்தலும்!” என்று அலுத்துக் கொண்டே சென்று, காடெல்லாம் திரிந்து, நாளெல்லாம் அலைந்து, அந்தக் குயிலின் காதலனை எப்படியோ கண்டு பிடித்துக் கொண்டு வந்து அதனுடன் சேர்த்து வைத்தது மயில்.

அன்று மாலை.

அந்தி மயங்கிக் கொண்டிருந்தது; இருள் கவிந்து கொண்டிருந்தது; எல்லாப் புள்ளினங்களும் தங்கள் தங்கள் கூடுகளைத் தேடி வந்து சேர்ந்து விட்டன.

எங்கும் நிசப்தம்.

“அப்பாடி! இன்றாவது நிம்மதியாகத் தூங்கலாம்!” என்று எண்ணி மயில் லேசாகத் தன் கண்களை மூடிற்று.

அது கண்களை மூடிற்றோ இல்லையோ, குயில் “குக்கூ......குக்கூ......!” என்று அன்றும் ஏனோ கூவ ஆரம்பித்துவிட்டது!

மயிலுக்கு ஒன்றும் புரியவில்லை. அது அதிசயத்துடன் குயிலுக்கு அருகில் சென்று பார்த்தது. அன்று கூவியது பெண் குயில் அல்ல; ஆண் குயில்!

“குயிலே, குயிலே! நீ ஏன் கூவுகிறாய்?” என்று மயில் கேட்டது.

“மயிலே, மயிலே! நான் என்ன செய்வேன்? என் காதலி என்னைப் பிரிந்து எங்கோ சென்றுவிட்டாள். அவளை நினைத்துத்தான் நான் கூவிக் கொண்டிருக்கிறேன். நீ என்னைத் தேடிக்கொண்டு வந்து சேர்த்தது போல் அவளையும் கொஞ்சம் தேடிக் கொண்டு வந்து சேர்க்க மாட்டாயா?” என்று அங்கலாய்த்தது ஆண் குயில்.



மயில் அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை. உடனே அந்தக் காட்டை விட்டுவிட்டு அது குயில்களே இல்லாத வேறொரு காட்டுக்குக் குடிப் போய்விட்டது! —விந்தன்

டப் பட்டதைக் கொடுத்தாப் போதும்; சந்தோசமா வாங்கிக்குவேன் ..." என்று கெஞ்சினான்.

அவனுடைய வேண்டுகோள் அவரை உருக்கியது. 'ரிக்ஷாவில் ஏறி உட்காரலாமா?' என்று ஒரு கணம் யோசித்தார். ஆனால் அவர் மனம் கேட்கவில்லை.

"நான் ரிக்ஷாவில் ஏறும் வழக்கமில்லை" என்று அவர் தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

பொன்னுசாமி சற்று நேரம்வரை பேசாமல் இருந்தான். பிறகு அவன் சொன்னான்: "இப்படியே எல்லோரும் சொல்லிட்டா எங்க பிழைப்பு என்ன ஆகும்? ஏழைங்களுக்குக் கருணை செய்யறதுன்னா அதுக்கு இதுவா அர்த்தம்? நல்லா வேலையை வாங்கிக்கோங்க; தாராளமாப் பணத்தைக் கொடுங்க. அதை விட்டுட்டு இப்படிச் சொன்னால் நாங்கள் என்ன செய்வது?"

அவன் சொல்லுவதும் அவருக்கு நியாயமாகப் பட்டது. தன்னைப்போல் எல்லோரும் இருந்துவிட்டால் ரிக்ஷாக்காரர்களின் கதி என்னாவது? கடவுள் ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கைக்கு ஒரு வழியைக் காட்டுகிறார். அவனவனும் தனக்கிட்ட தொழிலைச் செய்து ஜீவனம் நடத்துகிறான். இதில் பாப புண்ணியப் பிரச்னைக்கு இடமேது?......மண்டை வெடிக்கும் வெய்யிலில் காய்ந்து கொதித்துப் போயிருக்கும் அவர் மூளைக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதைப் பற்றிச் சிந்திக்க இது சமயமல்ல என்றெண்ணி, "இந்தாப்பா, நீ சொல்லுவது என்னவோ சரி தான்; ஆனால் உனக்காக எனக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்யமுடியாது. ஏதோ என்னால் முடிந்தது இதுதான்; இதை வாங்கிக் கொள்" என்று ஒரு எட்டணாவை அவன் கையில் போட்டு விட்டுப் பிறகு நடையைக் கட்ட ஆரம்பித்தார்.

அவன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மனம் யோசித்துக் கொண்டிருக்கும்போதே கைகள் தாமாக நீண்டு அதை வாங்கிக் கொண்டன.

அவன் யோசித்துப் பார்த்தான். யோசிக்க யோசிக்க அவனுக்கு வியப்பாக இருந்தது. இந்த எட்டணா தன் உழைப்பின் கூலியா, அல்லது வெகுமதியா, பிச்சையா?..." இன்று உனக்கு உழைப்பும் இல்லை; கூலியும் இல்லை. அதற்காக இன்று ஆண்டவன் அளந்த படி எட்டணா. இல்லாவிட்டால் தெருவோடு போகும் ஒருவர் உன்னிடம் ஏன் கருணை காட்டுகிறார்? வீணில் ஏன் கலங்குகிறாய்......?' என்று மனம் சொல்லிற்று.

கையிலிருக்கும் எட்டணாவைப் பார்த்தான். அது இவனையே வெறித்துப் பார்ப்பது போலிருந்தது. ஆண்டவனுக்கு மனமிருந்தால் உன்னிடம் வேலையை வாங்கிக்கொண்டு கூலியைக் கொடுத்திருக்க மாட்டாரா? நீ வாங்கின பிச்சைக் காசுக்கு ஏன் நொண்டிச் சமாதானம் செய்து கொள்ளுகிறாய்? ஆண்டவன் உனக்கு என்ன குறை வைத்திருக்கிறார்? நொண்டியா, முடமா, கூனா, குருடா? உழைத்துச் சம்பாதிக்க முடியுமானால் உயிர் வாழ்; இல்லாவிட்டால் பட்டினி கிடந்து உயிரைவிடு. வெட்கம், மானம் எல்லாவற்றையும் விட்டு ஏன் பிச்சை எடுக்கத் துணிந்தாய்?— என்று அது நிந்திப்பது போலிருந்தது.

அவன் உடல் அவமானத்தால் குன்றியது. உள்ளம் வெதும்பினான். "சாமீ...... சாமீ ......" என்று கதறிக் கொண்டு அவர் பின் ஓடினான். அவர் திரும்பிப் பார்த்தார்.

"சாமீ, நீங்க தர்மவானுங்க. ஏழை மேலே இவ்வளவு கருணை இரக்கறதுக்குக் கும்பிடறேனுங்க. ஆனால் இந்தக் காசை நீங்களே வச்சுக்குங்க" என்று தழுதழுத்த குரலில்—கண்களில் நீர் பொங்கச் சொல்லிக் கொண்டு அதைக் கொடுத்தான்.

அவர் பிரமை பிடித்தவர் போல் ஒன்றுந் தோன்றாதவராய்ப் பதில் பேசாமல் அதை வாங்கிக் கொண்டார்.

போர்டை எடுங்கள்!



சில்க் சட்டைக்காரர் (போலீஸ்காரரிடம்):—ஐயா! திருடர்கள் ஜாக்கிரதை என்று போட்டிருக்கும் இந்தப் போர்டை உடனே கழற்றச் சொல்லுங்கள்! நான் அந்தப் போர்டைப் படித்துக் கொண்டிருந்த போதுதான் யாரோ ஒருவன் என் மணிபர்ஸை 'அபேஸ்' பண்ணிக் கொண்டு போய்விட்டான்!

ரிக்ஷாக்காரன்

[வரதன்]

பங்குனி மாதத்திய நடுப் பகல் வெய்யில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. ரஸ்தாவில் போட்டிருக்கும் தார் உருகிக் கொப்பளித்துக் கொண்டிருந்தது. தப்பித் தவறி வெளியே புறப்பட்டால் மண்டை வெடித்துக் கால் பொசுங்கி விடும் போல இருந்தது.

ரஸ்தாவில் மனித நடமாட்டமே இல்லை. எப்பொழுதாவது வெகு தூரத்திலிருந்து கேட்கும் டிராமின் இரைச்சலையும், காரின் 'ஹாரன்' சத்தத்தையும் தவிர வேறு எந்தச் சந்தடியுமே இல்லை. பூரண நிலவில் பொலிவுற்றிருக்கும் நடு இரவைப் போல் பிரகாசத்துடன் கூடிய அமைதி தேங்கி நின்றது.

வெய்யிலுக்குப் பயந்து கொண்டு வீட்டிற்குள்ளேயே உட்கார்ந்திருக்க எல்லோராலும் முடியுமா? அப்படி உட்கார்ந்திருக்க முடியாதவர்களில் ரிக்ஷாக்காரப் பொன்னுசாமியும் ஒருவன்.

அவனை நம்பி அவன் வயிற்றைத் தவிர வேறு இரண்டு வயிறுகளும் இருந்தன. அவன்தன் வயிற்றைப் பட்டினி போட்டு ஒடுக்கி விடுவான். மற்ற இரண்டு வயிற்றுக்கும் என்ன செய்வது? இன்னும் கொஞ்சம் கட்டாயப்படுத்தினால் இரண்டாவது வயிறான தன் மனைவியையும் வழித்துக் கொண்டு வந்து விடுவான். ஆனால் மூன்றாவது ஆத்மாவிற்கு என்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை.


* * *

ரிக்ஷா வண்டி முதலாளி சுப்பையா செட்டியாருக்கு ஐந்து வண்டிகள் சொந்தமாக இருந்தன. அவற்றிலிருந்து கிடைக்கும் வாடகைப் பணத்தைக் கொண்டு அவர் சென்னையில் வாழ்க்கை நடத்தி வந்தார். ரிக்ஷா இழுப்பவர்களுக்கு வரும்படி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவருக்குக் கவலை இல்லை. அவருக்குச் சேரவேண்டிய தினசரி வாடகை இரண்டு ரூபாயும் நாள் தவறாமல் வந்து விழுந்துவிட வேண்டும். அரைகுறையான வாடகையோ அல்லது சால்ஜாப்பையோ ஏற்றுக் கொள்ளவே மாட்டார். ஒவ்வொன்றிலும் தர்ம நியாயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் முடியுமா? அப்புறம் அவர் பிழைப்பே தகராறுதான். ரிக்ஷா இழுப்பவனுக்கு அவர் கருணை காட்டினால் பிறகு அவருக்கு யார் கருணை காட்டுவார்கள்? ஒன்றுமில்லாதவனை நம்பி ஒரு வண்டியைக் கொடுத்திருப்பதே தர்மம்தான்.

செட்டியாரின் இந்தத் தீர்மானம் பொன்னுசாமிக்கு நன்கு தெரியும். அதனாலேயே பொழுது விடிந்ததும் வண்டியை இழுத்துக் கொண்டு அவன் வெளியே புறப்பட்டான். அன்றைய தினம் அவனுக்குக் கடுமையான காய்ச்சல். போதாக் குறைக்கு வயிற்றுக்கு ஒன்றுமில்லை. இதற்காக ஒரு நாள் நின்று விட்டால் மறு நாளைக்கு முதலாளி 'வண்டியைத் தொடக்கூடாது' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விடுவார். வாரத்தில் ஒன்றிரண்டு நாளாவது அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு விட்டு உயிர் வைத்துக் கொண்டிருப்பதற்கும் வழி இல்லாமற் போய்விடும். தெருத் தெருவாக வீதிவீதியாக வண்டியை இழுத்துக் கொண்டு மெதுவாக நடந்து சென்றான் பொன்னுசாமி. நேரம் சென்று கொண்டே இருந்தது. அன்று சோதனையாக ஒரு 'ஸவாரி'யும் கிடைக்கவில்லை. கடைசியில் மிகவும் களைத்துப் போய் ரஸ்தா ஓரத்திலுள்ள ஒரு மரத்து நிழலில் வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே படுத்தான். நெற்றியிலிருந்து ஊற்றுக் கண்போல் வியர்வை பெருகிக் கொண்டிருந்தது. இடுப்பில் கட்டியிருந்த அரை நிஜாரும் உடலை மூடியிருந்த பாதி கிழிந்த சட்டையும் வியர்வையில் நனைந்திருந்தன. தலையில் அழுக்கடைந்து பார்க்கச் சகியாத ஒரு தொப்பி இருந்தது. அவன் கண்ணை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

* * *

"அட பாவி! உனக்கு என்ன கேடு வந்து விட்டது? நீ தூங்குவதற்காகவா பணத்தைச் செலவு செய்து வண்டி செய்து வைத்திருக்கிறேன். அதை இழுத்துக் கொண்டு தெருத் தெருவாகச் சுற்றி அலை ......" என்று முதலாளி கர்ஜிப்பதுபோல் ஒரு பிரமை. திடுக்கிட்டு மன மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான் பொன்னுசாமி. "ஐயோ, பொழுது ஓடிக்கொண்டே இருக்கிறதே! இதுவரை சல்லிக் காசுகூடக் கிடைக்கவில்லையே! ஆண்டவனே, இன்று என்ன செய்வதென்று தெரியவில்லையே!" என்று சொல்லிக் கொண்டு எழுந்தான் அவன். கொஞ்ச



தூரத்திலுள்ள பஸ் 'ஸ்டாப்'பில் யாரோ ஒருவர் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஆவலுடன் வண்டியை இழுத்துக் கொண்டு அங்கு ஓடினான்.

பஸ்ஸுக்காகக் காத்திருந்த அந்த ஆசாமியின் முகத்தில் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டிருந்தது. "பாழாய்ப்போன பஸ்கள் வந்தால் எல்லாம் ஒன்றாக வந்து விடும்; இல்லாவிட்டால், இருக்குமிடமே தெரியாமல் எங்குதான் போய் விடுமோ? எத்தனை நேரம் இந்தக் கடும் வெய்யிலில் கால் கடுக்க நின்றிருப்பது? இதைவிடப் பேசாமல் நடந்து போய் விடலாம் போலிருக்கிறதே ......அப்பப்பா! என்ன வெய்யில்! என்ன கொடுமை!" என்று அவர் வாய் முணு முணுத்தது.

பொன்னுசாமி ரிக்ஷாவுடன் அவர் அருகில் சென்று "எங்கே போவணுங்க? வண்டியிலே ஏறிக் குந்துங்க" என்றான்.

அவர் அவனை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு "இல்லேப்பா, நான் பஸ்ஸில் போகிறேன்" என்றார்.

"பரவாயில்லே; சும்மா ஏறி உக்காருங்க. நீங்க இஷ்டப்பட்டதைக் கொடுங்க."

"வேண்டாம் அப்பா! வேண்டாம்!"

"மணிக்கணக்கா நின்னாலும் இப்போ பஸ் வராதுங்க. உங்களைப்போலப் பெரிய மனுசங்கள்ளாம் இப்படி நாலணா-ரெண்டணாவுக்கு யோசனை பண்ணினால் ஏழைங்க பிழைப்பு எப்படி நடக்கும்...?"

அந்த மனிதர் ஒன்றுக்கும் அசையவில்லை. பொன்னுசாமியைப் பார்க்கும் போது அவருக்கும் கருணை உண்டாயிற்று. ஆனால் எந்த வகையில் உதவி செய்வது? பொன்னுசாமி நம்பிக்கை இழந்தவன் போலக் காணப்பட்டான்.

அவர் மனதுக்குள் பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ரிக்ஷாவில் ஏற அவருக்கு விருப்பம் இல்லை. அதை இழுப்பவனும் தன்னைப்போல் ஒரு மனிதன்தான் அல்லவா? இந்த வெய்யிலில் சாதாரணமாக சுமை எதுவும் இல்லாமல் ஒரு தனி மனிதன் நடப்பதே சாத்தியமற்றதாக இருக்கிறது. அப்படியிருக்க, வண்டியில் ஒருவனை உட்கார வைத்து இழுப்பது எத்தனை கடினம்! மனிதனை மனிதன் இழுக்கச் செய்வது மிகவும் பாவமான செயலாகும். அவன் வயிற்றுப் பிழைப்புக்காக அதைச் செய்ய முன் வந்தால் அதற்கு நாம் உடன்படுவது மிகக் கொடூரமான செய்கை. மனித உள்ளம் படைத்த எவனும் இதைச் செய்யத் துணிய மாட்டான்.

அவருடைய தயக்கத்தை அவன் வேறு விதமாக எண்ணினான். "பஸ்ஸில் சென்றால் இரண்டணாவோடு போகும்; ரிக்ஷாக்காரன் குறைந்தது பன்னிரண்டணாவாவது கேட்பானே" என்று அவர் தயங்குவதாக அவன் நினைத்துக் கொண்டான். கடைசியாக ஒருமுறை கேட்டுப் பார்க்கலாம் என்று அவன் தீர்மானித்தான்.

"சாமி, கொஞ்சம் தயவு பண்ணுங்க. இன்னிக்கி காலையிலேருந்து ஒரு 'கிராக்கி' கூடக் கிடைக்கல்லே. இப்போ நீங்க மனசு வைச்சா அரை வயித்துக் கஞ்சியாச்சும் குடிக்கலாம். ஏறிக் குந்துங்க. நீங்க இஷ்

னிடம் 'கடிதங்கள் தாமாகத் தபால் பெட்டியில் விழ வேண்டும், புஸ்தகங்கள் தாமாகவே ஒழுங்காய் அடுக்கிக் கொள்ள வேண்டும். அறை தானே பெருக்கிக் கூட்டிக்கொள்ள வேண்டும்' — என்று சொன்னாயல்லவா? அதெல்லாம் கொஞ்சமும் நடக்காத காரியம். தூக்கம் ஒன்றுதான் தானாக வந்துவிடும் என்பது நன்றாய்த் தெரிகிறது. நீ சாப்பிடப் போனாய். நானும் சாப்பிடப் போனேன். வெகு சீக்கிரம் சாப்பிட்டு விட்டு ஓடிவந்து உன்னைப் பார்த்தேன். கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாய். நீ விழித்துக் கொண்டிருப்பதாக நினைத்து, நான் என்னென்னவோ உன்னிடம் பேசினேன். நீ பதிலுக்குத் தாறுமாறாக உளறினாய். அப்புறம் அயர்ந்து தூங்கி விட்டாய். 'சரி, தூங்கட்டும்' என்று நினைத்து நான் என் வீட்டுக்குப் போய் விட்டேன். கொஞ்ச நேரத்துக்கு முன் வந்து பார்த்தேன். நீ புரண்டு புரண்டு படுத்தாய். பிறகு கீழே விழுந்தாய்!" என்று சொன்னான் பாலா.

பிறகு முத்து தன் அதிசயப் பிரயாணத்தை விவரமாகச் சொன்னான்.

கடைசியில் முத்து, பாலா இரண்டு பேரும் சிரித்தார்கள். (முற்றும்)

ஒரு சரித்திர ஆசிரியர் கணக்கு ஆசிரியரைப் பார்த்து, "ஸார், என் மகள் சரோஜா கணக்கில் எத்தனை மார்க் வாங்கியிருக்கிறாள்?" என்று கேட்டார்.

உடனே கணக்கு வாத்தியார், "ஆஹா! சொல்லுகிறேன். அவள் வாங்கியிருக்கும் மார்க்கைப்போல இரண்டு மடங்கும், அவள் மார்க்கில் பாதியும், பாதியில் பாதியும் கிரேஸ் மார்க் ஒன்றும் சேர்த்தால் மொத்தம் 100 மார்க் ஆகும்" என்றார்.

சரித்திர ஆசிரியர் இதைக்கேட்டுத் திணறிப் போய் விட்டார். தம் மகள் எத்தனை மார்க் வாங்கியிருக்கிறாள் என்பதைக் கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை. உங்களால் முடியுமா?

சென்ற வார இதழில் வெளிவந்த புதிருக்கு விடை:

நான்கு பக்கங்களுமே சமந்தான்

அவர்தான் கடவுளோ?

ஒருமுறை ராமு தன் பெற்றோர்களுடன் ரயிலில் பம்பாய்க்குப் போய்க் கொண்டிருந்தான். இரவில் அவனுக்குத் தூக்கம் வந்தபோது அவனுடைய அப்பா மேல் பெஞ்சில் (அப்பர் பெர்த்) படுக்கையை விரித்து அவனைப் படுக்க வைத்தார். அங்கே தனியாகப் படுக்க ராமுவுக்குப் பயமாயிருந்தது. "பயப்படாதே. கண்ணை மூடிக்கொள். கடவுள் இருக்கிறார்; அவர் உன்னைக் கவனித்துக் கொள்வார்" என்று தைரியமூட்டினார் அப்பா.

ராமு அப்பா சொன்னபடி கண்ணை மூடிக் கொண்டான். சற்று நேரம் கழித்து அவன், "அப்பா!" என்றான்.

"என்னடா?" என்றார் அப்பா.

"ஒன்றும் இல்லை, அப்பா! நீ இருக்கிறாயா என்பதற்காகத்தான் கூப்பிட்டேன்" என்றான் ராமு.

"சரி, தூங்கு" என்றார் அப்பா.

சற்று நேரம் கழிந்தது. ராமு மறுபடியும் "அம்மா!" என்றான்.

"என்னடா ராஜா?" என்றாள் அம்மா.

"ஒன்றும் இல்லை, அம்மா! நீ இருக்கிறாயா என்பதற்காகத்தான் கூப்பிட்டேன்" என்றான் ராமு.

"சமர்த்தாகத் தூங்குடா, கண்ணே!"

ராமு தூங்க முயன்றான்; ஆனால் முடியவில்லை. "அத்தை!" என்றான் அவன் கண்ணை மூடிக் கொண்டே.

"ஏண்டா குழந்தை?" என்றாள் அத்தை.

"ஒன்றும் இல்லை. நீ இருக்கிறாயா என்பதற்காகத்தான் கூப்பிட்டேன்."

ராமு இப்படி அடிக்கடி கூப்பிட்டதன் மூலம் கீழே படுத்துக் கொண்டிருந்த சில பிரயாணிகளின் தூக்கம் கலைந்து விட்டது. அவர்களில் ஒருவருக்கு ஆத்திரமும் கோபமும் அளவுக்கு மீறி உண்டாயிற்று.


சற்று நேரம் கழிந்தது. ராமு மெதுவாக "மாமா!" என்றான்.

உடனே அந்தப் பிரயாணி படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து, "தம்பி, உன் அப்பா, அம்மா, தம்பி, தமக்கை, பாட்டன், பாட்டி, மாமா, மாமி எல்லோரும் இங்கே சௌக்கியமாக இருக்கிறார்கள். நீ கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கு" என்றார்.

சற்றுநேரம் கழிந்தது. ராமு கண்ணை மூடியபடி மீண்டும் "அப்பா!" என்றான்.

"ஏன்?" என்றார் அப்பா சலிப்புடன்.

"இப்போ பேசினாரே அவர்தான் கடவுளோ?" என்று கேட்டான் ராமு.



பாலாவும் முத்துவும் இரண்டு நாட்கள் பனி புரி அரண்மனையிலேயே தங்கியிருந்துவிட்டுத் தங்கள் ஊருக்குப் புறப்பட்டனர். ராணி அவர்களை மான் வண்டியிலேற்றி அனுப்பினாள்.

முத்து, "பாலா! கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொள். நான் ரொம்ப ஓரத்தில் உட்கார்ந்திருக்கிறேன். ஐயோ, கீழே விழுகிறேனே!" என்று கத்தினான்.

மறு நிமிஷம் 'பொத்' தென்று கட்டிலிலிருந்து கீழே விழுந்தான் முத்து.

கட கட வென்று பாலா சிரித்தான்.

"என்ன முத்து, சொப்பனம் கண்டாயா? என்னென்னவோ உளறினாயே!"

"பாலா, அன்றைக்கு மைதானத்தில் உனக்கு ஒரு மந்திரப் பிரம்பு அகப்பட்டதே, அது பொய்யா?" என்று வியப்புடன் கேட்டான் முத்து.

"மந்திரப் பிரம்பா? ஏது?" என்று கேட்டான் பாலா அதிசயத்தோடு.

"அன்றைக்கு உன் காரியங்களெல்லாம் தானாகவே நடக்கவில்லையா? நீ கூட அதை ஆச்சரியத்தோடு என்னிடம் சொன்னாயே! நாம் இரண்டு பேரும் அப்போது மூன்று சக்கரச் சைக்கிளில் போனோமே, உன் சைக்கிள் உன்னுடைய உதவியில்லாமல் தானாகவே ஓடியதே!" என்றான் முத்து.

பாலா சிரித்தான். "முத்து நல்ல சொப்பனம் கண்டிருக்கிறாய்! இதோ பார்!" என்று வாசல் ரேழியில் வைத்திருந்த மூன்று சக்கரச் சைக்கிள் இரண்டையும் காட்டினான். முத்துவுக்கு ஒரே வியப்பாயிருந்தது. பேந்தப் பேந்த விழித்தான்.

பாலா சிரித்து விட்டு, "முத்து, நீ காலையில் என்

மான் வண்டி வெகு வேகமாகப் பறந்தது. சில நிமிஷங்களுக்கெல்லாம் முத்துவுக்குப் பல் கிட்டிப் போகும்படி குளிர் எடுத்தது. நல்ல வேளையாகக் கமலா விலை உயர்ந்த கம்பளி ஒன்றை முத்துவுக்குக் கொடுத்திருந்தாள். அதை எடுத்து முத்து போர்த்திக் கொண்டான்.



மான் மிகவும் உற்சாகத்துடன் வண்டியை அந்தப் பனிக்கட்டிப் பாதையில் இழுத்துக் கொண்டு ஓடிற்று. அந்த ஏரி முழுவதும் ஜலத்துக்குப் பதிலாக ஒரே பனிக் கட்டியாக இருந்தது. முத்து எத்தனை தடவை ஐஸ் கிரீம் தின்றிருக்கிறான்! ஆனால் இந்தப் பனிக் கட்டியை அவனால் பார்க்கக் கூட முடியவில்லை. மூன்று நாள் இராப்பகல் விடாமல் மான் வண்டியில் முத்து பிரயாணம் செய்தான். குளிர் தாங்க முடியாமல் இருந்ததால், அவனுக்குப் பசி, தாகம், வெய்யில் ஒன்றுமே தெரியவில்லை.

மூன்றாம் நாள் காலையில் ஒரு வெள்ளை மாளிகை தென்பட்டது. அந்த மாளிகைத் தோட்டத்துப் பக்கமாக மான் வண்டி போய் நின்றது.

குளிரால் நடுங்கிக் கொண்டே முத்து வண்டியிலிருந்து இறங்கி மெதுவாக உள்ளே நுழைந்தான். மாளிகைத் தாழ்வாரத்தில் பாலா உட்கார்ந்து நாய்க்குட்டியோடு ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தாள்.

முத்து சந்தோஷம் தாங்க முடியாமல் "பாலா!" என்று கத்திக் கொண்டே அவளிடம் ஓடினான்.

என்ன ஆச்சரியம்! பாலாவுக்கு முத்துவைப் பற்றிய ஞாபகம் கொஞ்சம் கூட இல்லை. அவன் அவ்வளவு ஆசையோடு கூப்பிட்டதற்கு அவள் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவள் தன்னை அடியோடு மறந்து விட்டாள் என்பதை அறிந்து முத்து மிகவும் வருத்தம் அடைந்தான்.

"பாலா! என்னைத் தெரியவில்லையா?" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு அன்போடு கேட்டான்.

பாலா வாய் திறவாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

முத்து துக்கம் தாங்க முடியாமல் தேம்பித் தேம்பி அழுது விட்டான்.

முத்துவின் கை மிகவும் உஷ்ணமாயிருந்தது. பனிபுரியில் குளிரினால் உணர்ச்சியில்லாமல் மரத்துப் போயிருந்த பாலாவுக்கு முத்து தன் கையைப் பிடித்தவுடன் இதமாயிருந்தது. முத்துவின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரின் சூடு 'சுர்' என்று அவள் கையில் படவே பாலாவுக்குப் பழைய ஞாபகம் முழுதும் வந்துவிட்டது.

"முத்து!" என்று அன்போடு அழைப்பதைத் தவிர அவளால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. சந்தோஷம் அதிகமாகி விட்டதனால் வார்த்தையே வாயிலிருந்து வெளி வரவில்லை.

இவர்களுடைய குரலைக் கேட்ட பனிமதி ராணி அங்கே வந்தாள். முத்துவைப் பார்த்ததும் அவளுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

"பாலா, உன்னுடைய நண்பன் முத்து கடைசியில் வந்து சேர்ந்து விட்டான் போலிருக்கிறதே! ரொம்பக் கெட்டிக்காரப் பயல்!" என்று ராணி முத்துவைப் பாராட்டினாள்.



பாப்பா மலர் அதிசயப் பிரயாணம்

ஸோமாஸ்


7. முத்துவும் பாலாவும்

“கமலா, நீ சொல்வதைக் கேட்க எனக்கு மிகவும் தைரியமாயிருக்கிறது. ஆனால் நான் பாலா இருக்கும் இடத்துக்கு எப்படிப் போக முடியும்? நீ அதற்கு உதவி செய்வாயா?” என்று முத்து கேட்டான்.

அதற்குக் கமலா, “முத்து, நான் உனக்குக் கட்டாயம் உதவி செய்கிறேன். நான் முன்பு ஒரு முறை அங்கே போயிருக்கிறேன். குதிரையிலோ, வண்டியிலோ அந்த ஊருக்குப் போக முடியாது. சக்கரம் இல்லாத மான் வண்டியில்தான் போக முடியும். ஏனென்றால் அங்கே ஊர் முழுவதும் தெருவெங்கும் பனிக்கட்டிகள் மூடியிருக்கும். சக்கரம் உள்ள வண்டிகள் போனால் பனிக்கட்டிகளுக்குள் சக்கரம் புதைந்து விடும். நான் உன்னை ஒருவருக்கும் தெரியாமல் நாளைக் காலையில் மான் வண்டியில் ஏற்றிப் பனிபுரி நாட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்” என்றாள்.

இதைக் கேட்ட முத்துவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

“கமலா, நிஜமாகவே உன்னால் இந்த உதவியைச் செய்ய முடியுமா? நீ மாத்திரம் இந்த உதவியை எனக்குச் செய்வாயானால் நான் உனக்கு என்ன வேண்டுமானாலும் செய்வேன், கமலா!” என்று சந்தோஷம் தாங்க முடியாமல் சொன்னான் முத்து.



கமலா சிரித்துக் கொண்டே, “முத்து, நீ அதைப் பற்றித் துளிக் கூடக் கவலைப்படாதே! நாளைக் காலையில் சூரிய உதயத்துக்கு முன்பு மான் வண்டி தயார் செய்து உன்னைப் பனிபுரிக்கு அனுப்பி வைக்கிறேன். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். நீ பாலாவை அழைத்துக்கொண்டு திரும்பும்போது கட்டாயம் எங்கள் வீட்டில் இறங்கி விட்டுப் போக வேண்டும்!” என்று கேட்டுக் கொண்டாள்.

முத்துவும் அதற்குச் சம்மதித்தான்.

மறுநாள் காலையில் ஓசைப்படாமல் எழுந்து கமலா முத்து படுத்திருந்த இடத்துக்கு வந்தாள். ஆனால் அவனை எழுப்ப வேண்டிய அவசியமே இருக்கவில்லை. அவன்தான் இரவு முழுவதும் தூங்காமல் கமலாவை எதிர்பார்த்து விழித்துக் கொண்டிருக்கிறானே! கமலா அங்கு வந்தாளோ இல்லையோ முத்து ஓடி வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டான். கமலா அவனைச் சத்தப் படுத்தாமல் இருக்கும்படி வாய் பொத்தி ஜாடை காட்டினாள். இருவரும் மெதுவாகத் தோட்டத்துக்குப் போனார்கள்.

கமலா மெதுவான குரலில், “முத்து இதோ பார், வண்டி! மானையும் பூட்டித் தருகிறேன். இதில் ஏறி உட்கார்ந்து கொண்டாயானால் சில நிமிஷங்களுக்குள் ஒரு ஏரிக்குப் போய்ச் சேர்ந்து விடுவாய். அது பனிக்கட்டி ஏரி. குளிர் பல்லைக் கிட்டும். அதில் மூன்று நாட்கள் பிரயாணம் செய்தால் பனிபுரிக்குப் போய்ச் சேரலாம். பிறகு ஜாலக் கண்ணாடியின் உதவியினால் பாலாவின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு விடலாம். பனிமதி ராணியிடம் என் பெயரைத் தெரிவித்தால் அவள் ரொம்ப அன்புடன் உன்னைக் கவனித்துக் கொள்ளுவாள்!” என்று சொன்னாள்.

சிதர்களைக் கண்டவுடன், உடைந்த பொம்மைகளைத் தூக்கிக் கொண்டு விளையாட ஓடும் சிறு குழந்தைக்குச் சமானமாக இருந்தது.


ஆனால் அவளுடைய உருவத்தைப் பார்த்தவுடன் அவனுடைய ஆசைக் கனவுகள் எல்லாம் தவிடு பொடியாகி விட்டது போல இருந்தது. அவன் அசைவற்று நின்று விட்டான். பூர்ணிமா அவனெதிரில் தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். வெள்ளைப் புடவையின் முக மூடியினால் பாதி முகம் மறைக்கப்பட்டிருந்தது. இடுப்பு வளைந்து விட்டது. கைகள் நூல் போல் மெல்லியதாக இருந்தன. கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. முகத்தின் நிறமோ முழுவதும் வெளுத்துக் களை இழந்து காணப்பட்டது.

சிறிது நேரத்துக்கெல்லாம் பூர்ணிமாவின் சித்தி வந்து, "உட்காரப்பா! இவளைப் பார்த்தாயா? உலர்ந்து ஓடாகி விட்டாள். ஒரு க்ஷணம்கூட கண்ணீர் விடுவது நிற்கவில்லை. ஒரே வேளைதான் உணவு அருந்துகிறாள். ஒன்றிலும் இவளுக்குப் பற்றில்லை. போதாததற்கு அடிக்கடி ஏகாதசி, மங்களவாரம் என்று விரதம் வேறு அனுஷ்டிக்கிறாள். ஒரு பாயை விரித்துத் தரை மீதே தூங்கி விடுகிறாள். விடியு முன்பே எழுந்து பூஜைசெய்ய ஆரம்பித்து விடுகிறாள். பையன் எவ்வளவோ சொல்கிறான். ஆனால் அவள் யார் சொல்வதையும் கேட்பதில்லை. 'கடவுள் எப்பொழுது என் சௌபாக்கியத்தை அபகரித்து விட்டாரோ அப்பொழுது எல்லாமே பொய்தான். மனதைத் தேற்றிக் கொள்ள இங்கு வந்தேன். ஆனால் இங்கும் அழுகை ஓயவில்லை' என்கிறாள். 'தலையில் எழுதியவாறு நடந்து விட்டது. வருந்தி என்ன பயன்? கடவுள் உனக்குக் குழந்தைகளைக் கொடுத்திருக்கிறார். அவற்றைக் காப்பாற்று. வீட்டில் கடவுளால் கொடுக்கப்பட்ட செல்வமும் இருக்கிறது. நாலு பேருக்கு தாராளமாகப் போட்டு நாமும் சாப்பிட முடியும். மனது சுத்தமாயிருக்க வேண்டும். சரீரத்திற்குக் கஷ்டம் கொடுப்பதினால் என்ன பயன்?" என்று எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்துவிட்டேன். ஆனால் இதையெல்லாம் அவள் கேட்பதேயில்லை. இப்பொழுது நீ சொன்னால் ஒரு வேளை கேட்பாளோ, என்னவோ?" என்று கூறினாள் பூர்ணிமாவின் சித்தி.

அமிருதன் சிலைபோல் அசைவற்று நின்றான். எந்த அஸ்திவாரத்தின் மேல் அவன் வாழ்க்கையாகிய கட்டிடத்தை நிறுவினானோ அது அசைந்து விட்டதுபோலிருந்தது. பிறந்தது முதல் அவன் எந்த வஸ்துவை உண்மையென்று எண்ணியிருந்தானோ, அது உண்மையில் கானல் நீர் என்று இன்றுதான் அவனுக்குத் தெரிந்தது. பூர்ணிமாவின் பயங்கரமான புலனடக்கத்துக்கும் ரிஷிகளுக்கு ஒப்பான நடத்தைக்கும் முன்னால் அவனுடைய எல்லா வித ஆசாபாசங்களும் கரிந்து விட்டன. மண்ணைத் தெய்வமாக்கும் சக்தி வாய்ந்த மனதிற்கு மனிதனைக் கூடத் தேவதையாக்கும் சக்தி இருக்குமென்ற உண்மை அவனுக்குப் புலனாகியது. பூர்ணிமா வெறுக்கத் தகுந்த ஒரு மனிதனையல்லவா தேவதையாக்கிப் பூஜித்துக் கொண்டிருந்தாள்!

அவன், "சித்தி! நம்மைப் போன்றவர்கள் எவ்விதம் தபஸ்வினிக்குத் தேறுதல் கூற முடியும்? நாம் இவளுடைய பாதங்களில் விழுந்து வணங்கத்தான் அருகதையுள்ளவர்கள்" என்று சாந்தமாகச் சொன்னான்.

அடுத்த கணம் பூர்ணிமா தன் முகத் திரையை விலக்கி கொண்டு, "குழந்தை உன்னைப் பற்றித்தான் ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கிறான்" என்று சொன்னாள்.



சுப்பன்:—ஏதுடா, உனக்கு அந்தப் புது புத்தகம்? ஜோரா இருக்கே!

சேஷன்:—மாமா எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாரடா!

சுப்பன்:—எந்த மாமாடா?

சேஷன்:—அதுதான் தெரியவில்லை. பஸ்ஸில் போகும்போது பக்கத்தில் இருந்தது. முதல் பக்கத்தில் "என் அருமை மருமகனுக்கு இப் புத்தகம் அன்பளிப்பு" என்று எழுதி இருந்தது. நான் எடுத்துக் கொண்டேன்.

செய்தான். ஆனால் பூர்ணிமா அவற்றைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

பூர்ணிமா ஆறு மாதங்கள் தாய் வீட்டிலிருந்து விட்டுப் பிறகு மாமனார் வீட்டிற்குச் சென்றாள். அவளைக் கொண்டுபோய் விட அமிருதன் ஸ்டேஷன்வரை சென்றான். அவள் வண்டியில் உட்கார்ந்ததும் அமிருதன் குழந்தையை அவள் மடியில் விட்டான். அமிருதனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. ஆனால் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டு கையால் கண்ணீரைத் துடைத்தான். பூர்ணிமாவுக்குத் தன் கண்ணீரை காட்ட அவன் விரும்பவில்லை. ஏனெனில் அவளுடைய கண்ணில் கண்ணீரே இல்லை. பிறகு எப்பொழுது மறுபடி சந்திப்பு ஏற்படுமோ வென்று அவன் யோசித்தான்.

பூர்ணிமா கொஞ்சம் கர்வத்துடன் "குழந்தை சிலநாள் வரை உனக்காக வருந்துவான்" என்று சொன்னாள்.

அமிருதன் தொண்டை தழுதழுக்க, "நான் உயிரோடிருக்கும் வரை இவன் உருவம் என் மனதைவிட்டு அகலவே அகலாது" என்று சொன்னான்.

"அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிரு" என்றாள் பூர்ணிமா.

"ஆகட்டும்" என்றான் அமிருதன்.

"ஆனால் நான் பதில் போடமாட்டேன். ஞாபகம் இருக்கட்டும்" என்றாள் அவள்.

"போடவேண்டாம். ஆனால் ஞாபகம் இருக்கட்டும்" என்றான் அவன்.

வண்டி கிளம்பி விட்டது. அமிருதன் அவள் இருந்த வண்டியின் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பர்லாங்கு தூரம் வண்டி சென்ற பிறகு, பூர்ணிமா ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி அமிருதன் இருந்த பக்கம் பார்த்தாள். குழந்தையைக் கையிலெடுத்து அவள் அமிருதனுக்குக் காட்டினாள்.

அதே வருஷம் பூர்ணிமாவின் தாய் பரலோகம் சென்றுவிட்டாள். பூர்ணிமா அச்சமயம் வெளியூரில் இருந்தாள். அவள் தன் தாயை அந்திய காலத்தில் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. கடைசிவரை அமிருதனே அவளுடைய தாய்க்கு வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் செய்தான்.

பூர்ணிமா இனிமேல் எந்த உறவை வைத்துக்கொண்டு அந்தக் கிராமத்துக்கு வரப்போகிறாள்? மேலும், அங்கு வர அவளுக்குத்தான் ஓய்வு ஏது? இப்போது தன் வீட்டிற்கு அவள் எஜமானி. வீட்டை யாரிடம் விட்டு விட்டு வருவாள்? அவளுக்கு இன்னும் இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டன. முதல் பையன் பெரியவனாகிப் பள்ளியில் படிக்க ஆரம்பித்து விட்டான். சிறியவன் கிராமாந்திரப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். அமிருதன் வருஷத்தில் ஒரு முறை ஆட்களை அனுப்பி, அவர்களின் க்ஷேம சமாசாரத்தை அறிந்து வந்தான். பூர்ணிமா எல்லா விதத்திலும் சுகமாயும் கவலையற்றும் இருந்தாள். அவன் திருப்திக்கு அதுவே போதுமானது. அமிருதனுடைய பையன்களும் இப்பொழுது பெரியவர்களாகி விட்டார்கள். அவன் குடும்ப சம்பந்தமான கவலைகளில் மூழ்கியிருந்தான். மேலும் அவனுக்கு வயது நாற்பதுக்கு மேலாகி விட்டது. ஆனால் பூர்ணிமாவின் ஞாபகம் மாத்திரம் அவன் மனதில் சதா சர்வ காலமும் இருந்து வந்தது.

4

திடீரென்று ஒருநாள் அமிருதனுக்குப் பூர்ணிமாவின் கணவன் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. ஆனால் அந்தச் செய்தியைக் கேட்டு அவனுக்குக் கொஞ்சங்கூடத் துக்கம் ஏற்படவில்லை. அவனுடைய மனத்தில் மரித்துப்போயிருந்த ஆசைகள் மறுபடியும் உயிர் பெற்று எழுந்தன. துக்கம் கேட்க அவன் ஊருக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவரும்போது பூர்ணிமாவையும்கூட அழைத்து வந்து விடலாம் என்று அவன் எண்ணினான். பூர்ணிமாவின் அருகில் இருந்தாலே தனக்குச் சந்துஷ்டி ஏற்படும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. இருபது வருஷங்களுக்கு முன் பார்த்த பூர்ணிமாவின் அதே பழைய எழில் உருவம் சில மாறுதல்களுடன் அவன் மனக் கண்முன் காட்சி அளித்தது. அந்த மாறுதல்கள் அழகுக்கு அழகு செய்வது போலத்தான் அவனுக்குத் தோன்றின. அவளுடைய குரலின் இனிமையைக் கேட்க வேண்டும் என்ற ஒரே ஆசை அவனை உந்தித் தள்ளியது.

அகஸ்மாத்தாக ஒரு நாள் பூர்ணிமா தன் சிறு குழந்தையுடன் அந்தக் கிராமத்துக்கு வந்தாள். சூன்யமாயிருந்த அவளுடைய வீடு மறுபடியும் குடியுள்ள வீடாயிற்று. அமிருதன் அவள் வந்திருக்கும் செய்தியைக் கேட்டவுடன் மதம் பிடித்தவன் போல் அவள் வீட்டை நோக்கி ஓடினான். அச்சமயம் அவளுடைய நிலை, தன் நிலை

கூறியதில்லை. இவ்விதமிருக்கும்போது ஏன் அவனுக்கு இப்பொழுது கர்வம் உண்டாகாது? ஒரு லக்ஷாதிபதிக்கு மனைவியாக ஆகப் போகிறாள். சந்தோஷமாக ஆகட்டும். அமிருதனும் உயிரோடு இருப்பான். சாக மாட்டான்"—இவ்விதம் அவள் சொல்லிக் கொண்டாள்.

பூர்ணிமாவோ நாள் முழுவதும் அமிருதனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அமிருதன் வாசல் வழியாகத் தான் சென்றான். ஆனால் வீட்டிற்குள் நுழையவில்லை. இதன் காரணம் என்னவென்று அவள் ஆலோசிக்கலானாள். எப்பொழுதாவது தெருவில் சந்தித்தால் அவளுடைய நிழலைக் கண்டே ஓட்டம் பிடித்து விடுவான். அவள் தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு கிணற்றங்கரையிலேயே அமிருதனுடைய வருகையை எதிர்பார்த்தவாறு நின்று கொண்டிருப்பாள்.

ஒருநாள் அவள் அவன் வீட்டிற்குச் சென்று, "நீ ஏன் இப்பொழுது என் வீட்டிற்கு வருவதே இல்லை?" என்று கேட்டாள். அந்தச் சமயம் அவளுடைய நெஞ்சம் துக்கத்தால் அடைத்துக் கொண்டது. அவள் மீண்டும் சொன்னாள்: "இந்தக் கிராமத்தில் நான் இன்னும் கொஞ்ச காலந் தானே இருக்கப் போகிறேன்?"

அமிருதன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பிறகு அலட்சியமாக அவன் சொன்னான்: "எப்படியும் நீ இன்னும் கொஞ்ச காலத்திற்குள் இவ்வூரை விட்டுப் போகத் தானே போகிறாய்?" என்றான்.

பூர்ணிமா துக்கம் நிறைந்த முகத்துடன் சொன்னாள்: "இதில் என்னுடைய குற்றம் என்ன? நான் சந்தோஷத்துடன் போகவில்லையே! போகவேண்டியிருக்கிறது; அதனால் போகிறேன்."

இதைச் சொல்லும்போதே வெட்கத்தால் அவள் முகம் சிவந்துவிட்டது. அவள் எவ்வளவு சொல்ல வேண்டுமோ அதைக் காட்டிலும் அதிகமாகவே சொல்லிவிட்டாள்.

அமிருதன் அவள் சொல்வதெல்லாம் உண்மைதானா என்று பரீக்ஷிப்பவன்போல் அவளைப் பார்த்துவிட்டு, "உனக்கு என் ஞாபகம் ஏன் வரப்போகிறது?" என்று கூறினான். இதைச் சொன்னதும் அவனுக்கு வெட்கம் உண்டாகிவிட்டது. அங்கிருந்து வெளியே ஓடிவிடலாமா வென்று யோசித்தான். அவள் எங்கேனும் தன்னைப் பற்றிக் கேவலமாக எண்ணி விடுவாளோ என்று நினைத்தான். அவள் முகத்தைப் பார்க்கவே அவனுக்குக் கொஞ்சங்கூடத் தைரியம் ஏற்படவில்லை.

பூர்ணிமா தலை குனிந்துகொண்டு தன் மனதோடு பேசியவள்போல் சொன்னாள். "நான் நிரபராதி. நீ என்னிடம் கோபித்துக்கொள்கிறாய். உனக்குத்தான் இச்சமயம் என்னிடம் தயவு இருக்க வேண்டும். நீ எனக்குத் தைரியம் கூறுவதே உசிதமானது. அவ்வாறின்றி என்னிடம் அருவருப்புக் கொள்கிறாய். எனக்கு வேறு என்ன வழி இருக்கிறதென்று நீயே சொல். யார் எனக்கு வேண்டியவர்களோ அவர்களே என்னை அந்நியர் வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு எனக்கு என்ன நேரிடுமோ? என் நிலை எவ்விதமாகுமோ? நீயும் உன்னுடைய கோபத்தை அதில் கலந்தால், என் உயிரைக் கொண்டு போக வேறு என்ன வேண்டும்?"

அமிருதனுக்கு உண்மை புலப்பட்டது. பூர்ணிமாவும் தன்னைவிட்டுப் பிரிவதில் மிகவும் வருந்துகிறாள் என்பதை உணர்ந்ததும் அவன் மனதில் இருந்த பாரம் ஓரளவு குறைந்தது. அவளைப் பற்றித் தவறாக நினைத்ததற்காக அவன் வருந்தினான்.

அவன், "பூர்ணிமா, நான் நினைத்தது தவறு. என்னை மன்னித்துவிடு" என்றான்.

2

பூர்ணிமாவுக்கு விவாகம் நடந்துவிட்டது. அமிருதன் மிக்க சிரமம் எடுத்துக்கொண்டு கல்யாண ஏற்பாடுகளைச் சரிவர நடத்தினான். மாப்பிள்ளை வயது அதிகமானவனாக இருந்தான். தொந்தி விழுந்திருந்தது. அதோடுகூட கரியாகவும் கோபிஷ்டனாகவு மிருந்தான். இருந்தாலும் அமிருதன் அவனுக்கு தடபுடலாக ஒரு விருந்தையும் சந்தோஷமாக நடத்தினான்.

பூர்ணிமாவிடம் பேச அமிருதனுக்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. சந்தர்ப்பம் அடைய அவன் முயற்சிக்கவும் இல்லை. அவன் பூர்ணிமாவைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவள் அழுதுகொண்டே யிருந்தாள். அமிருதனே வாயால் சொல்லாமலே கண் ஜாடையால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தைரியம் கூறினான்.


மூன்றாம் நாள் பூர்ணிமா வெகு நேரம் அழுதுவிட்டு மாமனார் வீட்டுக்குச் சென்று விட்டாள். அமிருதன் அதே தினம் சிவன் கோவிலுக்குச் சென்று பய பக்தியுடன் மனப்பூர்வமாக பூர்ணிமா எப்பொழுதும் சௌக்கியமாய் இருக்கவேண்டுமென்று

கடவுளைப் பிரார்த்தனை செய்தான். அவனுடைய மனதில் ஏதோ ஒருவகைச் சூன்யம் குடிகொண்டிருப்பதுபோல இருந்தது. வாழ்க்கையே பாழடைந்தது போலாகி விட்டது அவனுக்கு. எதுவும் செய்யவோ சிந்திக்கவோ அவனுக்குத் தோன்றவில்லை.

3

மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு பூர்ணிமா பிறந்தகம் வந்தாள். இதற்கிடையில் அமிருதனுக்கும் விவாகமாகி வாழ்க்கையாகிய நுகத்தடியைக் கழுத்தில் மாட்டிச் சென்று கொண்டிருந்தான். ஆனால் அவன் மனதில் தெளிவான ஒரு உருவத்தை அடையாத ஒரு விருப்பம் குடி கொண்டிருந்தது. அது தர்மாமீட்டரின் பாதரசம்போல் இதயத்தின் உள்ளே நன்கு காப்பாற்றப்பட்டிருந்தது. இப்பொழுது பூர்ணிமா வந்ததும் அதில் உஷ்ணத்தை உண்டு பண்ணி விட்டது. அவளுடைய மடியில் இரண்டு வயதுள்ள ஒரு குழந்தை இருந்தது. அமிருதன் அக்குழந்தையை அல்லும் பகலும் தோளிலேயே சுமந்து கொண்டிருப்பான். காலையும் மாலையும் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு காற்று வாங்கச் செல்வான். விதவிதமான விளையாட்டுச் சாமான்களையும் பக்ஷணங்களையும் கடையிலிருந்து வாங்கிக் குழந்தைக்குக் கொடுத்து வந்தான். விடிந்ததும் அக் குழந்தையின் காலை ஆகாரத்திற்காக, அல்வாவையும் பாலையும் எடுத்துக் கொண்டு செல்வான். அதைக் குளிப்பாட்டித் தலைவாரிவிடுவான். இந்த எல்லா வேலைகளையும் அவன்தான் பொறுப்பேற்றுக் கொண்டான். குழந்தை ஒரு க்ஷணம் கூட அவனை விட்டுப் பிரியவே இல்லை. சில சமயம் அமிருதனுடனேயே படுத்துத் தூங்கி விடும். பூர்ணிமா வந்து கூப்பிட்டபோதிலும் அவளுடன் செல்லாது.

பூர்ணிமா இன்னும் அழகியாகவே விளங்கினாள். மொட்டு மலர்ந்து பூவாகிவிட்டது. இப்பொழுது அவளுடைய சுபாவத்தில் கொஞ்சம் அகங்காரமும் அபிமானமும் வந்துவிட்டது. அத்துடன் செயற்கையாக அழகுபடுத்திக் கொள்ளுவதிலும் பிரியமுள்ளவளாகிவிட்டாள். தங்க நகைகளை அணிந்து பட்டுப்புடவை தரித்து ஆடம்பரமாக இருந்தாள். மேலும் அமிருதனுடன் அதிகமாகப் பழக விருப்பமில்லாதவள் போலும் தென்பட்டாள். மிக அவசியமாக இருந்தாலொழிய அவனோடு பேசவில்லை. அப்படியே பேசினாலும், ஏதோ அமிருதனுக்குப் பெரிய உபகாரம் செய்பவள்போல் பேசுவாள். அமிருதன் அவளுடைய குழந்தைக்காகப் பிராணனை விட்டு வந்தான். அதனுடைய விருப்பங்களை எல்லாம் பூர்த்தி



பூர்ணிமா

பிரேம்சந்த்

மொழி பெயர்ப்பு: ஜி. ஸ்ரீனிவாசன்

அமிருதனுடைய மனதில் எப்பொழுதும் அந்த ரகசியம் இருந்து வந்தது. அதை அவன் யாரிடமும் கூறவில்லை. அவனுடைய பார்வையிலிருந்தோ, வார்த்தைகளிலிருந்தோ, நடத்தையிலிருந்தோ பூர்ணிமாவுக்கு எவ்விதமான சந்தேகமும் உண்டாகவில்லை. பூர்ணிமா குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றுக்கு ஜலம் எடுக்கச் சென்றால் அமிருதனும் அங்கு செல்வான். பலவந்தமாக அவள் கையிலிருந்து குடத்தைப் பிடுங்கி, தானே ஜலம் இழுத்துக் கொடுப்பான். அவள் மாட்டுக்கு புல், ஜலம் முதலியன வைக்கச் சென்றால், அவன் ஓடிப்போய் தானே அவ்வேலையைச் செய்வான். கடையில் சாமான் வாங்க அவள் சென்றால், அவன் வழியில் அவளைச் சந்தித்து சாமான்களைத் தானே தூக்கிக் கொண்டு வருவான்.

பூர்ணிமாவின் வீட்டில் ஆண்களே கிடையாது. வெகு நாட்களுக்கு முன்பே அவள் தந்தை காலமாகி விட்டார். அவளுடைய தாய் வீட்டிற்குள்ளேயே இருப்பாள். அமிருதன் பள்ளிக்குச் செல்லும் போதெல்லாம் பூர்ணிமாவின் வீட்டுக்குப் போய் "கடையில் ஏதேனும் சாமான் வாங்கி வரவேணுமா?" என்று கேட்டுச் செல்வான். அவனுக்குக் கொஞ்சம் நிலமும் மாடு கன்றுகளும் இருந்தன. அவன் தன் வீட்டுக்குத் தெரியாமல் நிலத்தில் கிடைக்கும் பொருள்களைப் பூர்ணிமாவுக்குக் கொண்டுவந்து கொடுப்பான்.

ஒரு நாள் பூர்ணிமா அவனிடம், "நீ நாள் முழுவதும் பள்ளிக்கூடத்திலேயே இருக்கிறாய். பொழுது போவதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது" என்றாள்.

உடனே அமிருதன், "நான் என்ன செய்வேன்? பரீக்ஷை பக்கத்தில் வந்து விட்டதே!" என்றான்.

"நான் கிளம்பிப் போய் விட்டால் உன்னை எப்படிப் பார்ப்பேன்?"

அமிருதன் பயத்துடன் "எங்கு போகப் போகிறாய்?" என்று கேட்டான்.

பூர்ணிமா அதைக் கேட்டதும் வெட்கமடைந்தாள். பிறகு, "உன் சகோதரிகள் எங்கு சென்றிருக்கிறார்களோ, எங்கு எல்லாப் பெண்களும் செல்லுவார்களோ,— அங்குதான்" என்று சொன்னாள்.

அமிருதன் அதைக் கேட்டு நிராசையுடன், "நல்லது, அப்படியா!" என்று சொல்லி அன்றையப் பேச்சுக்கு ஒரு வகையாக முற்றுப் புள்ளி வைத்தான்.

சில நாட்களுக்கெல்லாம் பூர்ணிமாவின் விவாக விஷயமாக ஒரு இடத்தில் பேசி முடித்தாகிவிட்டது என்ற செய்தி அமிருதனின் காதுக்கு எட்டியது. நல்ல கௌரவமும் பணமும் வாய்ந்த குடும்பம். பூர்ணிமாவின் தாய் அதை வெகு சந்தோஷத்துடன் அங்கீகரித்து விட்டாள். ஏழ்மை நிலையில் இருந்த அவளுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் பணமே மேலானதாகத் தோன்றியது. மேலும் பூர்ணிமா எல்லாவிதத்திலும் சௌக்கியமாகக் காலங் கழிக்க அங்கு எல்லாவித சாமான்களும் தயாராக இருந்தன. கடவுளே அவளுடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து அவ்விடத்தைக் கொடுத்தது போல இருந்தது. இதற்கு முன் அவள் தாய் கவலையினால் உருகிப் போனாள். இப்பொழுதோ கடவுள் தன் கடாட்சத்தால் அவளுடைய கவலைகளை ஒழித்து விட்டது போலிருந்தது.

அமிருதன் இதைக் கேட்ட மாத்திரத்திலேயே பைத்தியம் பிடித்தவன் போலாகி விட்டான். அவன் பரபரப்புடன் பூர்ணிமாவின் வீட்டை நோக்கி ஓடினான். ஆனால் கொஞ்ச தூரம் போன பிறகு திரும்பி விட்டான். அங்கு செல்வதால் என்ன பயன்? வீட்டிற்கு வந்தான். முகத்தை மூடிக் கொண்டு படுத்து விட்டான். பூர்ணிமா சென்று விடுவாள். பிறகு அவன் எவ்விதம் வசிப்பான்? அவன் மிகச் சஞ்சலமடைந்தவனாகி விட்டான். அவன் எதற்காக உயிர்வாழ வேண்டும்? வாழ்க்கையில் என்ன இருக்கிறது? திடீரென்று அவன் மனதில் மற்றொரு எண்ணம் ஓடியது. "பூர்ணிமாவும் என்னைப் போலவே இவ்விதம் வருந்துகிறாளா? என்னை விட்டுப் பிரிவதில் அவள் உண்மையாகவே கவலைப்படுகிறாளா?" என்று யோசித்துப் பார்த்தான். பூர்ணிமா அப்படியொன்றும் கவலைப்படுவதாக அவனுக்குத் தெரியவில்லை. "பூர்ணிமாவுக்கு என்னிடம் எப்போதுமே அக்கறை இருந்தது கிடையாது. அவளுக்குப் பின்னால் நான்தான் நாய்மாதிரி வாலை ஆட்டிக் கொண்டிருந்தேன். பூர்ணிமாவோ ஒரு பொழுதும் அன்பாக ஒரு வார்த்தைகூடக்

தரையில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்து சர்வேசுவரனைத் தியானித்ததாக ஒரு கதை கூறப்படுவதுண்டு. நம்முடைய செயற்கைப் பதுமைகளிலும் சித்திரங்களிலும் ஆண்டவன் இல்லை என்று எண்ணுவது அறியாமையாகும்.



சேதனங்களும் அசேதனங்களும் எல்லாப் பொருள்களுமே பிரம்மம் என்று கண்ட பின் பூஜைக்கென்று அமைத்துக் கொண்ட மூர்த்திகள் ஏன் பரம் பொருளின் உருவம் அல்ல? அல்லவென்று எண்ணுகிறவர்கள் உண்மையில் பிரம்மத்தைத் தனிப்படுத்தி வேறு உலகத்தில் வைக்கிறார்கள் போலும். வாதப் பிரதி வாதத்தில் பரம்பொருளைப் பற்றி சர்வ வியாபகத்தைச் சொல்லிப் பேசுகிறார்களே யொழிய அவர்கள் கடவுளின் சர்வ வியாபகத்தை நம்பவில்லைபோல் தோன்றுகிறது. ஞானமும் பக்தியும் கொண்டு சித்தத்தை ஒரு முகப்படுத்தி பிரமத்தைத் தியானித்து உபாசிக்கலாம். ஆனால் இது அனைவருக்கும் முடியாது. முடியும்போல் தோன்றினாலும் அது அநேகமாக பிரமையும் ஒரு வித ஆணவமுமேயாகும். அசேதன லிங்கத்தை வைத்து அதன் மூலம் எங்கும் நிறைந்த பரம் பொருளைத் தியானிப்பது அனைவருடைய சக்திக்குள் அடங்கும் ஒரு சரியான முறையேயாகும்.

அதைக் குறைவுபடுத்திப் பேசுவது தவறாகும். பகவான் ராமகிருஷ்ணரும் சங்கர, ராமானுஜ, மத்வாச்சாரியர்களும், மேல்நாட்டில் பல கிறிஸ்தவ ஞானிகளும் பக்தர்களும் அர்ச்சாவதார பூஜையை அவலம்பித்து அமைதியும் ஆனந்தமும் அடைந்தார்கள் என்பது பிரசித்தம். ஆனபடியால் அர்ச்சனைக்கென்று கல், மரம் முதலிய அசேதனப் பொருள்களை அமைத்துக் கொண்டு நாமும் பரம் பொருளைத் தியானித்து நன்மை பெறலாம்.


போகிறாய். அந்தக் குணத்தை எனக்கும் தந்து என்னையும் துப்புர வாக்குவாயாக! அதற்காக உன்னைச் சரண் புகுந்தேன்'' என்று தலையில் ஜலத்தைத் தெளித்து புரோக்ஷணம் செய்து கொண்டு கையில் ஆசமனத்துக்குக் கொஞ்சம் ஜலம் எடுத்து, '' அழிவற்ற பரம்பொருளே! உன்னை வணங்குகிறேன்'' என்று சொல்லி உறிஞ்சி அருந்துகிறான். அந்த ஜலமும் பராசக்தியே.



ஆராதித்துப் பூஜை செய்யும் மூர்த்தி ஒரு சின்னம் மாத்திரமல்ல. எங்கும் உள்ள ஈசன் அந்த மூர்த்தியிலும் சாக்ஷாத் வீற்றிருக்கிறான். பூஜைக்கு அமைத்துக் கொண்ட விக்கிரகத்தை நம்முடைய பெரியோர்கள் 'அர்ச்சாவதாரம்' என்று ஒரு அவதாரமாகவே பாவித்து வந்திருக்கிறார்கள். ராமன், கிருஷ்ணன் இவர்களைப் போல் இந்த மூர்த்தியும் ஒரு நிரந்தர அவதாரம். கம்பத்திலும் மீனிலும் பன்றியிலும் தசரதன் மகனிலும் அவதரித்தது போலவே, மற்றும் பல திருப்பதிகளிலும் ஈசன் நம்முடைய பக்திக்கு இணங்கி அவதரித்து நிற்கிறான். பரிபூரண வேதாந்த ஞானம் அடைந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆச்சாரியர்களும் அந்தத் திருப்பதிகளில் ஆண்டவனைக் கண்டார்கள். கண்டு மனதை ஒன்றித்தும், தியானித்தும், பாடியும் ஆடியும் வந்தார்கள்.

எங்கும் ஆண்டவன் உளன் என்று உண்மையில் கண்டோமானால் மனதைத் தியானத்தில் நிறுத்துவதற்குச் சாதனமாக ஏன் ஒரு திவ்ய மூர்த்தியை வைத்துக் கொண்டு ஆராதிக்கக் கூடாது? எங்கும் இருப்பவன் அந்த மூர்த்தியில் இல்லாமற் போய் விட்டானா? மூர்த்தி பூஜை செய்யாதவர்கள் செய்ய வேண்டியதில்லை. செய்பவர்களைக் குற்றம் சொல்வது மடமை. ஈசன் சர்வ வியாபகன். பராசக்தியானவன் எதிலும் வீற்றிருக்கிறான். உண்ணும் உணவில் ஒரு பருக்கையை வைத்துப் பூஜை செய்யலாம். பூஜை செய்து உணவை உண்போமானால் பராசக்தி உள் நின்று அருளுவாள்.

தெருவில் குழந்தைகள் விளையாட்டாகத் திருவரங்கக் கோயிலையும், பள்ளிகொண்டான் உருவத்தையும் மண்ணில் கோடிழுத்துக் காட்டிய மாத்திரத்தில் உஞ்சி விருத்தத்தில் சென்று கொண்டிருந்த ராமானுஜர்



ராமகிருஷ்ண உபநிஷதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

16. அர்ச்சாவதாரம்

வீடு கட்டும்போது சாரம் கட்டி அதன்மேல் நின்று வேலைக்காரர்கள் கட்டிட வேலை செய்வார்கள். வீடு கட்டி முடிந்ததும் சாரத்திற்கு வேலையில்லை. நல்ல ஞானம் அடைந்தவர்களுக்குக் கோயிலும் குளமும் வேண்டியதில்லை. தியானத்தில் மனதை அலையாமல் நிறுத்தப் பயிலாதவர்களுக்குப் பூஜையும் ஸ்நானமும் அவசியமாகும்.


பக்தியுடன் களிமண்ணை எடுத்து லிங்கமாகப் பிடித்து வைத்தால் அதுவே ஈசன். அனைத்திலும் இருக்கும் ஈசன் அந்த லிங்கத்தினின்று நீங்கி விடவில்லை.

* * *

“இந்த விக்ரகம் வெறும் களிமண்ணாயிற்றே, இதை எப்படிக் கடவுளென்று தியானிக்க முடியும்?” என்று ஒருவர் கேட்டார். “ஏன் மண், கல், செம்பு என்று எண்ணுகிறீர்? பரம்பொருளால் ஆன உருவம் என்று ஏன் காணமாட்டீர்? அனைத்திலும் கடவுள் இருக்க அனைத்தும் பரம்பொருளாகவே இருக்க, ஏன் இந்த மூர்த்தியும் அந்தப் பரம்பொருளை உபாசிக்க உதவாது? மண்ணும் பரம்பொருளே, செம்பும் பரம்பொருளே. பரம்பொருள் அன்றி ஒரு பொருளுமில்லை. ஒரு சிறு நீர்த்துளியும் பராசக்தியின் உருவமே. குடிக்கும் நீரும் பராசக்தியே. உள் சென்று தாகத்தைத் தணிப்பதும் பராசக்தியே. துளசி மாலையைக் கையில் வைத்துக் கொண்டு ஹரி நாமங்களைச் சொன்னோமானால் ஒவ்வொரு துளசி மணியும் ஹரியின் உருவமே யாகும்.”

ஆகாயம் கறுத்து, வஜ்ராயுதம் பாய்ந்து இடியும் மின்னலும் கக்கும் மேகத்தில் பராசக்தி இருக்கிறாள். அந்த மேகம் மலைமேல் மழையாகப் பெய்து கம்பீரமான நதியாக ஓடும் போது, அதிலும் பராசக்தி இருக்கிறாள். ஆற்றங் கரையில் பக்தன் சந்தியா காலத்தில் “ஜலமே! உன் ஆனந்தம் என்னுள் மகிழ்ச்சியை உண்டாக்குக! உன் சக்தி எனக்குள் பாய்ந்து என்னை பலவானாக்குக! ஜலமே! என் கண்கள் விசாலப் பார்வை பெறச் செய்வாயாக! தாய் தன் அருமைக் குழந்தையை ஆர்வங் கொண்டு போஷிப்பதுபோல், ஜலமே, உன் மங்களச் சுவையும் சத்தும் என்னைப் போஷிக்கும்படி அருள்வாயாக. ஜலமே! எதையும் துப்புரவாக்கி விட்டு, நீ உலர்ந்து மறைந்து





துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்பினால் தான்
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 129-50 TM




மீன்களுக்கு விருந்துபசாரம்

சென்ற மகாயுத்தத்தில் மிகவும் கஷ்ட நஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் இலக்கான நாடுகளில் பர்மாவும் ஒன்று. இருபுறத்திலும் இடி என்பதுபோல, பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்றுவதற்காக ஜப்பானியர்கள் அங்கு தங்களுடைய மிருக பலத்தை உபயோகித்தார்கள். பிறகு ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றுவதற்காகப் பிரிட்டிஷார் அங்கு தங்களுடைய மிருக பலத்தைக் காட்டினார்கள். ஜப்பானியரிட மிருந்து மறுபடியும் பிரிட்டிஷார் பர்மாவைக் கைப்பற்றிய பிறகுதான் சமாதானம் ஏற்பட்டது. இல்லாவிடில் பர்மாவைப் போல் மலேயா, இந்தோனேஷ்யா, இந்தோ - சீனா முதலிய நாடுகளும் அதிக கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகும்படி நேர்ந்திருக்கும்.

பர்மா சுதந்திரம் பெற்றபின் அங்கு ஆரம்பமான உள்நாட்டுக் கலகம் இன்னும் நின்றபாடில்லை. பர்மாவில் மலைகளும் காடுகளும் அதிகமாக இருப்பதால், அந்த இடங்களில் ஒளிந்து கொண்டு சுதந்திர சர்க்காரைத் தாக்கும் கலகக் கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கும் என்று பர்மா பிரதமர் தாகின் நு கூறுகிறார். சீனாவைப்போல் பர்மாவிலும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டு விடுமாயின், பின்னர் ஆசியா முழுவதும் கம்யூனிஸம் பரவுவதற்கு அதிக காலம் செல்லாது என்று அரசியல் ஜோஸ்யர்கள் பயமுறுத்தி வருகிறார்கள்.

எனவே, மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது என்பதுபோல, பர்மா உருவத்தில் சிறியதாயினும், ஆசியாவின் ஜனத்தொகையில் இரண்டு சத விகிதம் பேர்கூட பர்மாவில் இல்லையாயினும், ஆசியாவின் பூகோள அமைப்பில் அது கேந்திர ஸ்தானமாக விளங்கி வருகிறது என்று கூறுவது மிகையாகாது.

சுமாராய்ச் சொல்லுங்கள்!



சென்ஸஸ் அதிகாரி :—உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

வீட்டு எஜமானி (கணவரிடம்) :— இதற்குப் பதில் சொல்லக் கையைப் பிசைந்து கொண்டு நிற்பானேன்? சுமாராய்ப் பதினேரு குழந்தைகள் என்று சொல்லி வையுங்களேன்!

டலே நகரத்தின் பெரும் பகுதியும் சாம்பலாயிது. எனவே அதன்பின் அந்த நகரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதால் அங்கு இப்போது நவீன நாகரிகத்துக்கு இணங்க ஏராளமான கட்டிடங்கள் இருக்கின்றன.

மாண்டலே நகரிலும் மற்ற பர்மிய நகரங்களில் இருப்பதுபோல் பல கோவில்கள் இருக்கின்றன. சுவேதகனுக்கு அடுத்த படியாக மாண்டலேயில் உள்ள கோவில்தான் பெரியது. சுவேதகனைப்போல் மாண்டலே ஆலயமும் அழகிய மலையுச்சியில் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. மாண்டலே ஆலயம் பர்மிய மன்னர்களும் மகாராணிகளும் பிரார்த்தனை செய்து பிரசித்தி பெற்ற புனித ஸ்தலமாகும். சுவேதகன் ஆலயத்துக்கு வருவதுபோல் மாண்டலே கோவிலுக்கும் பிரதி மாதமும் பதினாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து பிரார்த்தித்த வண்ணமாக இருக்கிறார்கள்.

அவற்றைத் தவிர பர்மாவிலுள்ள பல கோவில்களுக்கும் தங்க முலாம் பூசப் பட்டிருப்பதால் பகலிலும் இரவிலும் கூட அவை பிரகாசமாக இருக்கின்றன. அந்தப் பிரகாசத்தை மனிதருடைய மனத்தினுள் நிலவும் அந்தகாரத்தை அகற்றும் ஜோதியாகவே பௌத்தர்கள் கருதுகின்றனர். பர்மாவிலுள்ள முக்கிய கோவில்களின் உச்சியில் அமைக்கப் பட்டிருக்கும் குடையில் வைரங்கள் முதலிய நவரத்தினங்கள்கூட இழைக்கப் பட்டிருக்கின்றன. மேற்படி கோவில்களில் உற்சவங்களும் உண்டு. மாண்டலேக்கு அருகிலுள்ள ஒரு கோவிலில் பன்னிரண்டு அடி உயரமும் எண்பது டன் கனமும் உள்ள பிரம்மாண்டமான மணி இருக்கிறது.

அலௌவரதா மன்னனின் மனைவி சிம்மனா மகாராணியால் நிர்மாணிக்கப் பட்ட கவேஸயான் கோவிலில் வருஷா வருஷம் நடைபெறும் உற்சவத்தில் மீன்களுக்கு விருந்து அளிப்பது பக்தர்களின் புனித கடமையாகக் கருதப்படுகிறது. மீன்களும் பக்தர்களின் கையிலிருந்து உணவை உட்கொள்கின்றன.

மாண்டலேயிலிருந்து ஐந்தரை மைல் தூரத்தில் உள்ள அமரபுரி பட்டுத் துணி நெசவுத் தொழிலில் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

மாண்டலேயிலுள்ள சிறை பெரியது என்பதும் அதில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்ற அரும்பெரும் தேசபக்தர்கள் பிரிட்டிஷ் சர்க்காரால் சிறைப் படுத்தப் பட்டிருந்தனர் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும்.



ஷான் சமஸ்தானங்களைச் சேர்ந்த ஆடவர்

பர்மாவில் மூன்றாவது பெரிய நகரமான மோல்மீனின் ஜனத்தொகை அறுபத்தையாயிரம்தான்.

★

பர்மா ஆசியாவிலுள்ள மிகச் சிறிய நாடுகளில் ஒன்று என்றாலும், கல்வித் துறையில் பல ஆசியா நாடுகளைக் காட்டிலும் அது முற்போக்கானதாக இருக்கிறது. பர்மாவிலுள்ள பௌத்த மடங்களில் பெரும்பாலான பர்மியர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்பித்து வருகிறார்கள். அங்கு சர்வ கலாசாலையும், வைத்தியக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, உபாத்தியாயர் பயிற்சிக் கல்லூரி முதலியனவும் இருக்கின்றன.

மர வேலைகளிலும், தந்த வேலைப்பாடுகளிலும், இழைப்பு வேலைகளிலும் பர்மியர்கள் கை தேர்ந்தவர்கள்.

பெரும்பாலான பர்மியர்களும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். பர்மாவில் பெண்களுக்கு அதிகச் சுதந்திரம் இருப்பது மற்ற ஆசியா நாடுகளில் இல்லாத விசேஷ அம்சமாகும். பர்மா கடைகளில் பெரும்பாலும் பர்மியப் பெண்களே வியாபாரம் செய்கிறார்கள்.

பிரசித்தி பெற்ற தீபா மன்னரின் மனைவி சுபாயலத் ராணியால் மாண்டலேயில் நிர்மாணிக்கப்பட்ட மடாலயம் பர்மாவிலுள்ள மிகவும் அழகான கட்டிடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

பர்மாவை ஆட்சி புரிந்த மன்னர்களில் மிண்டான் மின்னும் அவருக்கு அடுத்தபடியாக பர்மாவின் கடைசி மன்னர் தீபாவும் சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கிறார்கள். மாண்டலேயைப் புதிய தலைநகராகச் சிருஷ்டித்த மிண்டான் மின் மன்னருக்கும் இந்தியாவில் ஆட்சிபுரிந்த பிரிட்டிஷாருக்கும் சச்சரவு ஏற்பட்ட வண்ணமாக இருந்து வந்தது. பிரிட்டிஷாரிடம் அடிபணியக் கூடாது என்று வற்புறுத்திய மேற்படி மன்னரின் இரண்டு புதல்வர்களான இளவரசர்களைப் பிரிட்டிஷார் கைது செய்து இந்தியாவில் சிறைப்படுத்தியிருந்தார்கள்.

1878-ம் வருஷம் மிண்டான் மின் மன்னர் காலமான பின், தீபா பட்டத்துக்கு வந்தார். அவர் பட்டத்துக்கு வந்த பின் அவருக்கு விரோதமாகவும் போட்டியாகவும் இருந்த இளவரசர்கள், இளவரசிகள், உயர்தர அதிகாரிகள் முதலியோரைக் கொலை செய்தார் என்று பிரிட்டிஷார் அந்த மன்னருக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டி விட்டனர். தீபா முதலிலேயே சரணடைந்து பிரிட்டிஷாருக்குச் சாதகமாக இருந்திருந்தால் அவர்கள் அந்தக் குற்றத்தை மறைத்திருப்பார்கள். ஆனால் தீபா மன்னர் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போர்புரிய ஆயத்தமானார். அவருக்கும் பிரிட்டிஷாருக்கும் போர் நடந்தது. துரதிர்ஷ்டவசமாக தீபா மன்னர் தோல்வியுற்றதால், பிரிட்டிஷார் அவரைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு போய் பம்பாயை அடுத்துள்ள ரத்னகிரியில் சிறைப்படுத்தினார்கள். பர்மாவின் கடைசி மன்னரான தீபாவின் கதி அவ்வாறு முடிந்தது. பிறகு 1890-ம் வருஷத்துக்குள் ஷான் சமஸ்தானங்கள் உள்பட பர்மா முழுவதும் பிரிட்டிஷாரின் வசமாயிற்று.

தீபா மன்னரின் பிரசித்தி பெற்ற சிம்மாசனமும் மேஜையும் வெள்ளிப் பாயும் கல்கத்தாவிலுள்ள மியூஸியத்தில் வைக்கப்பட்டிருந்ததும், 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ந் தேதி பர்மா குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது, மேற்படி சாதனங்களை இந்தியா வைஸ்ராயாக இருந்த லார்டு மவுண்ட்பாட்டன் பர்மா சர்க்காருக்கு வெகுமதியாக அளித்ததும் எல்லோரும் அறிந்த விஷயம். அந்தச் சிம்மாசனமும் மேஜையும் வெள்ளிப் பாயும் மாண்டலே அரண்மனையிலிருந்து பிரிட்டிஷாரால் 1902-ம் வருஷம் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன.



பிரிட்டிஷாரிடம் அடி பணிய மறுத்துப் போரிட்ட தீபா மன்னரும் சுபாயலத் மகாராணியும்

தீபா மன்னரின் சிம்மாசனம் பிரம்மாண்டமானது. அதை நிர்மாணிக்க இரண்டு வருஷங்கள் (1857-58) ஆயின என்று சரித்திரம் கூறுகிறது. மாண்டலேயில் கோர்ட் நடவடிக்கைகளையெல்லாம் தீபா மன்னர் அந்தச் சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டுதான் கவனிப்பது வழக்கமாம். அதைப் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பிய போது அதைப் பிரித்து முப்பது பிரம்மாண்டமான பெட்டிகளில் வைத்து அனுப்பினார்களாம். அந்தச் சிம்மாசனத்தின் எடை மூன்று டன் ஆகும்!

சென்ற வாரம் பண்டித ஜவாஹர்லால் நேரு பர்மாவுக்கு விஜயம் செய்தபோது, பர்மா குடியரசுத் தலைவரின் மாளிகையில் தற்போது காட்சியாக வைக்கப்பட்டுள்ள தீபா மன்னரின் சிம்மாசனத்தையும் மேஜையையும் வெள்ளிப் பாயையும் பார்வையிட்டார்.

1892-ம் வருஷம் ஏற்பட்ட கோரமான தீ விபத்தில் மாண்

யுத்த கேந்திரம்

ஜெயமணி



மாண்டலே நகரிலுள்ள பிரபல மடாலயம்

பர்மா சுதந்திரம் பெற்ற சில மாதங்களுக்குள் கரேன் கலகக்காரர்கள் பல நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். பர்மாவில் பதினாயிரக்கணக்கான சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள பிரதேசம் கரேன்களின் வசமாயிற்று. எனவே, சுதந்திர பர்மா சிதறுண்டு போய் விடுமோ என்று தோன்றியது. எனினும் இப்போது பர்மா சர்க்காரின் கை ஓங்கி அவர்கள் கலகக்காரர்கள் கைப்பற்றிய இடங்களையெல்லாம் திரும்பவும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். கரேன்களைத் தவிர மற்றப் பிரிவினர்கள் பர்மா சர்க்காருக்கு ஆதரவாக இருந்தது பர்மாவின் அதிர்ஷ்டமே யாகும். முதலில் கரேன்களுக்குச் சகல உரிமைகளும் அளிப்பதற்கு பர்மா சர்க்கார் தயாராக இருந்தனர். ஆனால் தங்களுக்கு பர்மாவிலிருந்து பிரியவும் உரிமையுள்ள சுயாட்சி அளிக்க வேண்டும் என்று கரேன்கள் கோரினர். அதிலிருந்துதான் தகராறு முற்றிப் போரில் வந்து முடிந்தது.

கரேன்களில் தொண்ணூறு சதவிகிதத்தினர் பர்மியர்களைப் போல பௌத்தர்களையாயினும், கரேன் தலைவர்கள் யாவரும் கிறிஸ்தவர்கள். மேற்படி தலைவர்களும் ஆயிரக்கணக்கான கரேன் சிப்பாய்களும் பிரிட்டிஷாரிடம் வெகுகாலமாக ராணுவப் பயிற்சி பெற்றவர்கள். அதனால்தான் திரை மறைவில் சில பிரிட்டிஷ்காரர்களுடைய தூண்டுதலின் மீது கரேன்கள் பர்மா சர்க்காருக்கு விரோதமாகப் போர் செய்து வருகிறார்கள் என்று வதந்தி உலாவியது. பர்மா சர்க்காருக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் கடன் கொடுத்து நேரடியாக உதவி புரிய முற்பட்ட பின்தான் மேற்படி வதந்தி மறைந்தது.

★

பர்மாவில் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேல் உள்ள நகரங்கள் இரண்டுக்கு மேல் இல்லை. ரங்கூனில் நாலு லட்சம் ஜனங்களும், அதற்கு அடுத்தபடியாக ரங்கூனிலிருந்து 386 மைல்களுக்கு வடக்கே ஐராவதி நதிக் கரையில் உள்ள மாண்டலேயில் ஒன்றரை லட்சம் ஜனங்களும் இருக்கிறார்கள். மாண்டலே பர்மிய மன்னர்களில் ஒருவரான மிண்டான் மின் மன்னரால் 1857-ம் வருஷம் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட நகரமாகும்.

மங்குடி சீனிவாசய்யர் ஆகிய அநேக இளம் வித்துவான்களின் கச்சேரிகளுக்கும் வாசித்து அவர்களை உற்சாகப் படுத்திக் கொண்டு வந்தார்.

முருகனிடம் இவருக்கு ஒப்பற்ற பக்தியுண்டு. விசேஷ அர்ச்சனை கடவுள் வழிபாடு, உபவாசம், மௌனம், நிஷ்டை ஆகியவற்றால் இணையற்ற மனோ நிலைமையை அடைந்தவர். எல்லோரையும் "ஆண்டவன்" என்றே யழைப்பார்.

திருவையாற்றில் நடந்த ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் உற்சவங்களில் கட்சி பேதங்களின்றி இரண்டிலும் சமமாகவே ஈடுபட்டிருந்தார். கஞ்சிரா வாத்தியத்தில் எல்லா அம்சங்களிலும் தமது குருவை விட இவர் சிறந்து விளங்கியபடியால் அந்த ஒற்றைக் கை வாத்தியத்தில் இவருடைய சாதனை அசாதாரணமானது. கஞ்சிராவில் அவர் அழகாகவும் அநுசரிப்புடனும் விறு விறுப்பாகவும் அநேக துரிதகாலச் சொற்களை, தாள நுட்பங்களுடன் உட்புகுந்து வாசிப்பார். அதைக் கேட்டு ஆனந்தமடைந்து மெய்மறந்த உண்மை ரசிகர்கள், "பிள்ளையவர்களின் கஞ்சிரா நாதமே அலாதியானதென்றும் அதைக் கேட்ட காதுகளுக்கு இப்போதுள்ள கஞ்சிரா வாசிப்பு படித்துறைகளில் வேஷ்டி துவைக்கும் சத்தமாகத்தான் தோன்றுகிறது" என்பார்கள்.

பொதுவாக இவர் கஞ்சிரா வாசிக்க நேர்ந்த கச்சேரிகளில், சபையோரின் கரகோஷங்களை முதலிலேயே பெற்று விடுவது வழக்கம். ஆனால் நாயனாப் பிள்ளையின் கச்சேரிகளில் அவருக்கும் கொன்னக்கோல் பக்கிரியாப் பிள்ளைக்கும் முன்னேற்பாடான சிட்டாக்களும் ஒத்திகைகளும் இருந்தபடியால் மற்றவர்கள் அம்மாதிரி கச்சிதமாய்த் தம்மைப் பின்தொடர்ந்து நிர்வகிக்க முடியாதென்றெண்ணி, தாம் பாடும்போது, மற்ற பக்க வாத்தியங்களைத் தம்முடன் சேர்ந்து வாசிக்க நாயனாப் பிள்ளை இடம் கொடுப்பதில்லை. ஒரு சமயம் திருவிழிமிழலை சகோதரர்களின் வீட்டுக் கல்யாணத்தில் நடந்த நாயனாப் பிள்ளையின் கச்சேரியில் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை கஞ்சிரா வாசித்தார். அன்றும் வழக்கம் போல் நாயனாப் பிள்ளையும் பக்கிரியாப் பிள்ளையும் சேர்ந்து, முதலில் கரகோஷங்களைப் பெற்றார்கள். அன்று பாடப்பட்ட எட்டுக்களைச் சவுக்கப் பல்லவியில் அவர்களுடன் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையும் புகுந்து வாசித்ததுடன் அந்த நெரடலான பல்லவியை அவர்களுடன் திரிகாலப் படுத்தியுங் காண்பித்து ஒரு பெரிய தனி யாவர்த்தமும் வாசித்தார். சபையோர் மகிழ்ந்து கரகோஷம் செய்தனர். அடுத்தபடியாகப் பாடப்பட்ட சில அபூர்வ சந்தங்களமைந்த திருப்புகழ் ஒவ்வொன்றுக்கும் கூடவே வாசித்ததுடன் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறிய தனியாவர்த்தமும் வாசித்தார். அவருடைய அன்றைய வாசிப்பைக் கேட்ட வித்துவான்களும் ரசிகர்களும் இன்றைக்கும் மறக்க இயலாது.

ஒரு சமயம் சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த நாயனாப் பிள்ளையின் கச்சேரியில், வழக்கம்போல் தாளத்தைப் போடாமலேயே பல்லவி பாடி இவரைத் தனியாவர்த்தம் வாசிக்க விட்டார். தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையும் இது இன்ன தாளமாய்த்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து ஒரு தனியாவர்த்தம் வாசித்து முடித்தவுடன் பல்லவியைப் பாடகரும் சேர்ந்து எடுக்காததால் சபை சப்பென்றிருந்தது. உடனே பாடகரைப் பார்த்து "நான் வாசித்தது சரிதானே?" என்று கேட்டார். அவர் 'இல்லை' என்று தலையாட்டி விட்டார். ஆனால் பிள்ளையவர்களோ விடாமல் மறுபடியும் வாசித்து முடித்துப் பல்லவியெடுக்கும்போது கூட, நாயனாப் பிள்ளை சும்மாயிருந்த படியால் "இப்போது சரிதானா?" என்று ஆவலுடன் கேட்டார். "இல்லை" என்றார் நாயனாப் பிள்ளை. தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை விடுவதாயில்லை! மூன்றாம் முறையும் வாசித்து முடித்து "இதாவது சரியா?" என்று கேட்டார். "இது ரொம்ப சரி" என்றார் நாயனாப் பிள்ளை. ஒரு தடவை அவரை ஏற இறங்கப் பார்த்த தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை "இந்த இழவைத்தான் மூன்று தடவையும் வாசித்தேன்" என்று சொல்லி சபையோர் பக்கம் திரும்பியவுடன் கரகோஷம் மண்டபத்தைப் பிளந்தது.

நிற்க. அவர் மிருதங்கம் வாசிக்கும் கச்சேரிகள் அநேகமாய், இசையின்பம் பொருந்தி நாதமயமாகவே விளங்கும். மிருதங்கம் வாசிக்கையில் நாத விந்யாஸங்களிலும் கஞ்சிரா வாசிக்கையில் லய விந்யாஸங்களிலும் அவர் பெரிதும் ஈடுபட்டதால் இரண்டு வாத்தியங்களிலும் ஜகப் பிரசித்தராய் விளங்கினார். முருகன் திருவருளால் பக்குவ மனோ நிலையை யடைந்து கடைசிகாலத்தில் காஷாயம் பெற்று, "ஸ்ரீ சின்மயானந்த மௌன குருஸ்வாமி" என்ற திரு நாமம் பூண்டு 1936-ல் முருகப் பெருமானின் திருவடி யடைந்தார். அவருடைய சிஷ்யர்கள் இன்றைக்கும் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையின் நினைவு நாளை வெகு விமரிசையாய்க் கொண்டாடி வருகிறார்கள்.

வாத்தியத்தின் அமைப்பை நன்கறிந்து இடந்தரை, வலந்தரை பொருத்தமாகவும் 'அநேக நவீனச் சொற்களை மிருதங்கத்தில் புகுத்திவிட்டாரோ' என்று சொல்லும்படியாய் மிக அழகாக வாசித்து ரசிகர்களைப் பிரமிக்கச் செய்தார்.

காலஞ் சென்ற காரைக்குடி வீணை சுப்பராமய்யர், இப்போதுள்ள வீணை சாம்பசிவய்யர் ஆகிய இருவரும் ஜோடியாக வாசித்துக் கச்சேரி செய்கையில் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை அவர்களுடன் மிகவும் இணைந்து, நயமாகவும் பொருத்தமாகவும் மிருதங்கம் வாசித்து இணையற்ற புகழைப் பெற்றார். காரைக்குடி சகோதரர்கள் தான விஷயங்களில் மிகுந்த நிபுணர்களானபடியாலும், தானத்தில் உட்புகுந்து அநேக நுட்பமான வேலைகளைச் செய்து ரஸிகர்களைப் பரவசப் படுத்தியபடியாலும், தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை அந்தக் கச்சேரிகளில் தமது முழு சாமர்த்தியத்தையும் உபயோகிக்க முடிந்தது. மிருதங்க வாத்தியத்தில் உள்ள கன நய பாவங்களைப் பக்குவமாய் வாசித்து எல்லாருடைய பாராட்டுதலையும் நன் மதிப்பையும் பெற்றார்.

தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை மிருதங்கம் வாசிக்கும்போது மிருதங்கம் ஒரு தேவ வாத்தியம் என்பதை உணர்ந்து ரஸிகர்கள் மகிழ்ந்தார்கள். இவ்வளவு ஞானமும் அனுபவமும் அடைந்திருந்த போதிலும் இளம் வித்துவான்களின் கச்சேரியில் வாசிக்க அவர் யோசித்ததில்லை.

இந்தச் சமயத்தில் அதாவது 1920-ம் வருஷத்தில், சங்கீத உலகில் ஒரு புரட்சியை உண்டாக்கிய காஞ்சீபுரம் நாயனாப் பிள்ளை சகாப்தம் ஆரம்பமாயிற்று. அவர் மன்னார்குடி கொன்னக்கோல் பக்கிரியாப் பிள்ளையைத் தமக்குத் துணையாக அமைத்துக்கொண்டு 35 தாளங்களிலும், எல்லாவித நடைகளையும் அமைத்து, விசித்திரமான பல்லவிகளைத் தயாரித்துக் கச்சேரிகளில் வெகு அலக்ஷ்யமாய் அள்ளி வீசினார். அது மட்டுமா? பல்லவி எந்தத் தாளத்தில் என்பதை, பகிரங்கமாய்ப் போட்டுக் காட்டாமல் மறைவாகப் போட்டுக் கொண்டு பாடியதால், பக்கவாத்தியக்காரர்கள் எல்லாம் திண்டாடித் தெருவில் நின்றார்கள். மாதக் கணக்கில் இவர் சிரமப்பட்டுத் தயாரித்த பல்லவிகளை, நிமிஷக் கணக்கில் அறிந்துகொண்டு வாசிக்க வேண்டிய மகத்தான பொறுப்புள்ள பக்க வாத்தியக்காரர்களுக்கு, தாளத்தைக் கூட காட்டாமல் நாயனாப் பிள்ளையவர்கள் பாடி வந்தபடியால் கேட்போர் அனைவரும் பிரமித்தார்கள். உண்மையான ரஸிகர்கள் ஊக்கமிழந்தார்கள். இனிமையான சங்கீதத்தை அனுபவிக்க ஏற்பட்ட இசையரங்கம், பக்க வாத்தியங்களின் கோரமான யுத்த அரங்கமாக மாறிற்று. கொன்னக்கோல் பக்கிரியாப் பிள்ளை ஒருவரைத் தவிர, மற்றவர்களுக்கு விட்ட இடம் தொட்ட இடம் தெரியாத நிலைமையில் பாடகர் பாடியபடியால், அவருடைய கச்சேரிக்குப் பிரசித்தி வாய்ந்த பக்க வாத்தியக்காரர்கள் வாசிக்க முன் வரவில்லை. அநேகர் இதை அதர்ம யுத்தம் என்றே எண்ணினார்கள்.



ஸ்ரீ மாருண்டியாப் பிள்ளை

இந்தச் சூழ்நிலையை மாற்றியமைத்த கௌரவம் பிடில் கோவிந்தசாமிப் பிள்ளைக்கே உரியது. கோவிந்தசாமிப் பிள்ளை தாம் நடத்திவந்த திருவையாறு ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவத்தில் ஒரு வருஷம் நாயனாப் பிள்ளை பாடியபோது தாமே பிடில் வாசித்தார். அழகநம்பியாப் பிள்ளை மிருதங்கம், தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை கஞ்சிரா, சுந்தரமய்யர் கடம், சீதாராமய்யர் மோர்சிங், வேணு செட்டியார் டோலக், பக்கிரியாப் பிள்ளையின் கொன்னக்கோல். இப்படி முழு கோஷ்டியாக அந்தக் கச்சேரியில் கலந்து வாசித்து நாயனாப் பிள்ளையைக் கௌரவித்தார்கள். அதன் பிறகு இம்மாதிரியான அநேக முழு கோஷ்டிக் கச்சேரிகளில் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளையும் சேர்ந்து வாசித்தார்.

அப்பொழுது முன்னணிக்கு வந்துகொண்டிருந்த அரியக்குடி ராமானுஜய்யங்கார், மகாராஜபுரம் விசுவநாதய்யர், செம்பை வைத்தியநாத பாகவதர், பாலக்காடு ராம பாகவதர், முசிரி சுப்பிரமணிய அய்யர், செம்

புதுக்கோட்டை - - - - - தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

கஞ்சிரா, மிருதங்கம் ஆகிய இரண்டு தாள வாத்தியங்களிலும் பிரசித்தி பெற்று விளங்கிய தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை புதுக் கோட்டையில் பிறந்தவர். முதலில் புதுக் கோட்டை சமஸ்தானத்தில் ஒரு சிறிய உத்தியோகத்திலிருந்தார். அந்தக் காலத்தில் புதுக் கோட்டையில் நவராத்திரி உற்சவத்தை விமரிசையாகக் கொண்டாடுவார்கள். அது சமயம் பற்பல இடங்களிலிருந்து வரும் பண்டிதர்களுக்கும், கலைஞர்களுக்கும், வித்வான்களுக்கும் தக்கபடி சன்மானம் அளிக்கப்படுவது வழக்கம். அப்பொழுது நடைபெறும் சங்கீதக் கச்சேரிகள், கதா காலக்ஷேபங்கள் முதலியவற்றையெல்லாம் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை இடைவிடாமல் கேட்டுத் தமக்குள்ள தாள ஞானத்தை அபிவிருத்தி செய்து கொண்டு கடவாத்தியம் மட்டும் வாசித்து வந்தார்.

பிறகு புதுக் கோட்டையில் புகழுடன் விளங்கிய மாமுண்டியாப் பிள்ளையிடம் கஞ்சிரா கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

மாமுண்டியாப் பிள்ளையின் காலத்திற்கு முன், கஞ்சிரா, ஒரு சாதாரண வாத்தியமாகவே மதிக்கப்பட்டு வந்தது. விசேஷமாய் பஜனைகளில் சிலர் அதைச் சத்தப்படுத்தி வாசித்து வந்தார்கள். அந்த நிலைமையில் இருந்துவந்த ஒற்றைக் கை வாத்தியத்தை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்த பெருமை மாமுண்டியா பிள்ளையைத்தான் சேரும். கஞ்சிரா வாத்தியத்தில் அவர் அநேக சொற்களைக் கொடுத்து இடது கையின் அனுசரிப்பினால் குமுக்காரம் பேசும்படி செய்வார். தானத்தில் உட்புகுந்து பல ததிங்கிணதோம் வகையறாக்களையும் சாதி வின்யாசங்களையும் அபரிமிதமாய்க் கையாண்டு பிரமிக்கும்படிச் செய்வார்.

கஞ்சிராவானது நாத சுகம் இல்லாத வாத்தியமாயிருந்தும், மாமுண்டியாப் பிள்ளையின் திறமையினால், சங்கீதக் கச்சேரிகளில் மிருதங்கத்துக்கு அடுத்த ஸ்தானத்தில் பக்க வாத்தியமாய்ச் சேர்த்துக் கொள்ளப்படும் நிலைமையை அடைந்தது.

தாள ஞானிகள் ரசித்துக் கொள்ளும்படியான அநேக அம்சங்கள், மாமுண்டியாப் பிள்ளையின் வாசிப்பில் இருந்தபடியால், நல்ல லய ஞானமுள்ள பாடகர்கள் தான் அவரைக் கச்சேரியில் வைத்துச் சமாளிக்கலாம். அதனால் பெரிய வித்துவான்கள் கூட அவர் கஞ்சிராவை அதிகம் விரும்புவதில்லை. இதனால் தமக்கென்று ஒரு வித்வான் இருக்கவேண்டிய அவசியத்தை மாமுண்டியாப் பிள்ளை உணர்ந்தார். தாம் கையாளும் தாள நுட்பங்களை அறிந்து, அதைப் பல்லவி சுரம் பாடுவதில் அமைத்துப் பாடக் கூடிய இளம் வித்துவான் தமக்குத் தேவையாயிருந்தபடியால், கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயரை அவருக்கேற்றபடி செய்து கொண்டார். அதன் பிறகுதான் மாமுண்டியா பிள்ளையின் ஞானத்தையும் வேலைப்பாடுகளையும் ரசிகர்கள் அனுபவிக்க முடிந்தது. இந்தக் காலத்தில் தான் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை மாமுண்டியாப் பிள்ளையிடம் கஞ்சிரா வாசிக்கக் கற்றுக் கொண்டார்.

பிற்காலத்தில் கஞ்சிரா வாத்தியத்தில் இணையற்று விளங்கி வந்த தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை ஒரு சமயம் நாராயணசாமி அப்பாவின் நாதமயமான மிருதங்க வாசிப்பைக் கேட்கும்படி நேர்ந்தது. உடனே தாமும் மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். இன்னும் துக்காராம், தாஸ் சுவாமிகள், முதலியவர்களின் வாசிப்பையும் கேட்டு, மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தார். முதலில் கஞ்சிரா வாத்தியத்தில் நல்ல தேர்ச்சியிருந்தபடியால், மிருதங்கம் வாசிப்பது அவருக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லை. இதையும் அபிவிருத்தி செய்து கொள்ளுவதற்காக அந்தக் காலத்திய சம்பிரதாயப்படி கதா காலக்ஷேபங்களுக்கு மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தார். முதலில் திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரியாரின் கதைகளுக்கு வாசித்து வந்தார். பிறகு மாங்குடி சிதம்பர பாகவதரின் செட்டுடன் சேர்ந்து சுமார் மூன்று வருஷங்கள் வாசித்தார்.

இப்படியாகச் சுமார் பத்து வருஷங்கள் கஷ்டப்பட்டுத் தம்முடைய இடைவிடா உழைப்பினாலும் இணையற்ற கேள்வி ஞானத்தினாலும், தளராத ஊக்கத்தினாலும், உயர்ந்த ஞானத்தினாலும் மிருதங்க

"என்னய்யா, யாரைப் பார்த்தாலும் ஒரே இளிப்பா இளிக்கிறீங்க? ஸினிமா என்றால் இப்படித்தானோ? என்னிடம் டிக்கட் இருக்கிறது, அய்யா!" என்று செங்கோடன் எடுத்துக் காட்டினான்.

"கோபித்துக் கொள்ளாதே, அப்பனே! நீ வைத்திருக்கிற டிக்கட் இரண்டே காலணா டிக்கட்; அந்த அம்மாள் ஒன்றே கால் ரூபாய் ஸீட்டில் உட்கார்ந்திருக்காங்க! நீ கூப்பிட்டால் வருவாங்களா, அப்பா! — ஆமாம்; நீ என்னத்துக்கு இவ்வளவு சிரமப்படுகிறாய்? உனக்கு அந்த அம்மாளைத் தெரியுமா?" என்றான்.

செங்கோடன் காதில் மற்றதெல்லாம் விழவில்லை; ஒன்றேகால் ரூபாய் டிக்கட் என்பது மட்டும் நன்றாக விழுந்தது. அவன் மனதில் ஏற்பட்ட ஆச்சரியம் அவனுடைய வாய் அகலமாகப் பிளந்ததிலிருந்து தெரிந்தது.

"என்னய்யா, நிஜமாகச் சொல்கிறாயா? அல்லது என்னைக் கேலி செய்கிறாயா? இவர்கள் எல்லாரும் தலைக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுத்துவிட்டா இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறார்கள்?" என்றான் செங்கோடன்.

"இவர்கள் எதற்காக டிக்கட் வாங்குகிறார்கள்? ஓசி டிக்கட்டில் வந்தவர்கள்தான!" என்று தணிந்த குரலில் சொன்னான் 'கேட்' ஆசாமி.

ஓசி டிக்கட் என்றால் என்னவென்று செங்கோடனுக்குத் தெரியவில்லை.

"அப்படி ஒரு டிக்கட்டா? அதிலே எனக்கும் ஒன்றுதான் கொடேன்!" என்றான் செங்கோடன்.

"நான் கொடுக்க முடியாது. அந்த அம்மாளுக்கு வலப் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறார், பாரு! அவர் இந்த ஸினிமாவுக்கு மானேஜர். அவரை நாளைக்குக் கேளு. இப்போது உன் இடத்துக்குப் போ!"

"அந்த அம்மாளுக்கு இடப் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறாரே, அவர் யார் தெரியுமா?"

"அவர் இந்த ஊர்ப் பஞ்சாயத்து சபையின் மானேஜர். போ! போ! படம் ஆரம்பித்தாகி விட்டது."

"இது என்னடா வம்பாயிருக்கிறது! வலது பக்கத்திலே ஒரு மானேஜர்! இடது பக்கத்திலே ஒரு மானேஜர்!" என்று முணு முணுத்துக் கொண்டே செங்கோடன் தன் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். படம் ஆரம்பித்த பிறகு இருட்டில் தட்டுத் தடுமாறிப் போய்ச் சேர்ந்தபடியால் பலரும் அவனைத் திட்டினார்கள். ஆனால் அதெல்லாம் அவன் கவனத்துக்கு வரவேயில்லை. தன்னைச் சினிமாவுக்கு வரச் சொல்லி விட்டு அந்தக் குமாரி பங்கஜா எங்கேயோ தூரத்தில் இரண்டு ஆண் பிள்ளைகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருப்பதைப் பற்றியே யோசனையாயிருந்தது.

நடுவில் சாவகாசம் கிடைத்தபோதெல்லாம் பக்கத்திலிருந்தவர்களை விசாரித்து, ஸினிமாவில் குறைந்த விலை டிக்கட் வாங்குகிறவர்கள் திரைக்குப் பக்கத்தில் உட்காருவார்கள் என்றும், அதிகவிலை டிக்கட் வாங்குகிறவர்கள் தூரத்தில் உட்காருவார்கள் என்றும் செங்கோடன் தெரிந்து கொண்டான். இந்த ஏற்பாடு தலைகீழ்ப் பாடமாகவே அவனுக்குத் தோன்றியது.

படத்தில் சுவாரஸ்யமான கட்டம் ஒன்று வந்தது. செம்பவளவல்லி சொன்னாளே, அந்தக் கட்டந்தான். கண்ணீர் விட்ட கதாநாயகியைக் கதாநாயகன் தேற்றிச் சமாதானம் செய்யும் இடம். செங்கோடன் அதில் கவனத்தைச் செலுத்தி யிருந்தபோது, திடீரென்று படம் நின்றது. ஒரு கணம் ஒரே இருட்டா யிருந்தது. அடுத்த கணம் பின்னால் எங்கேயோ வெளிச்சமாய்த்தெரிந்தது. "நெருப்பு!" "நெருப்பு!" என்ற கூக்குரல் கிளம்பிற்று. உடனே கூடாரத்திற்குள் இருந்தவர்கள் விழுந்தடித்து ஓடத் தொடங்கினார்கள். பெண் பிள்ளைகள் "ஐயோ! ஐயோ!" என்று கத்தினார்கள். குழந்தைகள் வீலிட்டு அழுதன.

செங்கோடன் எல்லாரையும் போல் எழுந்து நின்றான். வெளியே ஓட எத்தனித்தான். சட்டென்று ஒரு ஞாபகம் வந்தது. நெருப்பு பின்னாலே தான் பிடித்திருக்கிறது. குமாரி பங்கஜா அங்கேதான் இருக்கிறாள்!—செங்கோடனின் தலை சுழன்றது! (தொடரும்)

குடிகாரப் பயல் இங்கே வந்தது? நான் பிடித்துத் தள்ளுகிறேன்!'' என்று சொல்லி விட்டுச் செங்கோடன் சுற்று முற்றும் பார்த்தான்.

கூடார சினிமாக்களில் சுமார் ஆயிரத்துச் சொச்சம் அடி படம் காட்டியதும் படத்தை நிறுத்திவிட்டு விளக்குப் போடுவார்கள். முதல் தடவை விளக்குப் போட்டதும் செங்கோடன் 'படம் முடிந்து விட்டது' என்று எண்ணிக் கொண்டு எழுந்தான். பக்கத்திலிருந்தவர்கள் "உட்காரு! உட்காரு!" என்று இரைந்தார்கள்.

"இன்னும் கொஞ்சம் படம் பாக்கி இருக்கிறதா?" என்று செங்கோடன் கேட்டான்.

"அட பட்டிக்காடு! ஆயிரம் அடி தான் ஆகியிருக்கிறது; இன்னும் பதினேழாயிரம் அடி பாக்கியிருக்கிறது!" என்றார் ஒரு ஸினிமா ரஸிகர்.

"என்ன, ஐயா, விளையாடுகிறாய்? பதினேழாயிரம் அடியை எவனாலே தாங்க முடியும்? கடோத்கசனாலேகூட முடியாதே!" என்றான் செங்கோடன்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அவன் பின்னால் பார்த்த போது, ஸினிமாக் கூடாரத்தின் அந்தப் பக்கத்து ஓரத்தில், குமாரி பங்கஜா உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவளுக்குப் பக்கத்தில் இரண்டு ஆண் பிள்ளைகள் உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் அவர்களை அவன் பொருட்படுத்திக் கவனிக்கவில்லை.

"ஐயோ! பாவம்! அவ்வளவு தூரத்திலே போய் உட்கார்ந்திருக்கிறாளே? படம் ஒன்றுமே தெரியாதே! தாமதித்து வந்ததனால் அங்கே தான் இடம் கிடைத்ததுபோலிருக்கிறது!" என்று எண்ணி அநுதாபப்பட்டான். அவனுக்குப் பக்கத்திலேயிருந்த ஒரு ஆள் அவனுடைய ஆர்ப்பாட்டம் பொறுக்காமல் எழுந்து போய் விட்டான். அந்த இடம் காலியாக இருந்தது. செங்கோடன் சட்டென்று தன் தலையிலிருந்த முண்டாசை எடுத்து விரித்து அந்த இடத்தில் போட்டான். குமாரி பங்கஜா இருந்த இடத்தைப் பார்த்துக் கையினால் சமிக்ஞை செய்து கொண்டே "வா! இங்கே இடம் இருக்கிறது! வந்து விடு!" என்றான். குமாரி பங்கஜா அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை; அவள் காதில் இவன் அழைப்பு விழுந்ததாகவும் தோன்றவில்லை. ஆனால் இவனுக்குப் பக்கத்திலிருந்தவர்கள் அத்தனைபேரும் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். "அந்தப் பட்டிக்காட்டான் தலையில் அடித்து உட்கார வை!" என்றது ஒரு குரல்.

மறுபடியும் விளக்கு அணைந்தது; கூடாரம் இருண்டது; திரையில் படம் ஓடத் தொடங்கியது. செங்கோடனுக்கு இந்தத் தடவை படம் பார்ப்பதில் உற்சாகம் மிகக் குறைந்து விட்டது. உண்மையில், படத்தின் பேரில் அவன் மனம் செல்லவே இல்லை. குமாரி பங்கஜா வெகு தூரத்தில் படம் தெரியாத இடத்தில் உட்கார்ந்திருக்கிறாளே என்ற கவலை அவனைப் பிடுங்கித் தின்றது.

அடுத்த தடவை விளக்கு எரியத் தொடங்கியதும், செங்கோடன் தன் தலைக்குட்டையை நன்றாகத் தரையில் இரண்டு பேருக்கு இடம் காணும்படி விரித்து விட்டு எழுந்து போனான். கூடாரத்தின் பின்னால் சென்று, குமாரி பங்கஜா உட்கார்ந்திருந்த இடத்திற்குள் நுழையப் பார்த்தான். அங்கே காவலுக்கு நின்றவன் அவனைத் தடுத்தான்.

"எங்கே போகிறாய்?" என்றான்.

"அந்த அம்மாவிடம் பேச வேண்டும்!" என்றான் செங்கோடன்.

"இங்கே பேச முடியாது. ஸினிமா கொட்டகையிலே பேச்சு என்ன வந்தது? வெளியில் வந்த பிறகு இஷ்டம் போலப் பேசிக் கொள்!"

"என்ன ஐயா, இப்படி ஏறுமாறாய்ப் பேசுகிறாய்? அங்கே திரைக்குப் பக்கத்தில் இடம் சௌகரியமாயிருக்கிறது. அந்த அம்மாளிடம் சொல்லி அழைத்துப்போக வந்தேன். நீ உள்ளேயே விட மாட்டேன் என்கிறாயே?"

அந்த ஆசாமி செங்கோடனை ஏற இறங்கப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, "ஆமாம், அப்படித்தான்! உன்னை விட முடியாது! போ!" என்று சொன்னான்.

டிருந்தான்; மேகக் குதிரைகளில் சவாரி செய்தான்; மரத்துக்கு மரம், கிளைக்குக் கிளை தாவினான். தேர் திருவிழாக்களுக்குப் போவதற்காக அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்த சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு, சட்டைப் பையில் எட்டணாக்காசையும் எடுத்துப் போட்டுக் கொண்டு, தலையில் ஜோராக முண்டாசு கட்டிக் கொண்டு ஒரு மணி நேரத்துக்கு முன்னாலேயே ஸினிமாவுக்குக் கிளம்பிச் சென்றான்.

போய் மான் காடு ஓரமாகப் போன சாலைக்கு அரை மைல் கிழக்கே செங்கோடனுடைய கேணியும் காடும் குடிசையும் இருந்தன. அந்தச் சாலைக்கு அரை மைல் மேற்கே சின்னமநாயக்கன் பட்டிக்கு வந்திருந்த 'டூரிங் ஸினிமா'வின் டேரா இருந்தது. செங்கோடன் அங்கே போய்ச் சேர்ந்தான். கொஞ்ச நேரம் கூடாரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். குமாரி பங்கஜா வந்திருக்கிறாளா என்று பார்ப்பதற்காகத்தான். ஆனால் அவளுடைய தரிசனம் கிட்டவில்லை. ஸினிமாப் பார்ப்பதற்காக வந்திருந்த சில ஸ்திரீகள் அங்குமிங்கும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அருகில் சென்று செங்கோடன் உற்றுப் பார்த்தான். அவர்கள் இவனைச் சற்று ஏளனமாகப் பார்த்துச் சிரித்தார்கள். ஒருவருக்கொருவர் செங்கோடனைப் பற்றிப் பரிகாசமாகப் பேசிக் கொண்டார்கள். அவர்களில் ஒருத்தி அவனைப் பார்த்து "என்ன மச்சான்? புகையிலை இருக்குதா?" என்று கேட்டாள். "தூ! பட்டிக்காட்டு ஜன்மங்கள்!" என்று செங்கோடன் முணுமுணுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

ஸினிமாப் பார்க்க வந்தவர்கள் எல்லாரும் டிக்கட் வாங்கத் தொடங்கினார்கள். செங்கோடன் மட்டும் காத்துக் கொண்டிருந்தான். முதல் மணி அடித்தாகிவிட்டது. அப்படியும் அந்தக் குமாரி பங்கஜாவைக் காணவில்லை. ஒரு வேளை அவள் வந்ததைத் தான் கவனிக்கவில்லையோ என்னமோ, டிக்கட் வாங்கிக் கொண்டு கூடாரத்துக்குள் போய் விட்டாளோ என்னமோ என்ற சந்தேகம் செங்கோடன் மனதில் உதித்தது. உடனே அவசரமாகச் சென்று இரண்டேகாலணா கொடுத்து ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டான். அப்போது கூட ஒரு வேளை வெளியில் வந்து கொண்டிருக்கிறாளோ என்று பார்த்துக் கொண்டே விரைவாக நடந்து கூடாரத்துக்குள் சென்றான். இரண்டு மூன்று இடத்தில் அவன் நுழையப் பார்த்த இடங்களில் அவனுடைய டிக்கட்டைப் பார்த்து விட்டு "முன்னார்குப் போ!" "முன்னுக்குப் போ!" என்றார்கள். செங்கோடனும் எட்டி எட்டிப் பார்த்து விட்டு முன்னுக்குப் போனான். இரண்டே காலணா டிக்கெட் வாங்கிய ஜனங்கள் அதற்குள் கொட்டகையில் நிறைந்து விட்டார்கள். செங்கோடன் எல்லாருக்கும் முன்னாடி சென்று திரைக்குச் சமீபத்தில் உட்கார்ந்து கொண்டான். இவ்வளவு நேரம் கழித்து வந்தும் இவ்வளவு படத்துக்கு அருகாமையில் தனக்கு இடம் கிடைத்தது பற்றி மனதிற்குள் சந்தோஷப் பட்டான். "அதிர்ஷ்டம் வரும்போது அப்படித்தான் வரும்!" என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அதிர்ஷ்டம் பூரணமாகவில்லை என்பது நினைவு வந்தது. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழும்பி எழும்பி நாலாபுறமும் பார்வையைச் செலுத்தினான். குமாரி பங்கஜாவை எங்கும் காணவில்லை.

திரையில் படம் ஆரம்பமாயிற்று. செங்கோடன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து பார்க்கையில் திரையில் வந்த ஒவ்வொரு உருவமும் செங்குத்தாக வளர்ந்த பூதாகார வடிவமாகத் தோன்றியது. பேசுவதற்கோ, பாடுவதற்கோ வாயைத் திறந்தபோது பூதம் வாயைப் பிளப்பதுபோலவே இருந்தது. ஆயினும் இதுதான் ஸினிமாவில் தமாஷ் என்று செங்கோடன் நினைத்துக் கொண்டான். மற்றவர்களைக் காட்டிலும் நாலு மடங்கு சிரித்தான்; எட்டு மடங்கு கையைக் கொட்டினான். ஸினிமாவில் வந்த உருவங்கள் சொல்லும் வார்த்தையை இவனும் திருப்பிச் சொல்லத் தொடங்கினான். பக்கத்திலிருந்தவர்கள் அவனை அடக்கப் பார்த்தார்கள். "இந்தக் குடிகாரனை வெளியில் பிடித்துத் தள்ளு!" என்றது ஒரு குரல். "அது யார்

பேசிக்கொண்டு வந்த செங்கோடன் இப்போது தான் பிசகு செய்துவிட்ட தாக உணர்ந்தான். ஸினிமா விஷய மாகச் செம்பாகூடத் தன்னை இடித் துக் காட்டியது நினைவுக்கு வந்தது. ஆகையால் முதல் தர அரசியல் வாதி யைப்போல் தன் கொள்கையை ஒரு நொடியில் மாற்றிக் கொண்டான்.

"எனக்குக் கூட ஸினிமா என்றால் ஆசைதான். இன்று இராத்திரி இந்த ஊர்க் கூடார ஸினிமாவுக்குப் போகப் போகிறேன்" என்றான்.

"அப்படியா? இந்த முக்கியமான செய்தியைப் பேப்பருக்கு அனுப்பிப் போடச் சொல்ல வேண்டியதுதான்!" என்றாள் குமாரி பங்கஜா.

"பேப்பரிலே போட வேண்டிய தில்லை. உனக்குத் தெரிந்தாலே போதும்!" என்றான் செங்கோடன்.

"எனக்கு ஏன் தெரிய வேணும்?"

"என்னை அங்கே பார்க்கலாம் என் பதற்காகச் சொன்னேன். நீயும் இன்றைக்கு இராத்திரி ஸினிமாவுக்கு வருவாயல்லவா?"

"நான் வராமல் ஸினிமா நடக்குமா? கட்டாயம் வருவேன்."

"அப்படியானால் அங்கே உன்னை அவசியம் பார்க்கிறேன்."

"டிக்கட்டுக்குப் பணம்?"

"அதைப்பற்றிக் கவலைப்படாதே! டிக்கட் நான் வாங்கி விடுகிறேன். இரண்டே காலணவுக்குப் பஞ்சம் வந்து விடவில்லை!"

குமாரி பங்கஜா வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியாதவளாய் வேறு பக்கம் பார்த்து வாயை மூடிக் கொண்டு சிரித்தாள்.

இதற்குள் அங்கே ஊர்ப் பிள்ளைகள் ஏழெட்டுப் பேர் கூடி விட்டார்கள்.

அதைப் பார்த்த பங்கஜா இனி அங்கே நின்று அந்தப் பட்டிக் காட்டானோடு விளையாட்டுப் பேச்சுப் பேசக் கூடாதென்று மேடையிலிருந்து கீழிறங்கி நடக்கத் தொடங்கினாள்.

அவளோடு தானும் போவோமா என்று செங்கோடன் ஒரு நிமிஷம் யோசித்தான். வீட்டுக்குத் திரும்பிப் போய் ஸினிமாவுக்குப் பணம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை உத்தேசித்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

குமாரி பங்கஜா ஐம்பது அடி தூரம் போன பிறகு, "ஸினிமாக் கூடாரத்திலே அவசியம் சந்திக் கிறேன்" என்று ஒரு மைல் தூரம் கேட்கும்படி இரைந்து கூவினான்.

பங்கஜா திரும்பிப் பார்த்துப் புன் னகை செய்தாள்.

அந்தப் புன்னகையில் செங்கோட னுடைய உள்ளம் சொக்கித் தன்னை மறந்து லயித்தது.

அந்த நிலையில் அவன் சில்லறைக் கடைக்குச் சென்றான்.

"என்னப்பா, செங்கோடா! அந்த அம்மாவுடன் நெடுநேரம் பேசிக் கொண்டு நின்றாயே? என்ன பேசி னாய்?" என்றான் கடை முதலாளி.

"என்னத்தைப் பேசுகிறது? வெறு மனே க்ஷேம சமாசாரம்தான் பேசிக் கொண்டிருந்தோம்."

"அந்த அம்மாளை முன்னாலேயே உனக்குத் தெரியுமா, என்ன?"

"நல்ல கேள்வி! ரொம்ப நாளாய்ப் பழக்கமாயிற்றே!"

கடைக்குச் சாமான் வாங்க வந்த இன்னொரு மனிதரிடம் கடை முத லாளி, "கேட்டீர்களா, முதலியார்! நம்ம ஊர்ப் பஞ்சாயத்து மானேஜர் புதிதாக வந்திருக்கிறார் அல்லவா? அவ ருடைய தங்கை,—ஒரு படித்த அம் மாள்,—வந்திருக்கிறாள் அல்லவா? அந்த அம்மாளுக்கும் நம்ம செங்கோடனுக் கும் வெகு நாளாய்ச் சிநேகிதமாம்!" என்று சொன்னார்.

"ஆமாம்; வெகு நாளாகச் சிநே கிதம்!" என்று செங்கோடன் சொல்லி விட்டு ஹரிக்கன்லாந்தரை எடுத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். மேலே அவர்கள் இன்னும் ஏதாவது அந்த அம்மாளைப் பற்றிக் கேட் டால் தன்னுடைய குட்டு உடைந்து விடும் என்று கொஞ்சம் அவனுக்குப் பயம் இருந்தது.

5

அன்றைக்குச் செங்கோடன் தரை யில் நடக்கவில்லை. வானத்தில் பறந்து கொண்டிருந்தான்; கடலில் அலை களுக்கு மத்தியில் மிதந்து கொண்

ஆனால் அந்த அர்த்தம் அப் பெண்ணின் மனதில் பட்டதாக அவள் காட்டிக் கொள்ளவில்லை.

"ரொம்ப சரி; நீ சம்மதம் கொடுத்து கலியாணம் நிச்சயமாகிறபோது எனக்குக் கட்டாயம் கலியாணக் கடுதாசி போடு!" என்றான்.

"கடுதாசி கட்டாயம் போடுகிறேன். ஆனால் பெயரும், விலாசமும் தெரிந்தால்தானே கடுதாசி போடலாம்? உன் பெயர் என்ன?" என்று செங்கோடன் கேட்டான்.

"பெரிய வம்புக்காரனாயிருக்கிறாயே? என் பெயர் குமாரி பங்கஜா. உன் பெயர் என்ன?"

'குமாரி பங்கஜா' என்று அவள் சொன்னது 'ராஜகுமாரி பங்கஜா' என்று செங்கோடன் காதில் விழுந்தது 'அப்படித்தான் இருக்கும் என்று நினைத்தேன்; நினைத்தது சரியாய்ப் போயிற்று' என்று மனதில் எண்ணிக் கொண்டான்.

"உன் பெயர் என்ன? சொல்ல மாட்டாயா?" என்று மறுபடியும் குமாரி பங்கஜா கேட்டாள்.

"சொல்லுவதற்கு என்ன தடை? என் பெயர் ராஜா செங்கோடக் கவுண்டன்!" என்றான்.

குமாரி பங்கஜா குலுங்கச் சிரித்தாள். "வெறும் ராஜாவா? மகாராஜாவா!" என்று கேட்டாள்.

"என்னுடைய பத்து ஏக்கரா காட்டிற்கு நான்தான் ராஜா, மகாராஜா, ஏக சக்ராதிபதி,—எல்லாம்!" என்றான் செங்கோடன் பெருமிதத்துடன்.

"சரி! போய், உன்னுடைய ராஜ்யத்தைச் சரியாகப் பரிபாலனம் பண்ணு! இங்கே நடு ரோட்டில் நின்றால் என்ன பிரயோஜனம்?" என்றாள் குமாரி பங்கஜா.

"ஒரு கேள்விக்குப் பதில் சொன்னால் போய் விடுகிறேன்" என்றான் செங்கோடன்.

"அது என்ன கேள்வி?"

"சுவரிலே, மரத்திலே யெல்லாம் ஸினிமாப் படம் ஒட்டியிருக்கிறதே! அதிலே ஒரு அம்மா இருக்காங்களே? அது நீதானே?" என்று கேட்டான்.

"சேச்சே! அந்த மூவண்ணா தேவி நான் இல்லவே இல்லை. நான் ஸினிமாவிலே நடித்தால் அவளைக்காட்டிலும் நூறு பங்கு நன்றாக நடிப்பேன்" என்றாள் பங்கஜா.

"சேச்சே! போயும் போயும் அந்தக் கேவலமான தொழிலுக்கு நீ போவானேன்?" என்றான் செங்கோடன்.

"எதைக் கேவலமான தொழில் என்று சொல்கிறாய்?"

"ஸினிமாவில் நடிக்கிறதைத்தான் சொல்கிறேன். ஸினிமாவில் நடித்தால் மானம், மரியாதையை விட்டு......"

"இதற்குத்தான் பட்டிக்காடு என்று சொல்கிறது!" என்றாள் பங்கஜா.

இத்தனை நேரமும் அவளுடன் சரிக்குச் சரியாகச் சாமர்த்தியமாய்ப்





'பொய் மான் கரடு'க்குச் சமீபமாக வந்தான். அங்கே இருந்த அரசமரத்தின் அடியில் ஒரு காட்சியைக் கண்டான். அந்தக் காட்சி அவனை அப்படியே திகைத்து ஸ்தம்பித்து நிற்கும்படி செய்து விட்டது. அரசமரத்தின் கீழ்க் கிளை யொன்றில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். சுவர்களில் ஒட்டியிருந்த ஸினிமா விளம்பரங்களில் கண்ட கன்னிதான் அவள் என்று செங்கோடனுக்குத் தோன்றியது. உண்மையில் அப்படியல்ல. ஆனால் அந்த ஸினிமாக் கன்னியைப் போலவே இந்தப் பெண்ணும் குறுக்கு வகிடு எடுத்துத் தலைவாரிப் பின்னிச் சடையைத் தொங்கவிட்டுக் கொண்டும், மேல் தோள் வரையில் ஏறிச் சென்றிருந்த ரவிக்கை தரித்துக் கொண்டும், காதில் குண்டலங்கள் அணிந்து கொண்டும், நட்சத்திரப் பூப்போட்ட மெல்லிய சல்லாச் சேலை அணிந்து கொண்டும், நெற்றியில் சுருட்டை மயிர் ஊசலாட, எங்கேயோ யாரையோ பார்த்து, எதையோ நினைத்துக் கொண்டிருந்தவள் போல் நின்றபடியால், அவளை ஸினிமா விளம்பரத்தில் உள்ள பெண் என்று செங்கோடனுக்குத் தோன்றியது. பார்த்தது பார்த்தபடி பிரமித்துப் போய்ச் சிறிது நேரம் நின்றான்.

அந்தப் பெண் தன்னைப் பார்த்து ஒரு பட்டிக் காட்டான் விழித்துக் கொண்டு நிற்பதைக் கவனித்தாள்.

"என்னப்பா, பார்க்கிறாய்?" என்று அவள் கேட்டாள்.

செங்கோடனுடைய காதில் கிணு கிணுவென்று மணி ஒலித்தது. பூங்குயில்களின் கீதம் கேட்டது.

எங்கிருந்தோ ஒரு முரட்டுத் தைரியம் அவனுக்கு ஏற்பட்டது.

"வேறு என்னத்தைப் பார்க்கிறது? உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

அந்தப் பெண்ணுக்குப் பொங்கி வந்த கோபம் ஒரு கணத்தில் எப்படியோ மாறியது. அவள் முகம் மலர்ந்தது; பல் வரிசை தெரிந்தது.

அதைப் பார்த்த செங்கோடனும் முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு புன்னகை புரிந்தான்.

"என்னப்பா, சிரிக்கிறாய்!" என்று அவள் கேட்டாள்.

"பின்னே, அழச் சொல்லுகிறாயா!" என்றான் செங்கோடன்.

"பாவம்! அழ வேண்டாம்! உன் பெண்சாதி தேடிக் கொண்டு வந்து விடப் போகிறாள்!"

"எனக்குக் கலியாணம் இனிமேல் தான் ஆக வேண்டும். எத்தனையோ பேர் பெண் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் தான் இதுவரையில் சம்மதிக்கவில்லை!" என்று செங்கோடன் சொல்லி விட்டு அர்த்த புஷ்டி நிறைந்த பார்வையை அந்தப் பெண் மீது செலுத்தினான்.

கவுண்டா! காலையிலேயிருந்து நீ பசியோடுதானே வேலை செய்து கொண்டிருக்தாய்! இந்தா! இந்தக் கஞ்சியில் கொஞ்சம் குடி!" என்று பரிவுடன் சொன்னாள்.

"உங்கள் வீட்டுக் கஞ்சி எனக்கு வேண்டாம். உன் அப்பன் உன்னைச் சண்டை பிடிப்பான்."

"அதெல்லாம் யாருக்கும் தெரியாது. அப்படித் தெரிந்து கேட்டால் கஞ்சி சாய்ந்து கொட்டி விட்டது என்று சொல்லி விடுகிறேன்."

"இதோ, பார்! செம்பா! இப்போ தான் எனக்கும் நினைவு வந்தது. நம்ம தென்னையிலிருந்து ஒரு இளநீர் பிடுங்கிக் கொண்டு வந்து உனக்கு வெட்டித் தருகிறேன்!" என்று செங்கோடன் கையில் அரிவாளுடன் எழுந்தான்.

"நன்றாயிருக்கிறது! யாராவது இளநீரைப் பிடுங்குவார்களா? இளநீர் முற்றித் தேங்காய் ஆனால், சந்தையில் ஆறு அணாவுக்கு விலைப்போகுமே?" என்றாள் செம்பா.

"ஆறு அணாவைத் தள்ளு குப்பையில்! நமக்காகப் பணமா? பணத்துக்காக நாமா?" என்று சொல்லிக் கொண்டு செங்கோடன் சென்று கை யெட்டுகிற தூரத்தில் காய்த்துத் தொங்கிய இளந் தென்னையிலிருந்து ஒரு இளநீர் அறுத்துக் கொண்டுவந்து தன் காதலிக்குக் கொடுத்தான். அதை அவன் தனக்காகச் செய்த ஒரு மகத்தான தியாகம் என்றே செம்பவளம் கருதி இறுமாந்து மகிழ்ந்தாள்.

4

அன்று சாயங்காலம் செங்கோடக் கவுண்டன் சின்னம நாயக்கன் பட்டிக்குப் போனான். கொல்லனிடம் செப்பனிடக் கொடுத்திருந்த மண்வெட்டியை வாங்கிக் கொண்டு, ஹரிக்கன் லாந்தரில் மண்ணெண்ணெய் வாங்கிப் போட்டுக் கொண்டு, இன்னும் சில சில்லறைச் சாமான்களும் வாங்கி வருவதற்காகப் போனான். ஹரிக்கன் லாந்தரைச் சில்லறைச் சாமான் கடையில் வைத்து விட்டுக் கொல்லன் உலைக்குப் போய்ச் செப்பனிட்ட மண்வெட்டியை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான்.

அன்றைக்கெல்லாம் அவன் மனமாகிய வண்டு செம்பவளவல்லியின் முக மண்டலத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒரு சமயம் கண்ணீர் ததும்பிச் சோக மயமா யிருந்த அந்தப் பெண்ணின் முகமும், மற்றொரு சமயம் மலர்ந்த புன்னகையுடன் குதூகலம் ததும்பிக் கொண்டிருந்த அவள் முகமும் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தது. ஊரார் பேச்சைப் பொருட்படுத்தாதவன்போல் அவளிடம் செங்கோடன் வீம்பாகப் பேசியிருந்த போதிலும் அவன் மன நிலையில் சிறிது மாறுதல் ஏற்பட்டுத்தானிருந்தது. செம்பவளத்துக்கும் தனக்கும் திருமணத்தைக் கூடிய சீக்கிரத்தில் முடித்துவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

இதே ஞாபகமாகச் சின்னம நாயக்கன் பட்டி வந்தவனுடைய கவனத்தை அந்த ஊர் சாவடிச் சுவர்களிலும் சாலை மரங்களிலும் ஒட்டியிருந்த சினிமா விளம்பரங்கள் ஓரளவு கவர்ந்தன. அந்த வர்ண விளம்பரங்களில் ஒரு பெண் பிள்ளையின் முகம் முக்கியமாகக் காட்சி அளித்தது. அந்த முகம் அழகாயும் வசீகரமாயும் இருந்தது என்பதைச் சொல்லத்தான் வேண்டும். அப்படி வசீகரமாவதற்காக அந்த சினிமாக் கன்னிகை முகத்தில் எத்தனை பூச்சுப் பூசிக் கொண்டிருக்கிறாள், கண்ணிமைகளையும் புருவங்களையும் என்ன பாடு படுத்திக் கொண்டிருக்கிறாள், உதடுகளில் எவ்வளவு வர்ணக் குழம்பைத் தடவிக் கொண்டிருக்கிறாள் என்பதெல்லாம் செங்கோடனுக்கு எப்படித் தெரியும்? செம்பவளம் பார்த்ததாகச் சொன்னாளே, அந்த சினிமாவில் வரும் மோகனாங்கி என்னும் பெண் இவள்தானா? 'மோகனாங்கி' என்ற பெயர் இவளுக்குப் பொருத்தமாகத்தா னிருக்கிறது! நாம்கூட இந்த சினிமாவை ஒரு தடவை பார்த்து விட வேண்டியதுதான்! இரண்டே காலணாக் காசு போனால் போகட்டும்! இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்தக் கூடார சினிமா இந்த ஊரில் நடக்குமோ, என்னமோ? விசாரித்துத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது...

இப்படி நினைத்துக் கொண்டே சில்லறைக் கடையை நோக்கிச் சாலையோடு போய்க் கொண்டிருந்த செங்கோடன்

தைக்கூடக் கொஞ்சம் கரைத்து விட்டது. அவளுடைய கண்ணீரைத் துடைக்கலாமா, வேண்டாமா என்று தயங்கித் தயங்கிக் கையை நீட்டினான்.

செம்பாவின் விம்மல் சிறிது குறைந்தது. "கவுண்டா! நாங்கள் பார்த்த ஸினிமாவில் மோகனாங்கி கண்ணீர் விட்டபோது மதன சுந்தரன் என்ன செய்தான் தெரியுமா?'' என்று சொல்லிக்கொண்டே செம்பா செங்கோடனுடைய கைகளைப் பிடித்து இழுத்து, ஸினிமாவில் கதாநாயகன் செய்தது போல் செய்து காட்டினாள்.

"ச்சீ! அவர்களுக்கெல்லாம் வெட்கம், மானம் ஒன்று மிராதுபோலிருக்கிறது. மிருக ஜென்மங்கள் போலிருக்கிறது. ஆயிரம் பேர் பார்த்துக் கொண்டிருக்கையில் இப்படியா செய்வார்கள்?'' என்றான் செங்கோடன்.

"நிஜமாக இல்லையே? திரையிலே தானே?'' என்றாள் செம்பா.

"திரையிலே என்றாலும் ஆயிரம் பேர் பார்க்கிறார்களோ, இல்லையோ!''

"ஆயிரம் பேர் என்ன? லட்சம் பேர் பார்க்கிறார்கள்! உன்னைத் தவிர எல்லாரும் ஸினிமா பார்க்கிறார்கள். அது கிடக்கட்டும், தள்ளு!......... கவுண்டா! ஊரார் பேசுகிறதெல்லாம் பொய்தானே? உன்பேரிலே பொறாமையினால்தானே அவர்கள் அப்படியெல்லாம் பேசுகிறார்கள்?''

"எதைப் பற்றிச் சொல்கிறாய்?''

"பெண்டாட்டிக்குச் சோறுபோடப் பயந்து கொண்டு நீ கலியாணம் பண்ணிக் கொள்ளாமலிருக்கிறாய் என்கிறார்களே, அதுதான்!......''

"முட்டாப் பயல்களுக்குப் பிறந்த பயல்கள்தான் அப்படிச் சொல்வார்கள்! நான் உன்னைக் கட்டிக் கொண்டால், அதனால் எனக்கு லாபமா, நஷ்டமா? இன்றைக்கெல்லாம் உன் சாப்பாட்டுக்காக மாதம் ஏழு, எட்டுரூபாய் ஆகலாம். நீ செய்கிற வேலையினால் எனக்கு இருபது ரூபாய் மிச்சமாகுமே? இந்தக் கணக்குத் தெரியாத சோம்பேறிப் பயல்கள் ஏதாவது உளறினால் அதை நீ ஏன் காது கொடுத்துக் கேட்க வேண்டும்? அதற்காக ஏன் வருத்தப்பட வேண்டும்?'' என்று செங்கோடன் ஆத்திரமாய்ப் பேசினான்.

"எங்கே அந்தக் கணக்கு உனக்கும் தெரியவில்லையோ என்று பார்த்தேன். அத்தனை பெரிய குடும்பத்தில் இரவும் பகலும் உழைத்துக் கொட்டிக் கொண்டிருக்கிறேன். எனக்கு என்று சொந்தக் குடித்தனம் ஏற்பட்டு விட்டால் இன்னும் எப்படி உழைப்பேன்? என்னால் உனக்கு ஒரு நஷ்டமும் இராது. ஒரு எருமை வாங்கிக் கட்டிக் கொண்டால், அதிலே மட்டும் மாதம் இருபது ரூபாய்க்கு மேலே செட்டுப் பிடிக்கலாம். என்னால் உனக்கு லாபமே தவிர நஷ்டம் ஒன்றும் ஏற்படாது'' என்றாள் செம்பவளவல்லி.

"அதெல்லாம் நான் யோசனை செய்துதான் வைத்திருக்கிறேன், செம்பா! வேறொரு காரியத்தை உத்தேசித்துக் கலியாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறேன். என் காட்டைச் சேர்ந்தாற்போல் சேலம் முதலியாருக்கு ஒரு ஏக்கரா நிலம் இருக்கிறது. அது எனக்கு ரொம்ப இடைஞ்ச மடைஞ்சலாயிருக்கிறது. கேணியிலிருந்து என் நிலத்துக்குத் தண்ணீர் இறைக்கச் சுற்றி வளைத்துக் கொண்டு வாய்க்கால் போகிறது. தண்ணீர் ரொம்ப வீணாகிறது. அந்த ஒரு ஏக்கரா நிலத்தை வாங்கி விட்டேனானால், அப்புறம் கவலையில்லை. பிறகு நம்முடைய கலியாணத்துக்குத் தேதி வைக்க வேண்டியதுதான்.''

"அதற்காக ரொம்ப நாள் தள்ளிப் போடுவது நல்லதல்ல. நீ கலியாணப் பேச்சை எடுக்க மாட்டாய் என்று சொல்லி, அப்பா எனக்கு வேறு இடம் பார்க்க ஆரம்பித்து விட்டார்......''

"நான் ஒருவன் இருக்கிறபோது, வேறு எந்தப் பயல் மகன் வந்து உன்னைக் கட்டிக் கொண்டு போய் விடுவான்? யாராவது உன் கிட்ட வந்தால் அரிவாளால் ஒரே வெட்டாய் வெட்டிப் போட்டுவிட மாட்டேனா? அந்த எண்ணத்தை மட்டும் உன் அப்பன் அடியோடு விட்டு விடட்டும்!'' என்றான் செங்கோடக் கவுண்டன்.

செம்பவளவல்லியின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. "உன்னுடைய மனது எனக்குத் தெரிந்திருக்கிறபடியால்தான் நானும் பொறுமையாயிருக்கிறேன். வேறு மாப்பிள்ளை தேடும் பேச்சே உதவாது என்று வீட்டில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

பொய்மான் கரடு



3

செங்கோடக் கவுண்டன் ஸினிமாவைப் பற்றித் தன் கொள்கையை வெளியிட்டதும் செம்பவளவல்லியின் முகம் சுருங்கிற்று. சற்றுத் தலையைக் குனிந்து கொண்டு சும்மா இருந்தாள்.

பிறகு, "கவுண்டா! ஊரிலே எல்லாரும் உன்னைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஊரிலே இருக்கிறவர்கள் என்ன பேசிக் கொண்டால் எனக்கு என்ன? நான் எதற்காக அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ள வேண்டும்?" என்றான் செங்கோடன்.

"அப்படியில்லை, கவுண்டா! நாலு பேர் பேசுவது உனக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்."

"அப்படியானால் நீதான் சொல்லேன்! நாலு பேர் பேசுவது உனக்குத் தெரியும் போலிருக்கிறதே!"

"தெரியாமல் என்ன? ஊரெல்லாம் பேசிக்கொள்வது என் காதில் விழாமல் இருக்குமா? நீ இங்கே கேணிக் கரையில் வந்து தனியாகக் குடிசை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பதனால் உன் காதில் விழவில்லை."

"என்னதான் ஊரில்பேசிக் கொள்ளுகிறார்கள், சொல்லி விடேன்! இவ்வளவு தூரம் ஏன் சுற்றி வளைத்து மூக்கைத் தொடுகிறாய்?"

"எனக்குச் சொல்லவே தயக்கமாயிருக்கிறது. வாய் கூசுகிறது. நீ கருமியாம்! பணத்தாசை பிடித்தவனாம்! விநாயகருக்குக் கலியாணம் ஆகிற போதுதான் உனக்கும் கலியாணமாம். யாராவது ஒருத்தியைக் கட்டிக்கொண்டால் அவளுக்குச் சோறு போட்டுத் தொலைக்க வேண்டுமே என்பதற்காக நீ கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் தானே பொங்கித் தின்று கொண்டிருக்கிறாயாம்! நீ பணத்தைச் சேர்த்துப் புதைத்து வைக்கிறாயாம். புதையலைப் பூதம் காக்குமாம். ஒருநாளைக்கு அந்தப் பூதம் உன்னையும் அடித்துக் கொன்று விடுமாம். நீ இரத்தம் கக்கிச் சாவாயாம்! போதுமா? இப்படியெல்லாம் கண்டபடி ஜனங்கள் பேசுகிறார்கள்! எனக்குக் கேட்கச் சகிக்கவில்லை!" என்று சொல்லி விட்டுச் செம்பவளவல்லி விம்மத் தொடங்கினாள். அவளுடைய கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் வடிந்தது.

"சேச்சே! ஊரிலே எந்த நாயாவது ஏதாவது குரைத்தால், அதற்காக நீ ஏன் அழ வேண்டும்? அழாதே, செம்பா!" என்றான் செங்கோடன். செம்பாவின் கண்ணீர் செங்கோடனுடைய பணத்தாசை பிடித்த மன

காலமாக அந்த நாட்டில் அகதியாக இருந்த மாக்பிரயன் என்ற தென்னாப்பிரிக்க ஐரோப்பியர் பிரிட்டிஷ் சர்க்காரைக் கோரினார். பிரிட்டிஷ் சர்க்கார் மாக்பிரயனை ஒரு பைத்தியம் என்று தீர்மானித்து சிங்கப்பூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்தார்கள். —செய்தி.

அதைக் காட்டிலும் பெரிய பைத்தியக்கார ஆஸ்பத்திரியான தென்னாப்பிரிக்காவுக்கே அவரை அனுப்பிவிடலாமே!

★

"பல் டாக்டரின் முன்னால் முகமலர்ச்சியுடன் இருக்கக் கூடியவர்கள் நிச்சயமாகப் பயமில்லாதவர்களாக இருக்க வேண்டும்"

—ஒரு சுகாதாரக் கட்டுரை

அல்லது, பல் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்!

★

"ஹோட்டலில் தங்கியிருந்த ஒருவரின் பணப்பையைக் காணோம். அந்த ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு சர்வரையும் காணோம்." —செய்தி.

சர்வரையும் பணப் பையையும் சேர்த்து யாரோ களவாடியிருக்க வேண்டும்!

ஜலவாயுக் குண்டு தயாரிப்பைத் துரிதப்படுத்தும் பொருட்டு 30 கோடி டாலர் அனுமதிக்கும்படி பிரஸிடெண்ட் ட்ரூமன் அமெரிக்க காங்கிரஸிடம் கோருவார்.

—வாஷிங்டன் செய்தி.

ஜலவாயுக் குண்டு தயாரிக்கும் விஷயத்தில் ஜலப் பிரயமாக டாலர்கள் செலவாக வேண்டியது நியாயந்தானே!

★

"பாமர மனிதன் நிலைமை உயர்ந்தால் தான் காங்கிரஸ் பரிசுத்தமாகி விட்டது என்று சொல்ல முடியும்."

—ஒரு காங்கிரஸ் தலைவர்

காங்கிரஸ் பரிசுத்தமா யிருந்தால்தான் அது பாமர மனிதனது நிலைமையை உயர்த்த முடியும் என்றும் சொல்லலாம்.

★

"ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கதர் துணிகளைத் தைக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்." —உ. பி. சர்க்கார் அறிக்கை

"சரிதான்! ஆனால் கதர் துணிகளுக்கு எங்கே போவது!" என்று ஓர் ஆரம்ப ஆசிரியர் தெரிந்து கொள்ள விரும்புகிறார்.

எதிர்க் கட்சிகள்!

எல்லா எதிர்க் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அடங்கிய மகாநாட்டைக் கூட்ட ஸ்ரீ ஜெயப் பிரகாச நாராயண் தீர்மானித்திருக்கிறார். மேற்படி எதிர்க் கட்சிகள் பிறகு ஸ்ரீ ஜெயப் பிரகாசருக்கே எதிர்க் கட்சிகளாக வக்கரித்துக் கொள்ளாமல் இருக்குமா?



அக்கப் போர்

ஜூலை முதல் வாரம் மரம் நாட்டு விழாவின்போது, காய்கறிகள், பழங்கள், பருப்புகள் முதலியவற்றை மாத்திரம் சாப்பிட்டு மரங்கள்மீது தமக்குள்ள பக்தியைக் காட்ட வேண்டுமென்று உணவு மந்திரி கேட்டுக் கொண்டுள்ளார்.

"நல்லவேளை. மரங்கள் மீதுள்ள பக்தியைக் காட்டுவதற்காக மரத்தையே சாப்பிடச் சொல்லவில்லையே!" என்று சந்தோஷப்படுகிறார் ஒரு அரிசிப்பிரியர்.

★

பம்பாய் நகரில் ஓர் இடத்தில் தன் காதலி இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு வாலிபன் ஒரு நூதன வழியைக் கண்டு பிடித்தான். தான் ஒரு ரேஷன் இன்ஸ்பெக்டர் என்று சொல்லிக்கொண்டு, வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் யார் யார் இருக்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டு வந்தான். துரதிருஷ்டவசமாக அவன் போலி ரேஷன் அதிகாரி என்று கண்டு பிடிக்கப்பட்டு ஆள் மாறாட்டம் செய்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டான்.

ஐயோ பாவம், இந்த வாலிபன் தன் காதல் ஆர்வத்தைக் கொஞ்சம் ரேஷன் செய்து கொண்டிருந்தால் இந்த கதி ஏற்பட்டிராதல்லவா?

★

ரூத் என்ற ஐரோப்பிய மாதை மணந்த காமா என்ற ஆப்பிரிக்க அரசருக்கும் அவருடன் சண்டை போட்டுக் கொண்டிருந்த அவரது மாமாவுக்கும் ஒரு விஷயத்தில் சமரசம் ஏற்பட்டு விட்டது. 10,000 மாடுகள் யார் பொறுப்பில் இருப்பது என்னும் விஷயத்தில் இருவரும் சமரசம் செய்துகொண்டு விட்டனர்.

இந்த மாடுகள் இருவரில் யார் பொறுப்பில் இருந்தாலும், அவற்றின் பாலை பிரிட்டிஷ்காரர்கள் கறந்து கொள்ளாமல் இருந்தால் சரிதான்!

★

ரயில்வேக்களில் முன்னம் அமுலில் இருந்த "இஷ்டம்போல் பிரயாணம் செய்யுங்கள்!" முறையைத் தற்போது மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரும் உத்தேசமில்லை.

—கனம் கோபாலசாமி அய்யங்கார்.

"நாங்கள் தான் இஷ்டம்போல் பிரயாணம் செய்கிறோமே! எதற்காக நீங்கள் வேறு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்?" என்று கேட்கிறார் ஒரு டிக்கட் வாங்காத பிரயாணி.

இந்திய சினிமாப்பட முதலாளிகள் சங்கத் தலைவரான ஸ்ரீ சனிலால் சினிமாத் தொழிலுக்கே இப்பொழுது பெரிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த நெருக்கடிக்கு எட்டுக் காரணம் இருப்பதாகவும் கூறினார். முதலாவது காரணம், சினிமாத் தொழில் பொது மக்களின் நன்மதிப்புக்கு இன்னும் பாத்திரமாகவில்லை என்பது. இரண்டாவது, சினிமாத் தொழில் சம்பந்தமாக சர்க்காருக்கு சரியான வரி விதிப்புக் கொள்கை இல்லை என்பது. பிறகு, சினிமா முதலாளிகள் கடன் வாங்கப் பணம் கிடைப்பதில்லை. படம் பிடிக்க நடிகர்கள் இல்லை, படங்களைக் காட்டத் தியேட்டர்கள் இல்லை, விநியோகம் செய்ய வசதிகள் இல்லை, படம் தயாரிக்கக் கச்சா பிலிம் இல்லை, சென்ஸார் முறை சரியாக இல்லை—இப்படியாக ஸ்ரீ சனிலால் அடுக்கிக் கொண்டே போனார்.

"ஸ்ரீ சனிலாலின் முறையீடு உங்கள் காதில் விழுந்ததா?" என்று கனம் திவாகர் அவர்களைக் கேட்டால் அவர் "இல்லவே இல்லை!" என்று பதில் அளிப்பார் என்பதில் சந்தேகம் இல்லவே இல்லை.

★

பருத்தியின் உயர்ந்த பட்ச விலையை அதிகரிக்க முடிவு செய்திருப்பதைப் பாராட்டி, கிழக்கிந்திய பருத்தி சங்கத் தலைவரான ஸர் புருஷோத்தம்தாஸ் தாகூர்தாஸ் இந்திய சர்க்கார் தொழில் சப்ளை மந்திரிக்குத் தந்தியடித்திருக்கிறார். —பம்பாய்ச் செய்தி.

பருத்தி சங்கத்தலைவர் இவ்வளவு களிப்புற்றிருப்பதால், இனி பருத்தி புடவையாகவே காய்த்துவிடும் என்று எதிர்பார்க்கலாம்.


★

"மந்திரி நித்தய்யாவுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தபோது பஸ் முதலாளிகள் சங்கம் வழங்கிய ஒரு பெரிய வெள்ளிப் பேழையை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டாராம்." —பெங்களூர்ச் செய்தி.

"மந்திரிப் பதவிக்கு லாயக்கில்லாதவர்கள் எல்லாம் மந்திரியாகி விடுவதில் வரும் கோளாறு இது!" என்கிறார் ஒரு உபசாரப் பிரியர்.

★

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள புருனி என்ற தேசத்துக்கு அரசியாகப் பதினாறு வயதுள்ள ஸலான் ராஜகுமாரியை நியமிக்க வேண்டுமென்றும், தன்னை அவள் காதலனாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் வெகு



இந்தக் கட்டிடம் வாஷிங்டனில் உள்ள அமெரிக்க யுத்த மந்திரி லூயி ஜான்சனின் தலைமைக் காரியாலயம். (சில தினங்களுக்கு முன் ஜப்பானில் மெக் ஆர்தர், லூயி ஜான்சன், ஜெனரல் பிராட்லி முதலிய உயர்தர இராணுவத் தலைவர்களின் மகாநாடு நடந்தது ஞாபகம் இருக்கலாம்.) அமெரிக்கக் கடற்படை, தரைப் படை, ஆகாயப் படைகளைச் சேர்ந்த எல்லா முக்கிய அதிகாரிகளும் சிப்பந்திகளும் இதில் வேலை செய்கிறார்கள். இந்தக் கட்டிடம் முழுவதும் எப்போதும் குளிர்ச்சியாக இருப்பதற்காக யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காரியாலயத்தின் சுற்றளவு ஒரு மைல் இருக்கிறது. பதினேழரை மைல் தூரத்துக்குத் தாழ்வாரங்கள் இருக்கின்றன. இதன் மொத்த விஸ்தீரணம் முப்பத்தி நான்கு ஏக்கர்கள் ஆகும். நூற்றைம்பது இடங்களில் மாடிப்படிகள் இருக்கின்றன. இதில் வேலை செய்யும் இருபத்தையாயிரம் சிப்பந்திகளுக்கு வசதியாக இந்தக் கட்டிடத்தில் கடைகள், தபால் ஆபீஸ், சலூன், லாண்டரி, ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகள், வாடகை மோட்டார்கள் எல்லாம் இருக்கின்றன. கட்டிடத்தைச் சுற்றி ஏழாயிரம் மோட்டார்கள் நிற்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் செய்திகள் அனுப்பவும் எல்லாப் பாகங்களிலிருந்தும் செய்திகள் கிடைக்கவும் இந்தக் கட்டிடத்தில் வசதிகள் இருக்கின்றன.

செய்து காலம் கடத்தும் ஐக்கிய நாடுகள் சபைகூட கொரியாவில் போர் ஆரம்பமான சில மணி நேரத்தில் கூடி வடக்கு கொரியாவின் ஆக்கிரமிப்பைப் பலமாகக் கண்டித்திருக்கிறது.

அந்தச் சபையின் ஜரூர் நடவடிக்கைக்கு வல்லமை பொருந்திய அமெரிக்காவின் செல்வாக்கே காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஐ. நா. சபையில் இன்னும் சியாங் சின் சர்க்காரின் பிரதிநிதி இருந்து வருவதைக் கண்டித்து ருஷ்யா மேற்படி சபைக் கூட்டங்களைப் பகிஷ்காரம் செய்து வருகிறது அல்லவா? ருஷ்யப் பிரதிநிதி இராத கூட்டங்களில் நிறைவேறும் தீர்மானங்கள் சட்ட விரோதமானவை என்றும் அவை தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் ருஷ்ய சர்க்கார் கூறி வருகிறார்கள்.

எனவே, தற்போது ஐ. நா. சபையில் நிறைவேறிய தீர்மானம் ருஷ்யாவைக் கட்டுப்படுத்துமா? அந்தத் தீர்மானத்துக்கு ருஷ்யா இணங்கும்படி செய்யும் சக்தி மேற்படி சபைக்கு உண்டா?

அது எப்படியாயினும் கொரியாவில் ஆரம்பமாகியுள்ள ஒத்திக்கைகள், ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் நேரடியான யுத்தமாக மூண்டு உலக மகாப் பிரளயத்தில் வந்து முடியாமல் இருக்க வேண்டுமே என்று உலக மக்கள் யாவரும் ஆண்டவனைப் பிரார்த்தித்து வருவார்கள்.

சினர்கள் பல வருஷங்களுக்கு முன்பே சமரசமும் சமாதானமும் செய்து கொண்டிருக்க மாட்டார்களா?

ஜெர்மனியில் இன்று நாம் காண்பது என்ன? சென்ற மகா யுத்தத்தில் வெற்றி பெற்ற அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா இந்த நாலு வல்லரசுகளும் அந்த நாட்டை நாலு பிரிவுகளாகப் பிரித்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஜெர்மானியர்கள் அந்தந்த வல்லரசின் கைப்பொம்மைகளாக ஆட்டி வைக்கப் பட்டு வருகிறார்கள்.

அதன் காரணமாகச் சில மாதங்களுக்கு முன் அங்கு வல்லரசுகள் மோதிக்கொண்டன. யுத்தம் ஏற்படலாம் என்ற பீதியும் உண்டாயிற்று. அந்த பீதி இன்னும்கூட முற்றிலும் தீர்ந்தபாடில்லை.

வல்லரசுகளின் பொம்மலாட்டம் காரணமாக இந்தோ சீன மக்கள் பல மாதங்களாக ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு நிற்கிறார்கள்.

இப்போது கொரியாவில் பீறிட்டுள்ள யுத்தத்துக்கும் வல்லரசுகளின் பாதகமான பாவைக் கூத்தே காரணம்!

• • •

கொரியா முப்பத்தைந்து வருஷங்கள் வரையில் ஜப்பானின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு அல்லலுற்று வந்தது. இரண்டாவது மகா யுத்தத்தில் ஜப்பான் தோல்வி யடைந்ததால், கொரியா விடுதலை பெற்று ஜனநாயகமாகத் திகழ்ந்திருக்க வேண்டியது தான் நியாயம்.

ஆனால் ஜனநாயகத்தை உலகத்திலே நிலைநிறுத்துவதற்காகப் போராடிய வல்லரசுகள் கொரியா சுதந்திரம் பெறுவதற்கு இடம் கொடுக்கவில்லை!

அந்த நாட்டை அவைகள் இரண்டாகப் பிளந்தன. வடக்கு கொரியா ருஷ்யாவின் ஆதிக்கத்திலும், தெற்கு கொரியா அமெரிக்காவின் ஆதிக்கத்திலும் இருப்பது என்று முடிவாயிற்று.

ஜெர்மனியில் வல்லரசுகளின் ஆதிக்கம் எவ்வாறு தீராப் பகைக்கு விதையாக அமைந்ததோ, அது போலவே கொரியாவிலும் அவைகளின் சட்டாம்பிள்ளைத்தனம் அடங்காத புகைச்சலுக்குக் காரணமாக அமைந்தது.

வடக்கு கொரியாவில் வைக்கப்பட்டிருந்த ருஷ்யத் துருப்புகளை ருஷ்ய சர்க்கார் வாபஸ் செய்து அங்கு 'குடியரசை' அமைத்தார்கள்.

அந்தக் கபட நாடகத்தில் அமெரிக்கா பின்தங்கிவிடுமா?

அமெரிக்க சர்க்காரும் அங்கிருந்த தங்கள் துருப்புகளைத் திருப்பி அழைத்துக்கொண்டு தெற்கு கொரியாவில் 'குடியரசை' ஸ்தாபித்தார்கள்.


குடியரசு என்று பெயர் சூட்டி விட்டால் கொரியா உண்மையிலேயே குடியரசாகி விட்டது என்று உலகம் நம்பிவிடும் என்பது அந்த வல்லரசுகளின் எண்ணம்!

ஒரு நாட்டில் இரண்டு குடியரசுகள், அதிலும் ஒன்றுக் கொன்று நேர் விரோதமான இரண்டு குடியரசுகள் இருப்பது எவ்வாறு சாத்தியம் என்ற சாதாரண விஷயத்தைக் கூட மேற்படி வல்லரசுகள் கவனிக்கவில்லை!

ருஷ்யா சிருஷ்டித்த பொம்மைக் குடியரசுக்கும் அமெரிக்கா சிருஷ்டித்த பொம்மைக் குடியரசுக்கும் எல்லைத் தகராறுகள் இடைவிடாத தொல்லையாக இருந்து வந்தது.

அது இறுதியில் பயங்கரமான யுத்தத்தில் வந்து முடிந்திருக்கிறது. வடக்கு கொரியாவுக்கு ருஷ்யாவும் தெற்கு கொரியாவுக்கு அமெரிக்காவும் வெடிகுண்டு விமானங்கள், டாங்கிகள் உள்பட எல்லாவிதமான போர்த் தளவாடங்களையும் அனுப்பி வருகின்றன.

எந்தத் தெளிவான பிரச்னையையும் மாதக் கணக்கில் துருவி ஆராய்ச்சி



ஒத்திக்கை ஆரம்பம்!

சக்கரம் சுழன்று சுழன்று செல்வது போலச் சரித்திர சம்பவங்களும் சுழன்று சுழன்று வருகின்றன என்று அடிக்கடி அரசியல் நிபுணர்கள் கூறுவதைக் கேட்கிறோம்.

இடம் மாறும்; காலம் மாறும்; ஆனால் ஒரு தேசத்தையோ, உலகத்தையோ, மனித வர்க்கத்தையோ ஆட்டி வைக்கும் காரண காரியங்கள், எந்த இடத்திலும் எக்காலத்திலும் சற்றேறக்குறைய ஒரே விதமாகவே இருக்கின்றன என்பதையே அவர்கள் அவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

1914-ம் வருஷம் ஜூன் மாதம் கடைசி வாரத்தில் நிகழ்ந்த ஒரு சிறு சம்பவம் முதலாவது உலக மகாயுத்தத்துக்குக் காரணம் ஆயிற்று.

அப்போது ஆஸ்திரியா சிம்மாசனத்துக்கு உரியவரான ஆர்ச் டியூக் தம்பதிகள் கொலையுண்டது ஒரு மகா யுத்தமே பிறீட்டு எழும்படி செய்து விட்டது. ஆஸ்திரியாவுக்குப் பரிந்து கொண்டு ஜெர்மனி போரில் இறங்கியது. பெல்ஜியத்துக்குப் பரிந்து கொண்டு பிரிட்டன் போரில் குதித்தது. மற்ற வல்லரசுகளும் அந்தப் போரில் மும்முரமாகக் கலந்து கொண்டன.

ஏற்கனவே யுத்த சன்னத்தமாக இருந்த வல்லரசுகளுக்கு மேற்படி சம்பவம் தூண்டுகோலாக அமைந்தது.

அவ்வாறாக அந்த வருஷம் ஜூன் மாத இறுதியில் தெறித்த பொறியினால் பல இடங்கள் பற்றி எரிந்தன. பல நாடுகளின் விதி மாறியது.

அந்த யுத்தம் முடிவடைந்த பின், புதிதாகத் தயாரிக்கப்பட்ட நவீன ஆயுத வகைகளை வல்லரசுகள் சீனாவிலும் ஸ்பெயினிலும் ஒத்திக்கை செய்து பார்த்து இரண்டாவது மகா யுத்தத்தையும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் எதிர்பார்க்க ஆரம்பித்தன.

1950-ம் வருஷம் ஜூன் மாதம் கடைசி வாரத்தில் 1914-ல் நிகழ்ந்ததைக் காட்டிலும் கோரமான சம்பவம் நிகழ்ந்திருக்கிறது அதனால் ஒரே நாளில் எண்ணாயிரம் பேருக்குமேல் பலியாகியிருக்கின்றனர்.

வடக்கு கொரியாவுக்கும் தெற்கு கொரியாவுக்கும் ஆரம்பமாகியுள்ள யுத்தமே முதல் நாளில் அத்தனை பேர்களைப் பலி கொண்டிருக்கிறது.

எனவே மேற்படி சம்பவம் மற்றொரு மகா யுத்தத்துக்குக் காரணமாக அமையலாம். வல்லரசுகள் இப்போது புதிதாகத் தயாரித்துள்ள நாசகாரமான ஆயுதங்களைக் கொரியாவில் ஒத்திக்கை செய்து பார்த்து மூன்றாவது மகா யுத்தத்துக்கும் ஆயத்தமாகலாம்!

* * *

உலகத்திலே ஒரு நாட்டின்மீது மற்றொரு நாடு ஆதிக்கம் செலுத்தும் காலனி முறை அனுஷ்டானத்தில் இருந்து வரும் வரையில், அரசியல் துறையிலோ பொருளாதாரத் துறையிலோ உலக நாடுகளுக்குள் விரோதமும் நேர்மையற்ற போட்டா போட்டியும் இருந்து வரும் வரையில் போர் வெறியும் புகைச்சலும் அடங்காது, உலகத்தில் அமைதி ஏற்படாது என்று பண்டித ஜவாஹர்லால் நேரு அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்.

அந்தக் கருத்தை மற்ற உலக அரசியல் மேதாவிகளும் நீதி நெறியில் பற்றுதலுள்ள ராஜ தந்திரிகளும் பல சர்க்கார் தலைவர்களும் முற்றிலும் ஆதரிக்கிறார்கள்.

காலனி முறையைப் போல, ஆதிக்க வெறியைப் போல மற்றொருவிதப் பேராபத்தும் இப்போது உலகத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது.


அது காலனி முறையைக் காட்டிலும் படுபாதகமானது எனலாம்.

உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டுச் சகோதரர்களைச் சகோதரர்களே கொலை செய்வதற்கு அதுதான் காரணம். அந்த ஆபத்தின் விளைவாக ஒரு தேச மக்கள் தங்கள் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறார்கள்!

வல்லரசுகளின் பொல்லாத பொம்மலாட்டம்தான் அந்த ஆபத்தாகும்.

பிரம்மாண்டமான சீனாவில் ஒரு கோஷ்டியினரை ருஷ்யாவும் மற்றொரு கோஷ்டியினரைப் பிரிட்டன், அமெரிக்க நாடுகளும் ஆட்டி வைக்காவிடில் சீனாவின் கதி இன்றுள்ளதைப்போல இவ்வளவு மோசமாகியிருக்குமா? நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வல்லரசுகள் அங்கு தலையிட்டிராவிடில்

அவசரம்!


டச்சுக்காரர்கள் ஆதிக்க வெறி பிடித்து இந்தோனேஷ்யா மீது போர் தொடுத்த போது, குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையை எழுப்பு-வதற்குப் பல மாதங்கள் ஆயின.
ஐ.நா. சபை
இந்தோனேஷ்யா
காஷ்மீர் அலங்கோலத்துக்கு யார் பொறுப்பாளி என்பதை நிர்ணயிப்பதற்காக அந்தச் சபை செய்து வரும் ஆராய்ச்சி மூன்று வருஷங்களாகியும் முடிந்த பாடில்லை.
காஷ்மீர்
கொள்ளைக் கூட்டம்
ஆனால், கொரியா யுத்தம் மூண்ட சில மணி நேரத்துக்குள் அதற்குப் பொறுப்பாளி யார் என்பதை ஐ.நா. சபை நிச்சயித்து, உடனே தகுந்த நடவடிக்கை-களையும் கைக் கொண்டு விட்டது!
அக்கிரமம்! அக்கிரமம்! அடிக்காதே. விட்டு விடு.
ஐ.நா. சபை
தெற்கு கொரியா
வடக்கு கொரியா

சியத்தை அடிக்கடி சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். சென்ற வருஷமும் அதற்கு முந்தைய வருஷமும் நமது நாட்டில் மந்திரியார்கள் மரம் நடும் நிகழ்ச்சிகள் நடந்தன. அந்த நிகழ்ச்சிகளின் போட்டோப் படங்களும் பத்திரிகைகளில் வெளி வந்தன. ஆனால் அப்படி நட்ட மரங்களில் 100க்கு 99 விதம் நாலு நாளில் பட்டுப்போய்த் தொலைந்தன. துஷ்ட மரங்கள்! கொஞ்சமாவது தராதரம் அறியாத மரங்கள்! மந்திரிகளும் கலெக்டர்களும் மற்றும் பெரிய பிரபலஸ்தர்களும் தங்களைத் தொட்டு நட்டிருக்கிறார்களே என்பதற்காகவாவது அவை உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டாமா? கேவலம் 'தண்ணீர் விடவில்லை' 'வேலி எடுக்கவில்லை' என்பது போன்ற அசம்பாவிதமான காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொண்டன!

ஆனால் இனி அந்தத் துஷ்ட மரங்களின் கொட்டம் அடங்கி விடும் என்று எதிர்பார்க்கலாம். ஸ்ரீ முன்ஷியிடம் அந்தத் துஷ்டத்தனம் எல்லாம் பலிக்காது. நட்ட மரங்கள் உயிரை வைத்துக்கொண்டே தீரவேண்டும்; வளர்ந்தேயாக வேண்டும். வளர்ந்து வனமாகும் வரையில் ஸ்ரீ முன்ஷி அவற்றைக் கவனித்து வருவார். மற்றவர்களையும் கவனிக்கப் பண்ணுவார்!— இதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்டால், ஏன்? ஸ்ரீ முன்ஷி இந்த மரம் நடும் விழாவுக்குக் கொடுத்திருக்கும் பெயரையே பாருங்கள்! 'வன மஹோத்ஸவம்' என்றல்லவா சொல்லுகிறார்! மரம் நட்டால் போதாது; செடி வைத்தால் போதாது. மரமும் செடியும் வளர்ந்து வனமாகும் வரையில் ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்!— வன மஹோத்ஸவம் என்ற பெயரில் இந்தக் கருத்து அடங்கி யிருக்கிறதல்லவா?

இதற்கு முன்னால் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளைக் காட்டிலும் ஸ்ரீ முன்ஷி இப்போது தொடங்கி யிருக்கும் முயற்சி மகத்தான பெரு முயற்சி என்பதில் சந்தேகமில்லை. அந்த முயற்சி பூரண வெற்றி பெற வேண்டும் என்று அனைவரும் விரும்புவார்கள்.

நாளது ஜூலை மாதம் 2உ முதல் 9உ வரையில் இந்தியா தேசமெங்கும் வன மஹோத்ஸவம் கொண்டாடப் போகிறார்கள். லட்சக்கணக்கான செடிகளை மேளதாள ஜீமூதப் பிரசங்கங்களுடன் நடப் போகிறார்கள். நட்ட செடிகள் எல்லாம் மரங்களாகத் தளிர்த்துச் செழித்து வளர்ந்து கிளைவிட்டுப் படர்ந்து இந்திய நாடெங்கும் சோலைமயமாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

வன மஹோத்ஸவ வாரத்தில் சில தினங்கள் ஸ்ரீ கே. எம். முன்ஷி சென்னைக்கும் விஜயம் செய்கிறார். காஞ்சீபுரம், திருப்பதி முதலிய புண்ய க்ஷேத்திரங்களில் மரம் நடும் விழா நடத்தி வைக்கிறார். ஸ்ரீ முன்ஷி அவர்களுக்கு மனமார்ந்த நல்வரவு கூறுகிறோம்.

வன மஹோத்ஸவ வாரம் முழுதும் ஜனங்கள் கனிகள், காய்கறிகள், கிழங்குகள் இவற்றையே உண்பதாக விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ முன்ஷி வேண்டிக் கொண்டிருக்கிறார். இந்த விரதத்தை எல்லாரும் அனுசரிப்பது சாத்தியமில்லை ஏனெனில் அரிசியைக் காட்டிலும் காய்கனி கிழங்குகளின் விலை அதிகம்; கிடைப்பதும் துர்லபம். ஆகையால் சமூகத் தலைவர்களாகிய சிலர் தான் மேற்படி விரதத்தைப் பூரணமாகக் கைக்கொள்ள முடியும்.

மற்றப் பெரும்பாலான ஜனங்கள் காய்கனி கிழங்குகளைக் கண்ணாலே பார்த்து மனதினால் சிந்தித்து விரதம் அனுஷ்டிக்கலாம். அதற்கு அநுகூலமாக இருக்கட்டும் என்று நமது இந்த இதழ் அட்டையில் ஸ்ரீ முன்ஷியின் படத்தோடு காய்கனி கிழங்குகளின் படத்தையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறோம்.



பிரஸிடெண்ட் ஆப் இந்தியா திருச்சி கிளை ஸ்தாபன மானேஜர் ஸ்ரீ டி. எஸ். நீலகண்டன் அவர்களின் மைத்துனியும், காலம் சென்ற உதவி அக்கௌண்டெண்ட் ஜெனரல் ஸ்ரீ எஸ். அனந்த கிருஷ்ண ஐயர் அவர்களின் குமாரியுமான சௌ. செல்லாவுக்கும் திருவாங்கூர் ஸ்ரீ பி. என். எஸ். ஐயரின் குமாரர் ஸ்ரீ கைலாஸம் எம். எஸ்ஸி., அவர்களுக்கும் சென்ற ஜூன் 11உ மதுரையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து தம்பதிகளுக்கு ஆசி கூறினர்.

[illegible]

மலர் 9 — கல்கி — இதழ் 48

என்ன சேதி?

"பாலை வனம் சோலை வனம் ஆகவேண்டும்"

இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா தேசத்தில் இளம் பிள்ளை ஒருவன் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா! பாலைவனம் என்று சொல்லுகிறார்களே? பூகோளப் புத்தகங்களில் வருகிறதே! அது என்ன? பாலைவனத்தை நான் பார்க்க முடியுமா?" என்று கேட்டான்.

அதற்குத் தகப்பனார், "குழந்தாய்! ஐம்பது, அறுபது வருஷங்களுக்கு முன்னால் இந்தியா தேசத்தில் ராஜபுதனம் முதலிய பிரதேசங்களில் சில பாலைவனங்கள் இருந்தன. அந்தப் பாலைவனங்கள் விஸ்தரித்து வளர்ந்து கொண்டே இருந்தன. கூடிய சீக்கிரத்தில் இந்தியா தேசம் முழுவதுமே ஒரு பெரிய பாலைவனமாக மாறி விடுமோ என்று எண்ணும்படியாக இருந்தது. ஆனால் ஒரு அதிசயத்தைக் கேள்! ஸ்ரீ கன்னையாலால் மாணிக்கலால் முன்ஷி என்பதாக ஒருவர் கிளம்பினார். அவர் ஒரு பெரிய இயக்கத்தைத் தொடங்கினார். நாடெங்கும் வித விதமான மரங்களை நடும்படியாக மக்களைத் தூண்டினார். நட்ட மரங்களுக்குத் தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டும் என்றார். மரங்களை வெட்டக் கூடாது, காடுகளை அழிக்கக் கூடாது என்றார். மலைப் பிரதேசங்களில் வனங்களை உண்டாக்கி வளர்க்க வேண்டும் என்றார். பாலைவனங்களை யெல்லாம் சோலை வனங்களாக மாற்றவேண்டும் என்றார். 'வன மகோத்ஸவம் கொண்டாட வேண்டும்' என்றார். எப்படியோ அவருடைய முயற்சி பலித்து விட்டது. யார் சொல்லியும் கேளாத ஜனங்கள் ஸ்ரீ முன்ஷி சொன்னதைக் கேட்டார்கள். அதன் காரணமாக, இன்றைக்கு இந்தியா தேசத்தில் பாலைவனமே இல்லாமற் போய்விட்டது! ஆப்பிரிக்காவுக்கோ மத்திய ஆசியாவுக்கோ போனால்தான் பாலைவனங்களைப் பார்க்கலாம். இந்தியா தேசத்தில் பாலைவனங்களைப் பார்க்க முடியாது!" என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட அந்த இளம் பிள்ளை ஸ்ரீ முன்ஷி என்பவரிடம் மிக்க பக்தியும் மரியாதையும் கொண்டான். பள்ளிக்கூட பாட புத்தகத்தில் ஸ்ரீ முன்ஷியின் சரித்திரத்தைப் படிக்க நேர்ந்த பிறகுதான் அவனுக்கு அவரிடம் வெறுப்பும் பகைமையும் உண்டாயின!

• • •


மேற்கண்டவாறு இந்தியா தேசத்திலேயே பாலை வனம் என்பது இல்லாமல் அடித்து, நாடெங்கும் ஓங்கி வளர்ந்த சோலைகளும் வனங்களுமாகச் செய்து, சரித்திரப் பிரசித்தி பெற்று, பள்ளிக்கூட பாட புத்தகங்களிலும் இடம் பெறக் கூடிய பெருமையை ஸ்ரீ கே. எம் முன்ஷி அடைந்தே தீருவார் என்று தோன்றுகிறது. அவ்வளவு தீவிரமாக நமது புதிய உணவு மந்திரி கனம் கே. எம். முன்ஷி மரம் நட்டு வனம் வளர்க்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்களெல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா!"

என்று ஒரு தமிழ்ப் பாடல் உண்டு. மரங்கள் பழுப்பதற்கு மட்டும் அல்ல,— அவை நடப்பட்டு வளர்ந்தோங்குவதற்கும் உரிய பருவ காலம் வரவேண்டும் என்பதை இப்போது காண்கிறோம்.

ஏனெனில் இதற்கு முன்னாலும் நாட்டின் நன்மையில் அக்கறையுள்ளவர்களும் தீர்க்க திருஷ்டியுள்ளவர்களுமான தலைவர்கள் பலர் மரம் வளர்ப்பதன் அவ


ஜெமினி
சந்திரலேகா
ஹிந்தி
சென்னை வெலிங்டனில்
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 3 காட்சிகள்: 3, 6-15, 9-30
1948-50ல் பேராதரவுடன் மகத்தான வசூலைப்பெற்றவைகளில்
உலகிலேயே இரண்டாவதாகத் திகழுகிறது......



கல்கி பொருளடக்கம்

மலர் 9 இதழ் 48 | ஜூலை 2 | விக்ருதி ஆனி 18

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


வெளிவில்லை!
அழகு மிளிரும் காட்சிகளில்.........
அறிவு மணக்கும் வசனங்களில்
அர்த்தம் பொதிந்த பாடல்களில்...
அதிசயம் மின்னிய நிகழ்ச்சிகளில்
இதைப்போல் படம் வெளிவில்லை
மாடர்ன் தியேட்டர்ஸ்
மந்திரி குமாரி
கதை, வசனம்- கருணாநிதி
டைரக்ஷன்- டி. ஆர். சுந்தரம் & எல்லிஸ் ஆர். டங்கன்
சென்னை
பாரகன் & பிராட்வே
மற்றும் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது